விலை: ரூபா 20 பக்கங்கள் 28




# உதயன்

18 JUL 2015

சுடர் 30 கதிர் 234 வள்ளுவர் ஆண்டு 2046 ஆடி 2, சனிக்கிழமை 18.07.2015




அன்பர்கள், நண்பர்கள்,
வாடிக்கையாளர்கள்,
வாசகர்கள், விளம்பரதாரர்கள்
அனைவருக்கும்
உதயனின்
ரம்ழான் வாழ்த்துக்கள்

# புலிப் புராணத்துடன் மஹிந்தவின் பரப்புரை

## அநுராதபுரத்தில் நேற்று ஆரம்பம்

கொழும்பு, ஜூலை 18
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் பரப்புரை வழமை போல புலிப் புராணத்துடன் நேற்று ஆரம்பிக்கப்பட்டது. மஹிந்த ராஜபக்ஷ உட்பட கூட்டத்தில் உரையாற்றிய பெரும்பான்மையானோர் புலிகள் குறித்து கருத்து வெளியிட்டு, இனவாதத்தைக் கக்கிப் பரப்புரையை ஆரம்பித்து வைத்தனர்.

**மஹிந்த**
இன்று வடக்கு –கிழக்குக்குச் செல்ல எவரும் அச்சப்படுகின்றனர். வடக்கில் இன்று குற்றச் செயல்கள் அதிகரித்துள்ளன. பெண்கள் வீதியில் இறங்கிச் செல்ல முடியாத நிலைமை



உள்ளது. புலிகள் உருவான காலத்தில் இதுபோன்ற நிலைமைதான் இருந்தது. இவற்றினூடாக நாட்டைப் பிரிக்கப் பார்க்கின்றார்களா என்ற சந்தேகம் எழுந்துள்ளது –என்றார்.

**எஸ்.எம்.சந்திரசேன**
கடந்த ஜனாதிபதித் தேர்தலில் நூற்றுக்கு 85 வீத வாக்குகளை வடக்கு–கிழக்கு புலி ஆதரவாளர்கள் வழங்கினர். மேற்குலக நாடுகளில் பணத்தைப் பதுக்கிவைத்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வாக்குகளைப் பெற்றுத்தான் கடந்த முறை அவர்

பக்கம் 24

## சுவரொட்டிகளை கைப்பற்றினர் பொலிஸார்

யாழ்ப்பாணம், ஜூலை 18
தேர்தல் விதிமுறைகளை மீறிய விதத்தில் தயாரிக்கப்பட்டு ஒட்டுவதற்குத் தயாராக இருந்த ஆயிரக்கணக்கான சுவரொட்டிகளைக் கோப்பாய் பொலி

பக்கம் 24

## மைத்திரி உரையின் மறு ஒளிபரப்புக்கு தேசப்பிரிய தடை

யாழ்ப்பாணம், ஜூலை 18
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த செவ்வாய்க்கிழமை மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக வெளியிட்ட கருத்தை, இலத்திரனியல் ஊடகங்கள் திரும்பத் திரும்ப ஒளிபரப்புவதற்கு தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்

பக்கம் 24

## முதலிடம் பிடித்தது மட்டக்களப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 18
நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்திலேயே அதிகளவிலான கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் போட்டியிடுகின்றன. இதனால் இந்த முறை, மட்டக்களப்பு மாவட்

பக்கம் 24

# வடக்கு-கிழக்குக்கு செல்ல மக்கள் அச்சம்

## புலிகளின் காலத்தில் இவ்வாறான நிலையே இருந்தது என்கிறார் மஹிந்த

கொழும்பு, ஜூலை 18
வடக்கில் இன்று குற்றச் செயல்கள் அதிகரித்துள்ளன. வடக்கு –கிழக்குக்கு செல்வதற்கு ஏனைய பகுதியிலுள்ளவர்கள் அச்சப்படுகின்றனர். புலிகள் உரு வான காலத்தில் இது போன்ற நிலைமைதான் இருந்தது. இவற்றினூடாக நாட்டைப் பிரிக்கப் பார்க்கின்றார்களா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.
இவ்வாறு நேற்று புலிப் புராணத்தைப் பாடி ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் பரப்புரையை ஆரம்பித்து வைத்தார் முன்னாள் ஜனாதிபதியும், குருநாகல் மாவட்ட வேட்பாளருமான மஹிந்த ராஜபக்ஷ.
பயங்கரவாதத்திடமிருந்தும், சர்வதேசத்திடமிருந்தும் நாட்டைப் பாதுகாத்த என்னை துரோகி என்று கூறுபவர்கள், கண்ணாடி முன் சென்று யார் துரோகி என்பதைப் பாருங்கள். ஆடை உடுத்திக்கொண்டு செல்லுங்கள் என்றும் தெரிவித்தார்.
அநுராதபுரத்தில் நேற்று இடம்பெற்ற ஐ.ம.சு. முன்னணியின் முதலாவது தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றியபோதே மேற்கண்டவாறு தெரிவித்த அவர், மேலும் தெரிவித்தவை வருமாறு:–
அன்று நாட்டில் ஓடிய

பக்கம் 24

## வலி.வடக்கின் வீதிகள் சில இன்று மக்கள் பாவனைக்கு

பாதுகாப்பு அமைச்சின் செயலர் கையளிப்பார்

யாழ்ப்பாணம், ஜூலை 18
வலி.வடக்கில் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் மக்கள் பாவனைக்கு இன்னமும் விடுவிக்கப்படாமல் மூடப்பட்டிருக்கும் பாதைகள் சில இன்று மக்கள் பாவனைக்கு கையளிக்கப்படக் கூடும் என்று தெரிவிக்கப்படுகின்றது. பாதுகாப்பு அமைச்சின் செயலாளரினால் அவை மக்கள் பாவனைக் குக் கையளிக்கப்படலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.
பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் யாழ்ப்பாணத்துக்கு இன்று வருகை தரவுள்ளார். இவ்வாறானதொரு நிலையில் யாழ்.மாவட்டச் செயல

பக்கம் 24

## வாய்த் தர்க்கம் விபரீதமானது; கத்திக் குத்தில் இளைஞர் சாவு

சாந்தபுரத்தில் சம்பவம்

கிளிநொச்சி, ஜூலை 18
கிளிநொச்சி, சாந்தபுரம் பகுதியில் நேற்று மாலை உறவினர்களிடையே ஏற்பட்ட தகராறின் போது கத்திக் குத்தில் ஒருவர் உயிரிழந்தார். சாந்தபுரத்தைச் சேர்ந்த காந்தரூபன் (வயது –28) என்பவரே உயிரிழந்தவராவார்.
உயிரிழந்தவரின் மனைவியும் அண்மையில் தீயில் எரிந்து உயிரிழந்தார். உறவினர்கள் இடையே ஏற்பட்ட வாய்த் தர்க்கம் பின்னர் கத்திக்குத்தில் முடிந்துள்ளது. கத்திக் குத்துக்கு இலக்கானவரை

பக்கம் 24

## 115 ஆசனங்களைப் பெற்று ஆட்சியை பிடிக்கும் ஐ.தே.க

அடித்துக் கூறுகிறார் கிரியெல்ல

கொழும்பு, ஜூலை 18
நாடாளுமன்றத் தேர்தலில் 115 ஆசனங்களைப் பெற்று ஐக்கிய தேசியக் கட்சியே ஆட்சி அமைக் கும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் கண்டி மாவட்ட முதன்மை வேட்பாளர் லக்ஷ்மன் கிரியல்ல தெரிவித்தார்.
ஐ.தே.கவின் தலைமையகமான ஸ்ரீகொத்தாவில் நேற்று நடை பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற் கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:–
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தேர்தலில் போட்டியிட்டால்



பக்கம் 24

## தேர்தல் சுவரொட்டியுடன் வவுனியாவில் ஐவர் கைது

வவுனியா, ஜூலை 18
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைச் சேர்ந்த ஐவர் தேர்தல் சுவரொட்டிகளை ஒட்டிக் கொண்டிருந்தபோது நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.
சட்டவிரோத தேர்தல் செயற்பாடுகளைத் தடுக்கும் நோக்குடன் நேற்றுமுன்தினம் அதிகாலை 2.00 மணியளவில் ரோந்து சென்ற பொலிஸ் குழுவினரால் வவுனியா –வேப்பங்குளம் சந்தியில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வேட்பாளர் ஒருவரின் தேர்தல் சுவரொட்டிகளை ஒட்டிக் கொண்டிருந்த 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து சுவரொட்டிகள், வாகனம் என்பன கைப்பற்றப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

பக்கம் 24

## நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாவாராம் மஹிந்த

சொல்கிறார் சந்திரசேன

கொழும்பு, ஜூலை 18
ஓகஸ்ட் மாதம் 17 ஆம் திகதிக்குப் பின்னர் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாவார் என நேற்று அநுராதபுரத்தில் வைத்துக் கூறினார் முன்னாள் அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக செயற் பட அநுராதபுரம் ஸ்ரீ மகா போதியின் ஆசீர்வாதம் கிடைக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பக்கம் 24

## தேடல் – 5 அறிவு பகிர்வு களம் இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 18

செயல் திறன் அரங்க இயக்கம் வாராந்தம் நடத்தி வரும் தேடல் நிகழ்ச்சி வரிசையில் தேடல் – 5 அறிவுப் பகிர்வு களம் இன்று மாலை 3.30 மணிக்கு நல்லூரில் அமைந்துள்ள நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அதில் 'மென்திறன் விருத்தியில் அரங்கு' என்ற தலைப்பில் அ.விஜயநாதன் உரையாற்றவுள்ளார்.

நாடகமும் அரங்கியலும் பட்டதாரியான இவர் யாழ் வேலணை மகா வித்தியாலயத்தில் நாடகமும் அரங்கியலும் ஆசிரியராகக் கடமையாற்றுகின்றார். இவர் பல்கலைக்கழக மட்டத்தில் பல நாடகத்தயாரிப்புக்களில் ஈடுபட்டவர் என்பதுடன் உள சமூகப்பணிகளுக்காக அரங்கை ஒரு கருவியாகப் பயன்படுத்துவது மற்றும் அபிவிருத்திக்கான அரங்கச் செயற்பாடுகளிலும் அனுபவம் உள்ளவர். இருள் அரங்கு என்ற எண்ணக்கருவை பல்கலைக் கழகத்தில் விருத்திசெய்யும் பணியில் யிலும் ஈடுபட்டவராவார்.

இந்தக் கருத்தரங்கில் நாடக ஆர்வலர்கள் மற்றும் மாணவர்களைக் கலந்து கொள்ளுமாறு செயல் திறன் அரங்க இயக்கத்தினர் கேட்டுள்ளனர். (ற)

## பால்மா திருடியோர் பொலிஸிடம் சிக்கினர்

பால்மா வகைகளை திருடி விற்பனை செய்துவந்ததாகக் கூறப்படும் ஐந்து பேரை கல்முனைப் பிரதேசத்தில் கடந்த புதன்கிழமை கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

அம்பாறை மாவட்டத்துக்கான பால்மா விநியோகஸ்தர் ஒருவரின் நிறுவனத்தில் நிறுத்தப்பட்டிருந்த லொறியொன்றை உடைத்து அதிலிருந்து சுமார் ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான பால்மாவைக் கொண்ட பெட்டிகள் கடந்த செவ்வாய்க்கிழமை திருடப்பட்டுள்ளதாக கல்முனைப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இது தொடர்பில் விசாரணை மேற்கொண்டு சந்தேக நபர்களையும் கைதுசெய்ததாகவும் குறித்த சந்தேகநபர்கள் திருடும் பொருள்களை வர்த்தக நிலையம் ஒன்றில் விற்பனை செய்துவந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.(ற–10)



தமிழரின் தனித்துவமான பண்பாட்டையும் மரபுகளையும் பிரதிபலிக்கும் ஆடிப்பிறப்பு தினமான நேற்று கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் ஆடிப் பிறப்பு நிகழ்வுகள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு ஆடிக் கூழும் காய்ச்சப்பட்டது. காலை 11 மணியளவில் ஆரம்பமான இந் நிகழ்வு கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் சத்தியசீலன் தலைமையில் நடைபெற்றது. அதில் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் கலாசார உத்தியோகத்தர் அருள் சந்திரன், கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் பணியாளர்களும் கலந்து கொண்டனர். அத்துடன் ஆடிப்பிறப்பின் மகிமை தொடர்பாகவும், தமிழர்களுடைய சிறப்பு தொடர்காகவும் சிறிய கருத்துரை ஒன்றை கிளிநொச்சி மாவட்ட சைவ மங்கையர் கழக தலைவி சிவனொளிபாதம் பரமேஸ்வரி நிகழ்த்தினார். இதனை தொடர்ந்து அனைவருக்கும் ஆடிக்கூழ், ஆடிக் கொழுக்கட்டைகள் வழங்கப்பட்டன. (ற–21)

## பருத்தித்துறையில் இருந்து மடு ஆலயத்துக்கு பஸ் சேவை

யாழ்ப்பாணம், ஜூலை 18

பருத்தித்துறை பஸ் நிலையத்திலிருந்து தினமும் அதிகாலை 5 மணிக்குப் புறப்படும் இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ் காலை 8.15 மணிக்கு மன்னார் பஸ் நிலையத்துக்குச் சென்று 8.45 மணிக்கு மடு கோயிலைச் சென்றடையும் என்று வடபிராந்திய சாலை முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

அவ்வாறே நண்பகல் 12.30 மணிக்கு மடு கோயிலிலிருந்து புறப் படும் பஸ் மன்னார் பஸ் நிலையத்துக்கு பிற்பகல் 2 மணிக்குச் சென்றடைந்து அங்கிருந்து 2.30 புறப்பட்டு அதேவழி பாதையில் பருத்தித்துறை பஸ் நிலையத்தைச் சென்றடையும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ற–4)

# மது பகிர்ந்தளித்தலை கைவிட்டு செயற்படுக

### அனைத்து வேட்பாளர்களிடமும் கோருகின்றது பவ்ரல் அமைப்பு

கொழும்பு, ஜூலை 18

தேர்தல் சட்ட விதிகளுக்கு மதிப்பளித்து நீதியான தேர்தல் ஒன்றை நடத்துவதற்கு அப்பணிப்புடன் செயற்படுமாறு அனைத்து வேட்பாளர்களிடமும் கோரிக்கை விடுத்துள்ளது 'பவ்ரல்' அமைப்பு.

எதிர்வரும் நான்கு வார காலத்துள் அதிகபட்ச ஆற்றலைப் பயன்படுத்திப் பரப்புரைச் செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தாலும், எந்தக் கட்சியின் கீழ்ப் போட்டியிட்டாலும் தேர்தல் செயற்பாட்டினுள் மதுபானப் பாவனை மற்றும் பகிர்ந்தளித்தலைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்வதாக அந்த அமைப்பின் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

அதேபோன்று தேர்தல் செயற்பாட்டினுள் சுற்றாடலுக்குக் கேடு விளைவிக்கும் பொலித்தீன் உள்ளிட்ட ஏனைய வகைகளைப் பயன்படுத்துவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் தேர்தலை இலக்கு வைத்து பொருள்களை விநியோகிப்பதை தவிர்த்துக் கொள்ளுமாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வன்முறையைக் கைவிட்டு ஆதரவாளர்கள் மோதல்களில் ஈடுபடுவதற்கு நிலவும் இடவாய்ப்புக்களைத் தவிர்த்துக் கொள்ளுமாறும், தேர்தல் செயற்பாடுகளுள் ஏனைய அரசியல் கட்சிகளுக்கு மற்றும் வேட்பாளர்களுக்குத் தமது கருத்தை முன்வைப்பதற்கு இருக்கும் உரிமைக்கு மதிப்பளிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

தேர்தல்கள் ஆனையாளரால் விடுக்கப்படும் பணிப்புரைகள் மற்றும் நியமங்களுக்கு அமைவாக அனுகூலமான விதத்தில் பர்ப்புரைச் செயற் பாடுகளை மேற்கொள்வதோடு நாடாளுமன்ற உறுப்பினரொருவருக்கு அமையும் தகுதியை வாக்காளர்களுக்கு வெளிப்படுத்துமாறும், அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற–22)

# யாழ். போதனா பணிப்பாளர் வவுனியாவுக்கு இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஜூலை 18

யாழ்.போதனா வைத்தியசாலையில் பணிப்பாளராக இருந்த திருமதி பவானி பசுபதிராஜா வருடாந்த இடமாற்ற அடிப்படையில் வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளராகச் செல்கிறார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்திய சாலைக்குப் பணிப்பாளர் நியமிக்கப்படும் வரை வைத்தியசாலையில் தற்போது பிரதிப் பணிப்பாளராக உள்ள மருத்துவர் கே.நந்தகுமாரன் பதில் பணிப்பாளராகக் கடமையாற்றுவார்.

வருடாந்த இடமாற்ற அடிப்படையில் இந்தவருட ஆரம்பத்தில் பணிப்பாளருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ற–4)

# மாற்றுத் திறனாளிகளது விளையாட்டு போட்டி இன்று

கொழும்புத்துறை, ஜூலை 18

யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் 28 ஆவது ஆண்டு நிறைவு விழாவையொட்டிய மாற்று வலுவுள்ளோருக்கான விளை யாட்டுப் போட்டிகள் இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளன.

யாழ்.சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் காலை 7 மணிக்கு ஜெய்ப்பூர் நிறுவனத் தலைவர் டாக்டர் திருமதி ஜெ.கணேசமூர்த்தி தலைமையில் போட்டிகள் நடைபெறவுள்ளன. விளையாட்டுப் போட்டி நிகழ்வில் பிரதம விருந்தினராக ஊவா மாகாண சபை விவசாய அமைச்சர் செனரத் அத்த நாயக்க (மாற்றுத்திறனாளி) கலந்து கொள்ளவுள்ளார்.

வலுவிழந்தோருக்கான சைக்கிளோட்டப் போட்டி, முச்சக்கர வண்டி ஓட்டம் என்பன வீதி நிகழ்வாகவும், சக்கர நாற் காலி ஓட்டம், கரப்பந்தாட்டம், மென் பந்து துடுப்பாட்டம், மேசைப் பந்தாட்டம், பூப் பந்தாட்டம் உட்பட பல உள்ளக விளையாட்டுக்களும் இடம் பெறவுள்ளன.

28 ஆவது ஆண்டு நிறைவு மலர் வெளியீடு ஜெய்ப்பூர் நிறுவன கேட்போர் கூடத்தில் எதிர்வரும் 25 ஆம் திகதி நடைபெறும். (ற)

# டிராக்டரால் மோதி இருவரை கொன்றவருக்கு ஐந்து ஆண்டு கடூழியச் சிறையும், தண்டமும்

மட்டக்களப்பு, ஜூலை 18

சித்தாண்டி இராணுவ முகாம் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த இருவரை டிராக்டரால் மோதி சம்பவ இடத்திலேயே சாவை ஏற்படுத்திய ஒருவருக்கு இரு குற்றச்சாட்டுக்களின் பேரில் தலா ஐந்து வருட கடூழியச் சிறைத்தண்டனையும் தண்டமும் விதித்து தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

குறித்த நபர் மீது தொடரப்பட்ட இந்த வழக்கு விசாரணைகளுக்கு எதிரியான சந்திவெளியைச் சேர்ந்த வேலப்பு சத்தியசீலன், மன்றுக்கு சமுகமளிக்காமல் தலைமறைவாக இருந்து வரும் நிலையிலேயே மேற்படி தீர்ப்பு வழங்கப்பட்டதுடன், எதிரிக்கு பிடியாணையும் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் 2008ஆம் ஆண்டு சித்தாண்டி இராணுவ முகாம் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த கப்டன் றுஸ்திற சமரசிங்க, லான்ஸ் கோப்ரல் லக்ஸ்மன் ஹேரத் ஆகியோர் சந்திவெளி பிரதான வீதியில் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த போது டிராக்டர் ஒன்றை செலுத்தி வந்த எதிரியான வேலப்பு சத்தியசீலன், கவனயீனமாகவும் அசட்டுத் துணிச்சலுடனும் குறுக்காகச் செலுத்தி அவர்களுடன் மோதியுள்ளார்.

இதன்போது மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு இராணுவ புலனாய்வுப் பிரிவினரும் ஸ்தலத்திலேயே உயிரிழந்தனர். குறித்த இருவரது சாவு தொடர்பிலும் எதிரி மீது இரு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு மட்டக்களப்பு மேல்நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

மட்டக்களப்பு மேல்நீதிமன்ற நீதிபதி சந்திரமணி விஸ்வலிங்கம் முன்னிலையில் வழக்கு விசாரணை நடைபெற்று வந்தபோதிலும் எதிரியான வேலப்பு சத்தியசீலன் மன்றுக்கு சமுகமளிக்காது தலைமறைவாக இருந்து வருகின்றார்.

இந்நிலையில் வழக்கு விசாரணையின்போது வழக்குத் தொடுநர் தரப்பில் ஏழுபேர் சாட்சியமளித்திருந்தடுடன். எதிரிமீதான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பால் நிரூபிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து மேல்நீதிமன்ற நீதிபதி சந்திரமணி விஸ்வலிங்கம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை தீர்ப்பு வழங்கினார். இருவருக்கும் சாவை ஏற்படுத்திய இரு குற்றச்சாட்டுக்களின் பேரிலும் எதிரி வேலப்பு சத்தியசீலனுக்கு தலா ஐந்து வருடக் கடூழிய சிறைத் தண்டனையும் தலா 20ஆயிரம் ரூபா தண்டமும் விதித்து தீர்ப்பு வழங்கினார்.

தண்டம் செலுத்தத் தவறின் மேலதிகமாக ஒரு வருடகாலம் கடூழியச் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் என தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, எதிரி தலைமறைவாகியிருப்பதால், அவருக்கு பகிரங்க பிடியாணை பிறப்பித்த நீதிபதி, எதிரியைக் கண்டுபிடித்து மன்றில் முன்னிலைப்படுத்துமாறு ஏறாவூர் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ற–30)



வடமாகாணத்திலுள்ள பாடசாலைகளில் நேற்று ஆடிக்கூழ் காய்ச்சும் நிகழ்வு சிறப்பாக இடம்பெற்றது. வடமாகாண கல்வித்திணைக்களத்தின் அறிவித்தலின்படி பாடசாலைகள் கூழ் காய்ச்சி மாணவர்களுக்கு வழங் கப்பட்டதுடன் ஆசிரியர்கள் அதிபர்களும் உண்டு மகிழ்ந்தனர். நேற்று வவுனியா நெலுக்குளம் கலைமகள் வித்தியாலயத்தில் மாணவர்கள் ஆசிரியர்கள் ஆடிக்கூழ் காய்ச்சும் காட்சி. (ற–108)

# குற்றச் செயல்கள் குறித்து பொதுமக்கள் பொலிஸாருக்குதெரியப்படுத்த வேண்டும்

## யாழ்.பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 18
யாழ்ப்பாணத்தில் நடைபெறும் குற்றச்செயல்கள் குறித்துப் பொலிஸாருக்கு மக்கள் முன்வந்து தெரிவிக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார் யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உதயகுமார வூட்லர்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
மதுபானம் அருந்திவிட்டு வீதிகளில் பயணித்தல், பெண்களுடன் தகாத முறையில் நடந்துகொள்ளுதல் போன்ற நடவடிக்கைகளில் யாராவது ஈடுபட்டால் அவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும். அவ்வாறு யாராவது செயற்பட்டால் உடனடியாக பொலிஸாருக்கு தெரியப்படுத்துங்கள்.
போக்குவரத்து தொடர்பிலும் சீரான நடைமுறை போக்குவரத்து பொலிஸாரினால் மேற்கொள்ளப்படும் – என்றார்.
யாழ்ப்பாண ஓட்டோச் சாரதிகள் சங்கத்துடனான சந்திப்பொன்று நேற்றுமுன்தினம் நடைபெற்றுள்ளது. அதன்போதே யாழ்.பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி இவ்வாறு தெரிவித்துள்ளார். (ற)

## தொற்றா நோய்களுக்கு சனிதோறும் சிகிச்சை

யாழ்ப்பாணம், ஜூலை 18
தொற்றா நோய்களுக்கான சிகிச்சை பருத்தித்துறை வைத்தியசாலையில் ஒவ்வொரு சனிக்கிழமையும் காலை 8 மணி தொடக்கம் மதியம் 12 மணிவரை நடைபெற்றுவருகிறது. இன்றும் நடைபெறவுள்ளது.
தொற்றா நோய்களின் தாக்கம் நடுத்தர வயதினரிடையே அதிகரித்து வருவது அண்மைக் காலங்களில் அவதானிக்கப்பட்டுள்ளது.எனவே அரச ஊழியர்கள் உட்பட அனைத்துப் பொதுமக்களும் வைத்தியசாலையின் சிகிச்சை நிலையத்தில் தங்களைப் பரிசோதித்துப் பயன்பெறுமாறு வைத்தியசாலையின் அத்தியட்சகர் மருத்துவர் வி.ஜெயராஜா தெரிவித்தார். (ற-4)

## போதையில் சாரத்தியம்; சாரதி அனுமதி பத்திரம் தடுப்பு

மதுபோதையில் வாகனம் செலுத்திய கொடிகாமம் வாசியின் சாரதிய அனுமதிப் பத்திரத்தை ஆறு மாதங்கள் நீதிமன்றில் தடுத்து வைக்குமாறு உத்தரவிட்ட நீதிவான் 8 ஆயிரத்து 500 ரூபா அபராதமும் விதித்தார்.
பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது மேற்படி தண்டணை விதிக்கப்பட்டது.
இதேவேளை– சாரத்திய அனுமதிப் பத்திரம் மற்றும் வாகன வரிப் பத்திரமின்றி வாகனம் செலுத்திய மற்றொரு நபருக்கு 4 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.
ரயில் வருகைக்காக கடவை மூடப்பட்டிருந்த வேளையில் கடவையை கடந்து சென்ற நபருக்கு 3 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (ற-9)

## கீரிமலைக் கேணியைப் புனரமைக்க வலி.வடக்கு பிரதேச சபை நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 18
சுனாமி பேரிடரின் போது சேதமடைந்த கீரிமலைக் கேணியைப் புனரமைப்பதற்கு வலி.வடக்குப் பிரதேச சபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. 50 லட்சம் ரூபா செலவில் அங்கு புனரமைப்பு பணிகள் இடம்பெறவுள்ளன என்று சபையின் தவிசாளர் சோ.சுகிர்தன் தெரிவித்தார்.
சுனாமிப் பேரிடரின் போது, கீரிமலைக் கேணி பாதிப்புக்கு உள்ளாகியிருந்தது. அங்கிருந்த படிக்கட்டுக்கள் கடுமையாகச் சேதமுற்றிருந்தன. இதனைப் புனரமைப்பதற்காக 40 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வடக்கு மாகாண சுற்றுலாத்துறை அபிவிருத்தியினூடாக இது மேற்கொள்ளப்படவுள்ளது.
கீரிமலை கேணிக்கு அதிகளவிலான சுற்றுலாப் பயணிகள் தினம்தோறும் வந்து செல்கின்றனர். போதியளவு மலசலகூடங்கள் இன்மையால் சுற்றுலாப் பயணிகள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். அதைக் கருத்தில் கொண்டு புதிய மலசலகூடங்கள் நிர்மாணிப்பதற்காக 10 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்தப் புனரமைப்பு பணிகள் எதிர்வரும் நவம்பர் மாதத்துக்கு முன்பதாகச் செய்து முடிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-5)

## இடைநிறுத்தப்பட்ட பணியாளர்கள் நியமனம் வழங்குமாறு ஆர்ப்பாட்டம்

### தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில்



வலி.வடக்கு, ஜூலை 18
தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றி வந்த பணியாளர்கள் சேவையில் இடைநிறுத்தப்பட்ட நிலையில் அவர்கள் நேற்று தமக்கு நியமனம் வழங்கக் கோரி ஆர்ப்பாட்டம் நடத்தினர்.
கடந்த ஒரு ஆண்டுக்கும் மேலாக ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றிய 35 பணியாளர்களே எந்த வித முன்னறிவித்தலும் இன்றி நேற்று முன்தினம் பணியில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.
பணியாளர்களின் ஆர்ப்பாட்டத்தை அடுத்து வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் தர்மலிங்கம் சித்தார்த்தன், பா.கஜதீபன், திருமதி அனந்தி சசிதரன், அங்கஜன் ஆகியோர் பணியாளர்களைச் சந்தித்துப் பேசினர். இதுகுறித்துத் தாம் நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தனர்.
அதேவேளை, வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் தொலைபேசி மூலம் குறித்த பணியாளர்களுடன் உரையாடினார் என்றும், எனினும் ஆக்கபூர்வமான பதில் எதையும் வழங்காததால் பணியாளர்கள் தமது ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-86, 36)

## அ'புரம் சிறையில் இருந்து தப்பியவர் வவுனியா பொலிஸாரிடம் மாட்டினார்

வவுனியா, ஜூலை 18
அநுராதபுரச் சிறையிலிருந்து கடந்த 25ஆம் தப்பியோடிய கைதி வவுனியா பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.
பல திருட்டு குற்றங்களுக்காக கைது செய்யப்பட்டு அநுராதபுரம் சிறைச் சாலையில் தண்டனை அனுபவித்து வந்த வவுனியா கற்குழியைச் சேர்ந்த ஜெயராசா தர்சன் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். அவரது வீட்டில் வைத்துப் பொலிஸார் அவரைக் கைது செய்துள்ளனர்.
கைதுசெய்யப்பட்டவர் இன்று நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ற-402)



# வெற்றிலை விரட்ட, யானை துரத்த இப்போது தூசு படிந்த வீணையை எடுத்துள்ளார் டக்ளஸ்

## தமிழ்க் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர் கருணாகரம் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஜூலை, 18

வெற்றிலை விரட்ட, யானை துரத்த, தூசு படிந்த வீணையைக் கையில் எடுத்துள்ள டக்ளஸ் தேவானந்தா, ஐந்து மாத கால அரசு தமிழர் பிரச்சினைக்கு தீர்வுகாண நடவடிக்கை எடுக்கவில்லையென்று இன உணர்வோடு முகாரி ராகம் பாடுகின்றார். - இவ்வாறு தெரிவித் துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர் கோவிந்தன் கருணா கரம் (ஜனா).

மட்டக்களப்பு கல்லடி பிரதேசத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வெற்றிலை விரட்ட, யானை துரத்த, தூசு படிந்த வீணையைக் கையில் எடுத்துள்ள டக்ளஸ் தேவானந்தா ஐந்து மாதகால அரசு தமிழர் பிரச்சினைக்கு தீர்வுகாண நடவடிக்கை எடுக்கவில்லையென்று இன உணர்வோடு முகாரி ராகம் பாடுகின்றார். இது இந்த நூற்றாண்டின் மாபெரும் நகைச்சுவை என்பதா, மாபெரும் கோமாளித்தனமென்பதா, மாபெரும் வயிற்றெரிச்சல் என்பதா - என்ன பெயர் வைத்து எப்படி அழைப்பது என்று தெரியாமல் மக்கள் தலையைப் பிய்த்துக் குழம்பிக்கொண்டு இருக்கின்றார்கள். - என்றும் அவர் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஒருவாக்கு, இருவாக்கு என்ற தனி இலக்கத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களை பெற்றது முதல் இன்று அமைச்சர் பதவியில் இருந்து கழற்றப்படும்வரை அமைச்சரவை அமைச்சராக இருந்த டக்ளஸ் அரசியல் தீர்வு நோக்கி ஒரு துரும்பைத்தானும் அசைத்தாரா? தமிழர் தம் இயல்பு வாழ்க்கையில் இராணுவக் கெடுபிடிகளைத் தளர்த்துவதற்குத்தான் தன் அமைச்சர் பதவியை பயன்படுத்தினாரா? ஒன்றுமே செய்யாது பேரினவாதத்துக்கு ஒத்து ஊதிமட்டும் இருந்துவிட்டு இன்று காணாமற்போனோர் ஆணைக்குழுவை கொண்டுவந்ததாக கதைவிடும் டக்ளஸ் தமிழர் தலைமையில் மாற்றம் வேண்டும் என்றும் கூறுகின்றார். முதலில் நடைபெறவுள்ள தேர்தலில் தனது தலையை காப்பாற்றட்டும். பின்பு தமிழத் தலைமை மாற்றம் பற்றி அவர் சிந்திக்கலாம். - என்று தெரிவித்தார். (ந-10)

## கட்டுப்பாட்டை இழந்த மோ.சைக்கிள் மோதி இருவர் காயம்

தென்மராட்சி, ஜூலை 18

வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் முன்னால் சென்றுகொண்டிருந்த சைக்கிளை மோதியதில் பெண் உட்பட மூவர் காயமடைந்தனர். அதில் காயமடைந்த மாணவன் ஒருவர் யாழ். போதனா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை சாவகச்சேரி பெரிய அரசடிச் சந்தியில் இடம்பெற்றது.

சைக்கிளில் பயணித்த பாடசாலை மாணவனான சாவகச்சேரி தாமோதரம்பிள்ளை வீதியைச் சேர்ந்த சுகந்தன் சுடர்நிலவன் (வயது 11 ), சாவகச்சேரி பெரிய அரசடி வீதியைச் சேர்ந்த தம்பையா செல்லம்மா (வயது 72) ஆகியோரே சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். மாணவன் யாழ். போதனா மருத்தவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர் சிறு காயங்களுக்கு இலக்கான நிலையில் மருத்துவமனை வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றுச் சென்றுள்ளார். (ந-9)

## பொது சுகாதார பரிசோதகர்களுக்கு கொடுப்பனவு வழங்க நடவடிக்கை

தென்மராட்சி, ஜூலை 18

யாழ்.மாவட்ட உள்ளூராட்சி சபைகளில் நிர்வாக மற்றும் பதில் கடமையாற்றும் பொது சுகாதார பரிசோதகர்களுக்கு கொடுப்பனவு வழங்குவது தொடர்பாக யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தினர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

அவ்வாறு பணிபுரிவோரின் விவரங்களை அனுப்பி வைக்குமாறு யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், சபைச் செயலாளர்களுக்கு அறிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ந-9)



இலங்கையில் சர்வதேச பிறை அடிப்படையில் ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாள் தொழுகை மற்றும் குத்பாப் பிரசங்கம் என்பன நேற்று வெள்ளிக்கிழமை கொழும்பு, புத்தளம், அக்கறைப்பற்று இகாத்தான்குடி, நீர்கொழும்பு, ஹபுகஸ்தலாவ உட்பட பல பிரதேசங்களில் இடம் பெற்றன. காத்தான்குடி தாருல் அதர் அத்தஅவிய்யா அமைப்பு ஏற்பாடு செய்த நபி வழியிலான புனித ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாள் தொழுகை காலை 6.30 மணிக்கு காத்தான்குடி ஏத்துக்கால் கடற்கரை முன்றலில் நடைபெற்றது. இங்கு பெருநாள் தொழுகையை மௌலவி அஷ்ஷெய்க் அஸ்பர்(பலாஹி) நடத்தியதோடு பெருநாள் குத்பாப் பிரசங்கத்தை பிரபல தென்னிந்திய மார்க்க பிரச்சாரகர் கோவை எஸ். அய்யூப் நிகழ்த்தினார். (ந-10)


## இரவுத் தொழுகைக்குச் சென்ற இளைஞர்கள் மீது வாள்வெட்டு

### குருநாகலில் சம்பவம்

குருணாகல், ஜூலை 18

குருணாகல், கொகரல்ல பொலிஸ் பிரிவின் இப்பாகமுவ பக்மீகொல்ல எனும் இடத்தில் இரவுநேர தொழுகையை நிறைவேற்றச் சென்றுகொண்டிருந்த இளைஞர்கள் மூவர் மீது வாள் வெட்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இரவு மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் இதில் மூவர் காயமடைந்துள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உதவி பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசேகர குறிப்பிட்டுள்ளார்.



அத்துடன். வாள் வெட்டை மேற்கொண்ட சந்தேக நபர் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அவர் ஏற்கனவே கொகரல்ல பொலிஸ் பிரிவின் பன்னல பள்ளி வாசல் மீது தாக்குதல் நடத்திய பிரதான சந்தேக நபர் எனவும் தெரிவித்தார்.

இந்த தாக்குதல் சம்பவத்தில் அவருடன் குடிபோதையில் வந்த கும்பலொன்று ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதுகுறித்து மேலும் தெரிவிக்கப் படுவதாவது:-

அர்ஷாத், சப்ராஸ், அஷ்பாக் என அறியப்படும் மூன்று இளைஞர்கள் இரவு நேர தொழுகை (இஷா), தராவீஹ் ஆகியவற்றை நிறைவேற்ற பக்மீகொல்ல பள்ளிவாசலை நோக்கி சென்றுள்ளனர். இதன் போது விஜேமுனி என அறியப்படும் பன்னல பள்ளிவாசல் தாக்குதலின் பிரதான சந்தேக நபரும் மேலும் இருவரும் வாள்களுடன் குடிபோதையில் வந்து பள்ளிவாசலுக்கு சென்றுகொண்டிருந்த மூன்று இளைஞர்களையும் சரமாரியாக வெட்டியுள்ளனர்.

இதன் போது படுகாயமடைந்துள்ள ஓர் இளைஞர் குருணாகல் போதனா வைத்தியசாலையில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வரும் நிலையில் ஏனைய இ வரும் சிகிச்சைகளின் பின் வீடு திரும்பியுள்ளனர்.

சம்பவத்தையடுத்து கொழும்பு தம்புள்ளை பிரதான வீதியில் ஒ கூடிய பக்மீகொல்ல மக்கள் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களை உடன் கைது செய்யுமாறு வீதியை மறித்து ஆர்ப்பாட்டம் செய்தனர். இதனால் தம்புள்ளை கொழும்பு வீதியில் போக்குவரத்து சுமார் இரு மணி நேரம் வரை பெரிதும் பாதிக்கப் பட்டது.

குருணாகல் மாவட்டத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபரின் உத்தரவுக்கு அமைவாக சம்பவ இடத்துக்குச் சென்ற சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மகேஷ் சேனாரத்ன சந்தேக நபர்களை உடன் கைது செய்ய உத்தரவாதம் அளித்ததைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றனர்.

சந்தேக நபர்கள் தலைமறைவாகியுள்ள நிலையில் மேலதிக விசாரணைகள் தொடர்கின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ந)

## ஊருக்குள் புகுந்த முதலை மடக்கி பிடிப்பு

மட்டக்களப்பு, ஜூலை 18

மட்டக்களப்பு மாவட்டம், ஏறாவூர் எல்லை நகரின் மக்கள் குடியிருப்பு பகுதிக்குள் நுழைந்த பெரும் முதலையொன்றை அப்பகுதி மக்கள் மடக்கிப் பிடித்துள்ளனர்.

மட்டக்களப்பு பகுதிகளில் அண்மைக் காலமாக கடும் வெப்ப கால நிலை நிலவி வருகின்றது. இதனால் ஏற்பட்டுள்ள வறட்சியால் குளங்கள் வற்றிப்போய் காட்சியளிக்கின்றன. அதையடுத்து மக்கள் குடியிருப்புப் பகுதிக்குள் முதலைகளின் ஊடுருவல் அதிகரித்துள்ளன. இதனால் அப்பகுதி மக்கள் மத்தியில் பெரும் பீதி எழுந்துள்ளது.



இந்நிலையில், நேற்றுமுன்தினம் ஊருக்குள் புகுந்த சுமார் 4 அடி நீளமான முதலையை ஊர் மக்கள் ஒன்றிணைந்து பிடித்துக் கட்டி வைத்துள்ளனர். இது தொடர்பில் ஏறாவூர் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், இந்த முதலையை வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

இதற்கு முன்னரும் மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மாவடிவேம்பு பகுதியிலுள்ள கோயில் தீர்த்தக் குளத்திற்குள்ளிருந்து மனிதரையும் நாய்களையும் வேட்டையாடி வந்த பெரும் முதலையொன்று பொதுமக்களால் மடக்கி பிடிக்கப்பட்டு மாவட்ட வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. (ந)

## பிறந்து ஒரே நாளான சிசுவை உரப்பையில் இட்டு புதைத்த கொடூரம்

ஏறாவூர், ஜூலை 18

பிறந்து ஒரே நாளான சிசுவை உரைப்பையினுள் போட்டு புதைத்த கொடூர சம்பவம், ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள நாககன்னி கோயில்வீதி கோரகல்லிமடு கிராமத்தில் இடம் பெற்றுள்ளது. குறித்த சம்பவம் தொடர்பில் 25 வயதுடைய குழந்தையின் தாயார் ஏறாவூர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில், குழந்தையை பிரசவித்த குறித்த பெண், குழந்தையை புதைத்துவிட்டு சென்றுள்ளார். சம்பவம் தொடர்பில் ஏறாவூர் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார், உரைப்பையில் சுற்றிய நிலையில் புதைக்கப்பட்டிருந்த சிசுவின் சடலத்தைக் கண்டெடுத்துள்ளனர்.



பிறந்து ஒரே நாளான இந்த பெண் சிசு மேற்படி இளம் தாயின் குடிசை அமைந்துள்ள மணல் பகுதியில் புதைக்கப்பட்டிருந்ததாக அப்பகுதியின் கிராம சேவகர் நிர்மலா சுரேஷ்குமார் தெரிவித்தார். இந்நிலையில் தாய் கைது செய்யப்பட்டதை அடுத்து, அவர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ந)

# ஐ.தே.கட்சி மட்டுமே நல்லாட்சியை நிறுவும்

## கயந்த கருணாதிலக கூறுகின்றார்



கொழும்பு, ஜூலை 18

நாடு முழுவதும் ஒலிக்கும் நல்லாட்சிக்கான நாடாளுமன்றத்தை நிறுவுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியால் மாத்திரமே முடியும் – என ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது –

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அண்மையில் விடுத்த விசேட அறிவிப்பொன்றில் கடந்த ஜனவரி எட்டாம் திகதி பெற்ற நல்லாட்சிக்கான வெற்றிப் பாதையை இடைநடுவில் தாம் விட்டு விடப்போவதில்லை. அந்த நல்லாட்சிக்கான பாதை எதிர்வரும் ஓகஸ்ட் 17ஆம் திகதியுடன் மீண்டும் ஆரம்பமாகும். அத்துடன், மஹிந்த ராஜபக்ஷவுக்கு நான் ஒருபோதும் ஆதரவு தெரிவிக்கவில்லை எனத் தெரிவித்திருந்தார்.

இந்த நாட்டை ஊழல், மோசடிகளிலிருந்து மீட்டு நல்லாட்சிக்கான வழியை பிறப்பித்த ஐக்கிய தேசியக் கட்சியினாலேயே சிறந்த ஆட்சியை செலுத்தமுடியும். அதற்குச் சிறந்த பிரதமர் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் அதிகாரத்துக்கு வரத்துடிப்பது தோற்றுப்போன மஹிந்த சிந்தனையை முன்னெடுத்துச் செல்லவேயாகும். அவருடைய ஆட்சியில் மக்கள் ஆணையை அவர் எவ்வாறு பயன்படுத்தினார் என இன்று நாட்டு மக்கள் நன்கு அறிந்துள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொருளாதாரக் கொள்கைகள், இந்த நாட்டை பெரும் அபிவிருத்திக்கு இட்டுச்சென்று மக்களின் வறுமையை ஒழிப்பதேயாகும். சர்வதேச தொழிற்சாலைகளை நிறுவுதல், 10 லட்சம் இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பை உருவாக்குதல், 2 ஆயிரத்து 500 கிராமிய பாதைகளை அபிவிருத்தி செய்தல், பல்கலைக் கழகங்களின் அபிவிருத்தி, மாடி வீடு மற்றும் கூலி வீடுகளுக்கு உரிமப் பத்திரம் வழங்குதல், மஹிந்தவின் ஆடம் பரத்துக்காக அலரி மாளிகையில் அமைக்கவிருந்த கேட்போர் கூடத்தை பெந்தோட்டையில் அமைப்பதன் மூலம் மக்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தல் போன்ற நீண்ட அபிவிருத்தியைக் கொண்ட பொருளாதாரக் கொள்கைகளாகும்.

இன்று மக்களும் எம் பக்கம் உள்ளனர். கண்டிப்பாக எதிர் வரும் நாடாளுமன்றத்தேர்தலில்பெரும்பான்மை அரசொன்றை, ஆணையுடன் ஐக்கிய தேசியக் கட்சி நிறுவும் என்பதில் எந்த மாற்றமும் இல்லை – என்றார். (ற)

# மஹிந்த குடும்ப ஆட்சி 17ஆம் திகதி குப்பைக்குள்

## கபீர் ஹாஸிம் தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 18

நாட்டில்மீண்டும்தலைதூக்க முயற்சிக்கும் மஹிந்தவின் குடும்ப ஆட்சியை, ஓகஸ்ட் 17ஆம் திகதி வரலாற்றின் குப்பைத் தொட்டிக்குள் மக்கள் போடுவர் – என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் கபீர் ஹாஸிம் தெரிவித்துள்ளார்.

பொதுத்தேர்தல்தொடர்பில் தாம் வெளியிட்டுள்ள விசேட அறிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது–

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் கிடைக்கும் படுதோல்விக்கு மத்தியில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினர் தடுமாறிக் கொண்டிருப்பது, அவர்கள் வெளியிடும் கருத்துகளின் ஊடாக வெளிப்படுகிறது. நாட்டின் சட்டத்துக்கமைய நாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தார்மீகத்துக்கமைய செயற்படுவதற்கு ஐ.ம.சு.முவுக்கு முடியாதுபோயுள்ளது.

கடந்த 10 வருடங்கள் இடம்பெற்ற சட்டம் இல்லாத தார்மீக மற்றும் ஒழுக்கநெறிமுறைக்கு அப்பாற்பட்ட ஆட்சியால் அவர்களால் சட்டத்தை மதிக்கும் பிரஜைகளாகச் செயற்பட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. வன்முறை அரசியல், வெள்ளைவான் கலாசாரம், ஜனவரி 8ஆம் திகதி மக்களால் நிராகரிக்கப்பட்ட குடும்ப ஆட்சியை மீண்டும் நாட்டுக்குள் கொண்டுவர முயற்சிக்கின்றனர் என்பது தெளிவாகத் தெரிகின்றது.

ஓகஸ்ட் 17ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில், இந்த நாட்டு மக்கள் சரியான முடிவை எடுத்து, தற்போதைய ஒழுக்க மிக்க அரசை முன்னோக்கிக் கொண்டு செல்லவும், ஒழுக்கமற்ற, குண்டர் குழுவை வரலாற்றின் குப்பைத் தொட்டியில் போடவும் நடவடிக்கை எடுப்பர் என்று எமக்கு நம்பிக்கை உள்ளது.– என்றுள்ளது. (ற)

# சிறந்தவற்றை அனுபவிக்கும் மஹிந்த ஓகஸ்ட் 18க்குப் பின் உணர்ந்துகொள்வார்

## அமைச்சர் ராஜித கூறுகின்றார்



கொழும்பு, ஜூலை 18

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை விடவும், சிறந்த வாகனங்கள் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்வுக்கு வழங்கப்பட்டுள்ளதோடு, போதுமான பாதுகாப்பும் வழங்கப்பட்டுள்ளது– இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இவ்வாறு சிறந்தவற்றை அனுபவித்துவரும் அவர், எதிர்வரும் ஓகஸ்ட் 18ஆம் திகதி அனைத்தையும் உணர்ந்துகொள்வார் என்றும் அமைச்சர் ராஜித குறிப்பிட்டார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

மஹிந்த ராஜபக்ஷவுக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்புத் தொடர்பில் ஊடகவியலாளர்களால் இதன்போது கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்குப் பதிலளித்த அமைச்சர், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு தற்போது வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு போதாதா? ஓய்வுபெற்ற அல்லது முன்னாள் ஜனாதிபதி ஒருவருக்குவழங்க வேண்டிய பாதுகாப்புத்தொடர்பாக உயர் நீதிமன்றத் தீர்ப்பு ஒன்று உள்ளது.

அதற்கமைய, அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் ஒருவருக்கு வழங்கப்பட வேண்டிய அனைத்துப் பாதுகாப்பு மற்றும் வரப்பிரசாதங்களும் வழங்கப்பட வேண்டும் என்பதே அந்தத் தீர்மானமாகும்.

இது தொடர்பாக முன்னாள் ஜனாதிபதிமஹிந்த ராஜபக்ஷவே முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமார துங்கவுக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கில் அவரது சட்டத் தரணி ஊடாக விவாதம் செய்து இந்தத் தீர்ப்பைப் பெற்றுக் கொண்டார். இதற்கமையவே மஹிந்த ராஜபக்ஷவுக்கும் போதுமான பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு வழங்கப்பட்ட வாகனங்களைப் பார்க்கிலும் மிகச் சிறந்த வாகனங்கள் மஹிந்தவுக்கே வழங்கப்பட்டுள்ளன. அவற்றை மீளப்பெறுவதற்கான எண்ணம் எமக்கில்லை. ஏனென்றால், அவற்றை மீளப்பெற்றால் பழிவாங்குகிறார்கள் என்றே அவர் கூறுவார். அப்படிச் சிறந்தவற்றை அனுபவித்துக் கொண்டிருக்கும் அவர், எதிர்வரும் ஓகஸ்ட் 18ஆம் திகதி என்ன நடக்கும் என்பதை நினைவுபடுத்திக் கொள்ள முடியும்தானே? – என்றார். (ற)

# ஊழல் குறித்து மஹிந்த அக்கறை கொள்ளவில்லை

## –ரோசி சேனநாயக்க

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது ஆட்சிக்காலத்தில் பெண்கள் மற்றும் சிறுவர்கள் குறித்து ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதனையும் எடுக்கவில்லை என மகளிர் மற்றும் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் ரோசி சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்தே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

மஹிந்த ராஜபக்ஷ தனது அமைச்சர்களின் குற்றங்கள் குறித்து உரிய நடவடிக்கை எடுக்கவில்லை. இவர்கள் நிதி மோசடி மற்றும் ஊழல்களில் ஈடுபட்டிருந்தனர். மத்தல விமானம் நிலையம் மற்றும் நுரைச்சோலை மின்நிலையங்கள் பயனற்றுள்ளன. பெண்கள் கடந்த அரசுக்கு பல்வேறு எதிர்பார்ப்புக்களுடன் வாக்களித்திருந்தனர். ஆனாலும் அவை எதுவும் கிட்டவில்லை. நாட்டில் போசாக்கு குறைபாடு அதிகமாகவுள்ளது. வடக்கில் கிளிநொச்சி மற்றும் மலையகத்தில் அதிகமாகவுள்ளது. இந்த நிலையில்மக்கள்வாழ்வைவளப்படுத்தும்வகையில்மைத்திரிபாலசிறிசேன வெற்றி பெற்றிருந்தார். – என்று அவர் மேலும் தெரிவித்தார். (ற)

# ஐ.தே.கட்சி வென்றாலே நல்லாட்சி தொடரும்

## அமைச்சர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 18


ரணில் விக்கிரமசிங்கவின் தேசிய அரசு என்ற கொள்கைக்கு அமைய ரணில் பிரதமராக உருவாகக் கூடிய அரசு உருவாக வேண்டும் என கல்வி இராஜாங்க அமைச்சர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

எதிர்வரும் பொதுத்தேர்தலை முன்னிட்டு நுவரெலியா மாவட்டத்தில் ஐ.தே.கட்சி சார்பில் போட்டியிடும் கல்வி இராஜாங்க அமைச்சர் வேலுசாமி இராதா கிருஷ்ணனின் தேர் தல் பரப்புரைக் கூட்டம் நுவ ரெலியா ஐபோரஸ்ட் எல்மா தோட்டத்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் மத்திய மாகாண சபை உறுப்பினர்களான ராஜா ராம், சரஸ்வதி சிவகுரு உட்பட தோட்டத் தொழிலாளர்கள் ஏராளமானோரும் கலந்துக் கொண்டார் கள்.

இதன் போது கருத்துத் தெரிவித்த கல்வி இராஜாங்க அமைச்சர், ரணில் விக்கிரமசிங்க அவர்களின் தேசிய அரசு என்ற கொள்கைக்கு அமைய ரணில் பிரதமராக உருவாகக் கூடிய அரசு, நடைபெறவிருக்கும் தேர்தல்மூலம் உருவாக வேண்டும். அதற்கு தோட்ட மக்கள் ஜனவரி மாதம் 8 ஆம் திகதி வாக்களித்ததுபோல் நல்லாட்சிக்கு ஐ.தே. கட்சிக்கே வாக்களிக்க வேண்டும்.– என்றார். (ற)

உதயன் சனிக்கிழமை | ஜூலை 18 | 2015

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



தருபவர்: வித்யா

**மேடம்:** மறைமுகமாக இடையூறு செய்தவரை அடையாளம் காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் உருவாகும் மாறுபட்ட சூழ்நிலையைச் சரிசெய்ய, அதிக கால அவகாசம் தேவைப்படும். சராசரி பணவரவு கிடைக்கும். தியானம் செய்து அமைதி பெறுவீர்கள்.

**இடபம்:** மனதில் புதிய சிந்தனை பிறக்கும். பலநாள் திட்டமிட்ட செயலை நேர்த்தியாக நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற முக்கியஸ்தரின் உதவி கிடைக்கும்.

**மிதுனம்:** அறிமுகம் இல்லாத எவரிடமும், பொது விடயம் பேச வேண்டாம். பணியில் ஆர்வம் கொள்வது நல்லது. தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு நிறைவேறத் தாமதமாகும்.

**கடகம்:** நண்பர்களிடம் முன்னர் பெற்ற உதவிக்கு, நன்றி செலுத்தும் வகையில் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை சீராகும். பணப் புழக்கம் அதிகமாகும். வீட்டு உபயோகப் பொருள்கள் வாங்குவீர்கள்.

**சிங்கம்:** பெரியவர்களின் சொல்லுக்கு மரியாதை தருவது அவசியம். திட்டமிட்ட பணி மட்டுமே வெற்றி இலக்கை அடையும். சக தொழிலதிபர்கள், வியாபாரிகளுடன் கருத்து வேறுபாடு வரலாம். பாதுகாப்புக் குறைவான இடங்களுக்குச் செல்ல வேண்டாம்.

**கன்னி:** குடும்ப உறுப்பினர்கள் பாசத்துடன் நடந்து கொள்வர். திட்டமிட்ட பணி எளிதாக நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி ஏற்படும். சுபநிகழ்ச்சி நடத்தத் திட்டமிடுவீர்கள். பணியாளர்கள் பாராட்டு, வெகுமதி பெறுவர்.

**துலாம்:** பணியில் இடையூறு செய்தவர் விலகிப்போகும் நன்னிலை உண்டு. நடைமுறை வாழ்வில் சில மாற்றங்கள் ஏற்படும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி ஏற்படும். சொத்து வாங்க வாய்ப்புக் கிடைக்கும். சுபநிகழ்ச்சிக்கான அழைப்பு வரும்.

**விருச்சிகம்:** பொறுப்பான செயலால், சிலரால் தவறாக விமர்சிக்கப்படலாம். தொழில், வியாபாரத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். அளவான பணவரவு கிடைக்கும்.


**தனுசு:** பணிகளை பிறர் பொறுப்பில் தரக்கூடாது. ஆடம்பரம் தவிர்ப்பதால் பணம் மிச்சமாகும். தொழில், வியாபாரத்தில் முன்னேற அதிக உழைப்பு அவசியம். குறைந்த வருமானம் கிடைக்கும். இயந்திரப்பிரிவு பணியாளர்கள் பாதுகாப்புடன் இருக்கவும்.

**மகரம்:** மனதில் உற்சாகமும், செயல்களில் சுறுசுறுப்பும் நிறைந்திருக்கும். சிறப்பான பணி ஒன்றைத் தொடங்குவீர்கள் தொழில், வியாபாரத்தில் இருந்த போட்டி குறையும். அரசியல்வாதிகளுக்கு, எதிர்ப்பு விலகி பதவி பெறவாய்ப்பு வரும்.

**கும்பம்:** நல்ல பணிக்குரிய பலன் தேடிவரும். எதிர்காலம் குறித்து நம்பிக்கை கொள்வீர்கள். தொழில், வியாபார இலாப இலக்கு கிடைக்கும். புத்திரர்கள் படிப்பில் முன்னேறத் தேவையான உதவி வழங்குவீர்கள்

**மீனம்:** உங்களுக்குரிய சிரமம் பற்றி பிறரிடம் சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனையில் சிறிது சுணக்கநிலை இருக்கும். அளவான பணவரவு கிடைக்கும். உடல்நலத்தில் கவனம் தேவை.


# திருட்டைத் தடுக்கும் 'கில் சுவிட்ச்'



பல ஆயிரம் ரூபாய் விலைமதிப்புள்ள ஸ்மார்ட் கைபேசிகள் இப்போது ஏராளமாக விற்பனைக்கு வருகின்றன. அதில் விலையின் மதிப்புக்கு ஏற்ப பல்வேறு வசதிகளும் கிடைக்கின்றன.

இந்த வகையில் ஸ்மார்ட் கைபேசியில் கில் சுவிட்ச் என்ற மென்பொருள் வசதியும் இணைக்கப்பட்டுள்ளது. இந்தக் கைபேசியை அதன் உரிமையாளர் வெகு தூரத்தில் இருந்த வாறே பூட்டி வைக்க முடியும். அதேபோன்று போன் திருடப்பட்டு விட்டால் அதை முற்றிலுமாகச் செயல் இழக்க வைக்க இயலும்.

மேலும் இந்தக் கைபேசியைத் திருடிச் செல்பவர்கள் அதைப் பயன்படுத்தவோ, விற்பனை செய்யவோ இயலாது. இந்த நவீன வசதியால் அமெரிக்காவின் பல நகரங்களில் ஸ்மார்ட் கைபேசிகளைத் திருடுவது 50 சதவீதம் வரை குறைந்து இருக்கிறது என்று கூறுகிறது ஒரு புள்ளி விவரம்.




# 16 மொழிகளில் தயார்

செல்வராகவன் இயக்கத்தில் சிம்பு நடித்துவரும் கான் திரைப்படத்தை, சர்வதேச அளவில் 16 மொழிகளில் வெளியிடத் திட்டமிட்டு இருக்கிறார்கள். சிம்பு, கத்ரீன் தெரஸா, டாப்ஸி, ஜெகபதி பாபு உள்ளிட்ட பலர் நடித்து வரும் 'கான்' படத்தை இயக்கி வருகிறார் செல்வராக வன். யுவன் இசையமைத்துவரும் இந்தப் படத்தை அரவிந்த் கிருஷ்ணா ஒளிப்பதிவு செய்து வருகிறார். இந்தப் படத்தின் இரண்டு கட்டப் படப்பிடிப்புகள் முடிவுற்று இருக்கின்றன. விரைவில் மூன்றாம் கட்ட படப்பிடிப்பு தொடங்க இருக்கிறது. கான் படத்தை சர்வதேச மொழிகளில் வெளியிட திட்டமிட்டு இருக் கிறேன். சினிமா ரசிகர்கள் இதை விரும்புவார்கள் என்று நம்பு கிறேன், என இயக்குநர் செல்வராகவன் தனது ருவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார். சர்வதேச மொழிகளில் வெளியீடு குறித்து இயக்குநர் செல்வராகவனை கேட்டபோது, சர்வதேச மொழிகளான ஸ்பானிஷ், போர்ச்சுகீஸ் உள்ளிட்ட 16 மொழிகளில் இந்தப் படத்தை வெளியிட திட்டமிட்டு இருக்கிறேன். சர்வதேச அளவில் வெளியிடும்போது பாடல்கள், காட்சிகள் உள்ளிட்டவற்றை நீக்குவது, சேர்ப்பது தொடர்பானவை அனைத்துமே படம் வெளியாகும் சமயத்தில் முடிவு செ ய்யப்படும், என்று தெரிவித்தார். இந்தப் படத்தை தமி ழில் டிசெம்பரில் வெளியிட திட்டமிட்டு, பணியாற்றி வருகிறது படக்குழு.



# கொஞ்சம் சிரிங்க பாஸ்...

டார்லிங்... என்னை மன்னிச்சிடுங்க! என்னை மறந்துடுங்க! எனக்கு வேற ஒரு பையனோட கல்யாணம் நிச்சயம் ஆகிடுச்சு...
எனக்குத் தெரியும்!
எப்படி..?
இனிமேல் நம்ம காதலுக்கு எங்க அக்கா இடைஞ்சலா இருக்க மாட்டான்னு உன் தங்கச்சி ஏற்கனவே சொல்லிட்டா...!

நீதிபதி: நீ செய்த திருட்டுக்கு என்ன தண்டனை தெரியுமா?
குற்றவாளி: நான் என்னோட திருட்டுத் தொழிலை ராஜினாமா பண்ணிடறேன் எசமான்!
நீதிபதி: என்ன சொல்லுறாய் ?
குற்றவாளி: என்ன எசமான், எல்லாரும் தப்பு செஞ்சா, ராஜினாமாதானே செய்றாங்க!

# தொடரும் ஆபாச மிரட்டல்கள்

ராதிகா ஆப்தே, நயன்தாரா மற்றும் சோனியா அகர்வால் வரிசையில் புதிதாக இணைந்திருக்கிறார் நடிகை ஸ்ரீதிவ்யா, ஸ்ரீதிவ்யாவின் ஆபாசப் படம் ஒன்று வெகுவேகமாக இணைய தளத்தில் பகிரப்பட்டு வருகிறது.

இரு தினங்களுக்கு முன்பு நயன்தாராவின் ஆபாசப்படம் ஒன்று வேகமாக இணையத்தில் பகிரப்பட்டு வந்தது, அந்த விவகாரம் சற்று ஓய்ந்தவுடன் மற்றொரு விவகாரம் பூதாகரமாக உருவெடுத்து ஸ்ரீதிவ்யாவின் வாழ்க்கையில் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

இணையத் தளத்தில் யாரோ ஒருவரின் ஆபாசப்படத்தை எடுத்து அதில் ஸ்ரீதிவ்யாவின் முகத்தை வைத்து மார்பிங் செய்து வெளியிட்டு இருக்கிறார்கள், தற்போது சுனாமியை விடவும் வேகமாக இணையதளத்தில் பகிரப்பட்டு வருகிறது அந்தப் புகைப்படம். நடிகைகளின் புகைப்படங்களை இந்த மாதிரி உருமாற்றி தான் பரப்புகின்றனர் என்று தெரிந்தும் கூட, அதனை அதிக அளவில் மற்றவர்களிடம் பகிர்கின்றனர் மக்கள். மக்களின் இந்த மனநிலையைத் தெரிந்து கொண்டு தொடர்ந்து இதுபோன்ற செயல்களில் ஈடுபடுகின்றனர் சம்பந்தப்பட்டவர்கள்.

இந்தப் புகைப்படம் இணையத்தில் வேகமாக பரவிவருவதைக் கேள்விப்பட்ட நடிகை ஸ்ரீதிவ்யா தற்போது மிகுந்த வருத்தத்துக்கு உள்ளாகியிருக்கிறாராம். பொலிஸார் கண்டு கொள்ளாமல் இருப்பதால் தான் இந்த மாதிரிச் செய்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே செல்கிறது. எனவே இதற்கான சட்டங்களும், தண்டனைகளும் கடுமையாக மாற்றப்படவேண்டும் என்ற கோரிக்கை தற்போது நடிகைகளின் மத்தியில் அதிகரித்துள்ளது.

## சாவகச்சேரி வைத்தியசாலைக்கு முன்பாக வானங்கள்: மக்கள் சிரமம்

தென்மராட்சி, ஜூலை 18
சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்கு முன்பாக ஏ-9 வீதியின் ஓரத்தில் மருத்துவமனை வாசலை அண்டியதாக வாகனங்களை நிறுத்துவதால் மருத்துவமனை அம்புலன்ஸ் வண்டி உட்பட ஏனைய வாகனங்கள் பயணிப்பதற்கு சிரமங்கள் ஏற்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

மருத்துவமனை வளாகத்திலிருந்து வரும் வாகனங்கள் ஏ-9 வீதியில் நுழையும்போது எதிரே வரும் வாகனங்கள் தெரியாத அளவுக்கு வீதியோரத்தில் வாகனங்கள் நிறுத்தப்படுவதால் சிரமங்களை எதிர் நோக்குவதாக பொதுமக்கள் தெரிவித்தனர்.

உணவகங்களில் உணவருந்துவதற்காக நிறுத்தப்படும் வாகனங்கள் உணவகங்களுக்கு அப்பால் நிறுத்தாமல் மருத்துவ மனை வாசலுக்கு நேரே நிறுத்துவதால் அவசர நோயாளர்களுடன் வரும் வாகனங்கள் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் பொதுமக்கள் தெரிவித்தனர். (ற-9)

## கட்சி அலுவலக திறப்பு விழா

தென்மராட்சி,ஜூலை 18
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின்சாவகச்சேரிதொகுதி அலுவலகம் நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9 மணிக்கு நுணாவில் மத்தியில் ஏ-9 வீதியின் அருகில் திறந்து வைக்கப்படவுள்ளது.

கட்சியின் தென்மராட்சி அமைப்பாளரும் சாவகச்சேரி தொகுதி வேட்பாளருமான க.அருந்தவபாலன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் தமிழ் அரசுக் கட்சித் தலைவர் மாவை. சேனாதிராசா உட்பட கட்சி வேட்பாளர்களும் பிரமுகர்களும் கலந்துகொள்ளவுள்ளனர். (ற-9)

## பரிசளிப்பும் நூல் வெளியீடும்

யாழ்ப்பாணம், ஜூலை 18
ஆனைக்கோட்டை றோ.க. த.க பாடசாலையின் பரிசளிப்பு விழாவும் நூல்வெளியீடும் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் திருமதி நவலட்சுமி சந்திரகுமார் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயப் பிரதிக் கல்விப் பணிப் பாளர் பொ.ரவிச் சந்திரன் கலந்து கொள்ளவுள்ளார். (ற-4)

## தச்சன்தோப்பு ரயில் நிலையத்தை சேதப்படுத்தியவருக்கு மறியல்

தென்மராட்சி, ஜூலை 18
நாவற்குளி தச்சன்தோப்பு ரயில் நிலையத்தில் சேதத்தை ஏற்படுத்திய நபரை விளக்க மறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று முன்தினம் உத்தர விடப்பட்டது.

கடந்த செவ்வாய்க்கிழமை மாலை தச்சன்தோப்பு ரயில் நிலையத்துக்குஆள்கள்இல்லாத வேளையில் சென்ற குறித்த நபர் ரயில் நிலைய இரு கழிப் பறைகளின் கதவுகளையும் அலுவலக கண்ணாடிகளையம் அடித்து நொறுக்கி விட்டு தலைமறைவானார்.

பிற்பகல் ரயில் சென்ற பின் னர் வீடு சென்ற உதவி ரயில் நிலைய அதிபர் மாலை 6.30 மணியளவில்திரும்பிவந்தபோது நிலைய மேடையில் கண்ணாடித் துகள்களும் இரத்தக் கறையும் காணப்பட்டதுடன் அலுவலக கண்ணாடி மற்றம் கழிப்பறைக் கதவுகள் உடைக்கப்பட்ட நிலையில் இருப்பதைக் கண்டு சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார். அதனையடுத்து விசாரணைகளை மேற் கொண்ட பொலிஸார் அப் பகுதியைச் சேர்ந்த நபரொருவரைக் கைது செய்து நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தினர்

பொதுச் சொத்துக்களை சேதப்படுத்தியதாக குற்றஞ் சாட்டப்பட்டு தாக்கல் செய் யப்பட்ட வழக்கை விசாரித்த நீதிவான் பொதுச் சொத்துக்களை சேதப்படுத் துவது பாரதூரமான குற்றம் என்பதால் குறித்த நபரை கடுமையாக எச்சரிக்கை செய்ததுடன், எதிர்வரும் 30ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறும் உத்தரவிட்டார்.

இந்த நபரை பிணையில் விடுவிக்குமாறு குறித்த நபர் சார்பில் முன் னிலையானசட்டத்தரணிமனு சமர்ப்பித்த போதிலும் அது நிராகரிக்கப்பட்டது. (ற-9)

## உணவக நடத்துநருக்கு 17 ஆயிரம் அபராதம்

யாழ்ப்பாணம், ஜூலை 18
காரைநகர் புதுவீதியில் சுகாதாரச் சீர்கேடாக இயங்கிய உணவு நிலைய முகாமையாளருக்கு நீதிமன்று 17 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள் ளது.

குறித்த உணவு நிலைய முகாமையாளருக்கு எதிராக பொதுச் சுகாதார பரிசோதகரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

ஊர்காவற்றுறை நீதிமன்றில் குறித்த முகாமையாளர் குற்றத்தை ஒப்புக் கொண்டார். அதனையடுத்து அவருக்கு 17 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (ற-4)

## நுணாவில் கிழக்கு முன்பள்ளிக்கு விரைவில் நிரந்தரக் கட்டடம்

தென்மராட்சி, ஜூலை 18
சாவகச்சேரி நுணாவில் கிழக்குமுன்பள்ளிக்கெனசாவகச்சேரி சிவன் கோவிலுக்கு அருகில் நிரந்தரக் கட்டடம் நிர்மாணிக்கப்படவுள்ளது.

அதற்கான நிதி அரசின் 100 நாள் வேலைத்திட்டத்தின் கீழான கிராமத்துக்கு ஒரு மில்லியன் ரூபா வேலைத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப் படுகின்றது.

கட்டடம் அமைப்பதற்கென அந்தப் பகுதியைச் சேர்ந்த நலன்விரும்பியொருவர் இரண்டு பரப்புக் காணியை வழங்கி யுள்ளதையடுத்து முன்பள்ளிக்கு புதிய கட்டடம் நிர் மாணிக்கபடவுள்ளதாகநுணாவில்கிழக்குகிராம அபி விருத்திச் சங்கச் செயலாளர் ச.நரேந்திரன் தெரிவித்தார்.

நுணாவில் கிழக்கு சர்வசாதன சனசமூக நிலையத்தினரின் வேண்டு கோளின் பிரகாரம் நிதி ஒதுக்கப்பட்ட போதிலும், நிலைய வளாகத்தினுள் கட்டடம் நிர் மாணிக்க இடப்பிரச்சினை நிலவிய நிலையில் நலன் விரும்பியான சிவராஜா என்பவரால் காணி வழங்கப்பட்டது என்றும் அவர் தெரிவித்தார். (ற-9)


## மரண அறிவித்தல்

### சிவசம்பு மகேஸ்வரன்

(ஓய்வுநிலை தபால் அத்தியட்சகர்)



காரைநகர் முல்லைப் பிலவைப் பிறப்பிடமாகவும் No.17, சிவகுரு நாதர்லேன், யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட சிவசம்பு மகேஸ்வரன் 14.07.2015 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவசம்பு-உமாதேவி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற செல்லப்பா-வள்ளியம்மை தம்பதியரின் மருமகனும், கமலாதேவியின் அன்புக் கணவரும், சச்சிதானந்தம், காலஞ்சென்ற ஈஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், மகேஸ்வரி கதிர்காமநாதன், வாசுகிதேவி, கமலசௌவுந்தரி, சறோஜினிதேவி, காந்திநாதன், கோமதி, கங்காதேவி, பவானி ஆகியோரின் அன்புத் தந்தையும், கதிர்காமநாதன் யோகேஸ்வரி, நமசிவாயம், சிவதாஸ், காலஞ்சென்ற நடேசன் மற்றும் இந்திராதேவி, தர்மலிங்கம், இராஜராஜேஸ்வரன், சாந்தகுமார் ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.07.2015) ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு அவரின் முல்லைப்பிலவு காரைநகர் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சாம்பலோடை மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முல்லைப்பிலவு,
காரைநகர்.
077 006 0146

(63230)
(10. 5. 3.6)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### சுந்தரம் செல்வராசா (ரிங்கர் செல்வம்)

யாழ்ப்பாணம், பருத்தித்துறை வீதி முதலாம் ஒழுங்கையைப் (கிடாய்விழுந்தான்) பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரம் செல்வராசா (ரிங்கர் செல்வம்) 14.07.2015 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுந்தரம் - பாக்கியம் தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும் யாழ்/நீராவியடியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - செல்லம்மா தம்பதியரின் மூத்த மருமகனும் கனகாம்பிகை (கமலவேணி)யின் அன்புக் கணவரும் சசிதரா(சுவிஷ்) கோபிராஜ்(1995 காணாமல் போனவர்), தாரணி(அமெரிக்கா), சுபாசினி, தபோதினி (முகாமைத்துவ உதவியாளர் யாழ்/பிரதேச செயலகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் இராசேந்திரம், அருளாளன், இந்திரதேவன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் பழனித்துரை, கனகரத்தினம், காலஞ்சென்ற பொன்மணி ஆகியோரின் சகோதரனும் சகானா, சமீனா, இந்துஷன், அநாகன், அநாஜினி, அநாளன் ஆகியோரின் பாசமிகு பேரனும் நகுலேஸ்வரன், மகேஸ்வரி, யோகாம்பிகை, கல்யாணி, தேவகி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.07.2015) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்.
54/2, முதலாம் ஒழுங்கை (கிடாய் விழுந்தான்) பரு.வீதி, யாழ்ப்பாணம். T.P : 021 222 4349

## மரண அறிவித்தல்

### செல்லக்கண்டு சின்னத்துரை



பண்ணாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லக்கண்டு சின்னத்துரை 16.07.2015 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரையின் அன்பு மனைவியும் லோகநாதன்(ஓய்வு பெற்ற சாரதி பயிற்சி ஆசிரியர் இ.போ.ச) கமலலோஜினி, பத்மலோஜினி, சந்திரலோஜினி, மதிவதனி, லோகறஞ்சினி, தேவலோஜினி ஆகியோரின் பாசமிகு தாயாரும் சிவனேஸ்வரி, காலஞ்சென்றவர்களான சுதந்திரராசா, சண்முகநாதன் மற்றும் கணபதிப்பிள்ளை காலஞ்சென்ற மகேந்திரம் மற்றும் பரிபூரண ஆனந்தன், சிவசுந்தரம் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.07.2015) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பண்ணாகம், சுழிபுரம். (63235)(3.6.9)

தகவல்:
குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### திருமதி மேரிறோசலின்(லில்லி) மரியநாயகம்



தோற்றம் 13 . 01 . 1945

மறைவு 18 . 07 . 2014

அன்பினால் அரவணைத்து ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து
இன்னல்கள் எல்லாவற்றுக்கும் இடம் கொடுத்து
ஈன்றெடுத்த தாயம்மா உங்கள் முகத்தைப் பார்ப்பதற்கு
ஓராண்டு முடிந்தாலும் ஓராயிரம் ஆண்டு முடிந்தாலும்
உங்கள் முகத்தை மறக்க முடியாமல் தவிக்கின்றோம்.

இன்று (18.07.2015) சனிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் பெரியவிளான் புனித யுவானியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன்அழைக்கின்றோம்.


ஆத்தியோலை,
பெரியவிளான்,
இளவாலை.

(63206, 9.7.5)

என்றும் நினைவில்
கணவர் - மரியநாயகம்(மணி)
பிள்ளைகளான - எமில்,நிமல்,சுதா, டனி,
ஜெனி,வினி,சைலினி.

## கிரிக்கெட் வீரரின் பூதவுடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்துமாறு யாழ் மாவட்ட வீரர்களுக்கு BTCL அழைப்பு

பிறப்பு: 21.01.1991 இறப்பு: 05.07.2015



இம்மாத முற்பகுதியில் 05.07. 2015 லண்டனில் இடம்பெற்ற கிரிக்கெட் போட்டியொன்றின் போது பந்து தாக்கியதில் மரணமான பாவலன் பத்மநாதனின் பூதவுடல் இறுதிச் சடங்குகளுக்காக பருத்தித்துறையில் அமைந்துள்ள அவரின் இல்லத்துக்குக் கொண்டு வரப்பட்டு, எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணியளவில் பருத்தித்துறை சுப்பர்மடம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படவிருக்கிறது.

பிரித்தானிய தமிழர் கிரிக்கெட் சம்மேளனத்தின் (BTCL) போட்டித் தொடரின் போட்டியொன்றில் கலந்துகொண்டிருந்தபோது வீசப்பட்ட பந்தொன்று நெஞ்சுப் பகுதியைத் தாக்கியதில் பரிதாபகரமாக மரணமான மானிப்பாய் பரீஷ் (பிரித்தானியா) விளையாட்டுக் கழகத்தின் சகலதுறை ஆட்டவீரரான பாவலனின் இழப்பு உலகளாவிய ரீதியில் அதிர்ச்சியையும், அனுதாப அலைகளையும் ஏற்படுத்தியுள்ளது.

இருபத்தி நான்கு வயதான பாவலன் ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவனாவார். இந்த நிலையில் மீளாத்துயில் கொண்டுள்ள எமது துடுப்பாட்ட வீரன் பாவலனிற்கு இறுதி அஞ்சலி செலுத்துவது எமது தார்மீக கடமையாகும்.

இதன்பிரகாரம், மானிப்பாய் பரீஷ் உள்ளிட்ட யாழ் மாவட்ட கிரிக் கெட் சங்கங்கள், கழகங்கள், முன்னாள், இந்நாள் உறுப்பினர்கள், பாடசாலைகளின் கிரிக்கெட் அணி வீரர்கள் மற்றும் கிரிக்கெட் ஆர்வலர்கள் அனைவரையும் கிரிக்கெட் சீருடை அணிந்து பாவலனிற்கு இறுதியஞ்சலி செலுத்தும்படியும், அன்னாரது இறுதி ஊர்வலத்தில் கலந்து கொள்ளும்படியும் பிரித்தானிய தமிழர் கிரிக்கெட் சம்மேளனம் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறது.

இறுதிக் கிரியைகள்: 19.07.2015 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: காலை 8.00 மணி முதல் 11.00 மணிவரை
இடம்: ஆனந்தபவனம், முதலாம் கட்டை ஒழுங்கை, பருத்தித்துறை.
தகனக் கிரியைகள்: சுப்பர்மடம் இந்து மயானம், பருத்தித்துறை.

பிரித்தானியா தமிழர் கிரிக்கெட் சம்மேளனம்.

077 804 3417
077 668 5086 } POONGUNTHAN

(C/17964) (45.6.3)

தகவல்:
நிர்வாகம் (BTCL )

## போதையில் ரகளை: எண்மருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், ஜூலை 18

மதுபோதையில் பாதையில் பயணித்தவர்களுக்கும் வாகனங்களுக்கும் இடையூறு விளைவித்து அநாகரிகமாக நடந்து கொண்ட குற்றச்சாட்டிலும் பொது இடத்தில் வைத்து மது அருந்திய குற்றச்சாட்டிலும் எண்மர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு யாழ்.நீதிவான் நீதிமன்றில் நேற்றுமுன்தினம்முற்படுத்தப்பட்டனர். அவர்களில் நால்வர் கோப்பாய் பொலிஸாராலும் ஏனைய நால்வரும் யாழ்ப்பாணம் பொலிஸாராலும் முற்படுத்தப்பட்டனர். அவர்கள் ஒவ்வொருவரையும் தலா இரண்டாயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறும் தவறின் ஒரு மாத சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்குமாறும் பதில் நீதிவான் கேசவன் உத்தரவிட்டார். (ற-103)

## போக்குவரத்து விதி மீறியோருக்கு தண்டப்பணம்

தென்மராட்சி, ஜூலை 18

போக்குவரத்து விதிமுறைகளை மீறிய 8 பேருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் கடந்த புதன்கிழமை மொத்தமாக 55 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறும் அரச உத்தியோகத்தர் ஒருவருக்கு அரச செலவாக 3 ஆயிரம் ரூபா செலுத்துமாறும் உத்தரவிடப்பட்டது. கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப் பட்ட வழக்குகள் தனித் தனியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

மதுபோதையில் சாரதிய அனுமதிப் பத்திரம், வாகன வரி, காப்புறுதிப் பத்திரம் இன்றி வாகனம் செலுத்திய சாரதிக்கு 19 ஆயிரம் ரூபாவும், சாரதிய அனுமதிப் பத்திரம், காப்புறுதிப் பத்திரம், வாகன வரி இன்றி வாகனம் செலுத்திய இருவருக்கு தலா 10 அயிரத்து 500 ரூபாவும், போக்குவரத்து விதிமுறை களை மீறிய மேலும் 5 பேருக்கு தலா 3 ஆயிரம் ரூபாவும் அபராதமாக விதிக்கப்பட்டதுடன் அரச உத்தியோகத்தருக்கு அரச செலவாக 3 ஆயி ரம் ரூபா செலுத்துமாறும் உத்தரவிடப்பட்டது. (ற-9)

## கண்ணீர் அஞ்சலி

செல்லையா சந்திரசேகரா (உத்தரவு பெற்ற நில அளவையாளர்)




எமது சங்கத்தின் ஆரம்பகால உறுப்பினரும் சங்கத்தின் வளர்ச்சிக்காக அரும்பாடு பட்டவரும் சங்கத்தின் தலைவர் மற்றும் பதவிகளை வகித்தவருமாகிய செல்லையா சந்திர சேகரா அவர்கள் ஆஸ்திரேலியாவில் மறைந்த செய்தி எமது சங்கத்திற்கு பேரிழப் பாகும்.

அன்னாரின் மறைவுக்கு எமது ஆழ்ந்த இரங்கலைக் தெரிவிப்பதுடன், குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

உத்தரவு பெற்ற நில அளவையாளர் சங்கம் (வடபகுதி)

## ஓராண்டு நினைவலைகள்

### தேவசகாயம் லோறன்ஸ்
(ஓய்வுபெற்ற உள்ளூராட்சி உத்தியோகத்தர்)



தோற்றம் 10.09.1941

மறைவு 18.07.2014

ஒன்றாக நாம் கூடி
நிற்கையிலே ஒன்றுமே
பேசாது நீங்கள் எம்மை
தவிக்க விட்டுச் சென்று
ஓராண்டு ஆகிவிட்டதே
இன்னமும் உங்கள்
நினைவுகளுடன்
கலங்கி நிற்கும்......

15/1, 3ஆம் குறுக்குத் தெரு,
பாஷையூர்,
யாழ்ப்பாணம்.

மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர்
### சி. வல்லிபுரம்
(முன்னாள் மேசன் கட்டடத் திணைக்களம்)

தோற்றம் 20.09.1932

மறைவு 18.06.2015

பார்தனிலே எமைப்பெற்று சிறப்புடனே வளர்த்து
பார்த்து நின்ற எம் தந்தை பறந்து நீங்கள் சென்றதன்னே
பேர் பெற்று வாழ்வதற்கு உழைத்த அறிவுரைகள்
பார்தனில் நாம் வாழும்வரை எமைவிட்டு நீங்காது
நாள்கள் பல சென்றிடினும் நம்மனதில்
நாளாந்தம் உம் கனி நினைப்பு தொடர்ந்து வரு நின்றிடும்
நாடிநீங்கள் சென்ற இடம் எதுவென்று நாமறியோம்
நாமங்கு வாழ்வதற்கு உதவி வேண்டுகின்றோம்

அன்னாரின் மறைவுச்செய்தி கேட்டு நேரிலும் தொலைபேசி ஊடாகவும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் பதாகை மலர்வளையம்,கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், அன்னாரின் இறுதிச்சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

வங்களாவடி,
மட்டுவில் கிழக்கு,சாவகச்சேரி

மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## வீட்டுக்குள் புகுந்து தாக்கியவ்ருக்கு விளக்க மறியல்

தென்மராட்சி, ஜூலை 18

வரணி இடைக்குறிச்சியில் உள்ள வீடொன்றினுள் அத்துமீறி நுழைந்து தாக்குதல் நடத்திய கிளிநொச்சி திருநகர் வாசியொருவரை விளக்க மறி யலில்வைக்கு மாறு சாவகச்சேரி நீதிமன்று கடந்த புதன்கிழமை உத்தரவிட்டது.

கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரித்த நீதிவான் குறித்த நபரை எதிர்வரும் 29 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்கமாறு உத்தரவிட்டார். (ற-9)

## அரச சாராயம் வைத்திருந்தவருக்கு அபராதம்

தென்மராட்சி, ஜூலை 18

அனுமதிப் பத்திரமின்றி அரச சாராயம் உடைமையில் வைத்திருந்த கொடிகாமம் வாசி ஒருவருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் கடந்த புதன் கிழமை 25 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது

கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரித்த நீதிவான் எதிரி குற்றத்தைஒப்புக்கொண்டதையடுத்து 25 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார்.

இதேவேளை சாவகச்சேரி மதுவரி நிலையத்தால் அனுமதிப் பத்திரமின்றி வீட்டில் அளவுக்கு அதிகமாக கள் வைத் திருந்ததாகஇருவருக்கு எதிராக நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்பட்டன. வழக்குகளை விசாரித்த நீதிவான் இருவருக்கும் தலா 3 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதித்தார். (ற-9)

## சாவகச்சேரி லயன்ஸ் கழக ஆண்டு விழா

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் 36 ஆவது ஆண்டு விழாவும் 2015/2016 ஆண்டுக்கான நிர்வாகிகள் பதவியேற்பு நிகழ்வும் நாளை ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு சாவகச்சேரி நகரசபை கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

கழகத் தலைவர் லயன் க.தர்ஸன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் சர்வதேச லயன்ஸ் கழகத்தின் உயர்பீட நிர்வாகிகள் விருந்தினர்களாக கலந்து கொள்ளவுள்ளனர். இந் நிகழ்வில் கழகத்தின் நலனோம்பு திட்டங்களும் மேற்கொள்ளப்படுமென தெரிவிக்கப்பட்டது. (ற-9)

### பழைய மாணவர் பொதுக் கூட்டம்

எழுதுமட்டுவாழ் ஸ்ரீகணேசா வித்தியாலய பழைய மாணவர் சங்க பொதுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் அதிபர் க.சஜேந்திரன் தலைமையில் நடைபெறும். வித்தியாலய பழைய மாணவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளு மாறு சங்கச் செயலாளர் அறிவித் துள்ளார்.(ற-9)

### அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கு கூட்டம்

தென்மராட்சி, ஜூலை 18

தென்மராட்சி பிரதேச அறநெறிப் பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கான கூட்டம் இன்று சனிக்கிழமை மு.ப. 10 மணிக்கு சாவகச்சேரி சிவன் கோவில் வீதியில் உள்ள தென்மராட்சி கலைமன்ற கலாசார மணடபத்தில் இடம்பெறும் என்று அறநெறி ஒன்றியச் செயலாளர் கா.ராஜ்மோகன் அறிவித்துள்ளார்.

அறநெறிப் பாடசாலைகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், தேவைகள் உட்படப் பல ஆராயப்பட விருப்பதால் அனைத்து அறநெறிப் பாடசாலைகளின்ஆசிரியர்களையும் கலந்து கொள்ளு மாறும் அறிவித்துள் ளார். (ற-9)

**For Piano Tuning and Repair**

Contact Mr. Joy Perera reputed piano tuner Who will be in Jaffna on the 19th and 20th of July, 2015

**Contact Number:**
077 536 4643

## தேவை

யாழ் நகர் மத்தியில் அமைந்திருக்கும் கலாசார திருமண மண்டபத்திற்கு முகாமையாளரும், கணக்காளரும் (ஆண்கள்) தேவை. முகாமையாளரின் வயதெல்லை 35 - 45 இற்கு இடைப்பட்டவராகவும் க.பொ.த உயர்தர சித்தியுடன் அனுபவம், ஆற்றல் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும். கணக்காளர் பதவிக்கு 25 - 35 வயத்திற்கு இடைப்பட்டவராகவும், க.பொ.த உயர்தரம் அல்லது கணக்கிய லில் HNDA அல்லது AAT சித்தியடைந்தவராகவும் இருத்தல் வேண்டும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானித்துக் கொள்ளலாம்.

**விண்ணப்பிக்கவேண்டிய முகவரி:**
**விளம்பர இல :- 5071**
**மே/பா உதயன்,**
**361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் .**

**September 12 யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் வகுப்புக்கள்**



Now prepare for your Accademic / General

**IELTS**

BRITISH COUNCIL IELTS Students Registration center

**Speciality of our course**

- Special attention to Advanced Grammar
- 12 Practice tests with explanation
- Unlimited hours for listening practice
- Speaking practice

**வகுப்புக்கள் 20-07-2015 ல் ஆரம்பம்**

**COURSE SCHEDULE**

| | Saturday & Sunday | Mon,Tues,Wed,Thur |
|---|---|---|
| Duaration | 8 Week | 8 Week |
| Time | 8.00 - 11.00 | 8.30 - 11.00, 5.00 -7.00 |

IELTS வகுப்புகள் இப்பொழுது நடைபெறுகின்றன.

**BRITISH COLLEGE OF ENGLISH**

No 192, Navalar Road, Jaffna. (பெருமாள் கோவிலுக்குச் சமீபமாக)
Tel : 021 222 0384 தொ.பே : 0778803887

## கூறுவிலைகோரல்

**நல்லூர் பிரதேச சபை,**

நல்லூர் பிரதேசசபைக்கு உட்பட்ட வீதிகளுக்கு வீதிமின் விளக் குகள் பொருத்துவதற்காக பின்வரும் வீதிமின் விளக்குகளுக்கான கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

1. COBRA LED SET 30W-50W-
2. LED SHEET SHIP MODEL 24W-30W-50W-
3. COBRA SET U BULB MODEL –PIPE 1 1\4" _ 2'X5' CLAMP 2

கூறுவிலைகளில் உத்தரவாதகாலம் குறிப்பிட்டு. அரக்கு முத்திரையிடப்பட்ட உறையினுள் உள்ளடக்கி, உறையின் இடதுபக்கமேல் மூலையில் 'மின்விளக்கிற்கான கூறுவிலை' எனஎழுதி 24.07.2015திகதி வெள்ளிக்கிழமைக்குமுன்னர் கிடைக்கக்கூடியதாக "தவிசாளர்" நல்லூர் பிரதேசசபை, கொக்குவில் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

17.07.2015
நல்லூர் பிரதேச சபை
கொக்குவில்.

ப.வசந்தகுமார்
தவிசாளர்

R
A
K
S
H
A
N
Y
A



**6 ஆவது பிறந்ததின நல்வாழ்த்துக்கள்**

Happy Birthday
18.07.2015

ராஜபவன் சுகன்யா தம்பதியின்
செல்வப்புதல்வி
செல்வி
**ரக்ஷன்யா**
(RAKSHANYA)



தனது பிறந்ததினத்தை கனடாவில் ( TORONTO ONTARIO ) உள்ள தனது இல்லத்தில் அப்பா, அம்மா,அன்புச் சகோதரி அகன்யா,உறவினர், நண்பர்களுடன் குதூகலமாக இன்று (18.07.2015) சனிக்கிழமை கொண்டாடுகின்றார். அவர் பல்கலைகளும் கற்று,பதினாறு செல்வங்களும் பெற்று சிறப்புற பல்லாண்டுகள் வாழ வண்.பண்றிக்கோட்டுப்பிள்ளையாரையும்,நல்லூர் முருகப் பெருமானையும்,மதுரை மீனாட்சியையும் வேண்டி மனதார வாழ்த்துகின்றோம்.





வாழ்த்துவோர் : தாத்தா (மாணிக்கம்), அம்மம்மா (பவா) } இலங்கை
கண்ணாமாமா, பிருந்தாமாமி ( u.k)
"லாவண்யா"
6/4/ கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம், இலங்கை.



**சுவிஸ் நாட்டிலிருந்து வருகை தந்து யாழ் நல்லூரில் பெருமையுடன் வழங்கும்**

**செல்வி தயானந்தன் அஜானா அவர்களின்**

# இசைக்கோலங்கள்



இடம் துர்க்கா மணி மண்டபம், நல்லூர்
காலம் 19.07.2015 ஞாயிற்றுக்கிழமை
நேரம் மாலை 4.00 மணி

**வாழ்த்துரை**
"செஞ்சொற் செல்வர்" கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள்
தலைவர், துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை
தலைவர், சிவபூமி அறக்கட்டளை.

**தலைவர்**
பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்கள்
தகைசார் வாழ்நாள் பேராசிரியர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**விசேட அதிதிகள்**
"சங்கீதகலாநிதி" N.V.M.நவரத்தினம் அவர்கள்
மேனாள் தலைவர், இராமநாதன் நுண்கலைக்கழகம்.
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்
"வீணாகானபாலமேதா" மகாதேவ சோமசுந்தர சர்மா அவர்கள்
தர்மசாஸ்தா குருகுலம், இணுவில்
"சுருதி வேந்தன்", "இசைஞானசுரபி" அ.ஜெயராமன் அவர்கள்

**அணிசெய் கலைஞர்கள்**
வயலின்-"சுருதிவேந்தன்" அ.ஜெயராமன்
மிருதங்கம்-"கலாவித்தகர்" க.நந்தகுமார்
தபேலா-"லயஞானவிநோதன்" சதா வேல்மாறன்
கடம்- "கலாவித்தகர்" ரு.ரவிசங்கர்
முகர்சிங்-"கலாவித்தகர்" சி.செந்தூரன்
நிகழ்ச்சித்தொகுப்பு-"இசைக்கலைமணி" ந.செல்வச்சந்திரன்
நிகழ்ச்சி ஒழுங்கமைப்பு-"ஆன்மீகச்செல்வன்" இ.சாந்தகுமார்

**நிகழ்ச்சி நிரல்**
மங்கல விளக்கேற்றல்
இறை வணக்கம்
செல்வி ச.விஜிதா
வரவேற்புரை
திரு.ப.கணேஸ்
அதிபர், யா/கொட்டடி நமசிவாய வித்தியாலயம்
வாழ்த்துரை
செஞ்சொற்செல்வர் கலாநிதி
ஆறுதிருமுருகன் அவர்கள்
தலைமையுரை
பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கள்
இசைக்கச்சேரி செல்வி. த. அஜானா அவர்கள்
கருத்துரை
சங்கீத கலாநிதி
N.V.M நவரத்தினம் அவர்கள்
வயலின் இசை
செல்வி த.அஜானா அவர்கள்
கருத்துரை
"சுருதிவேந்தன்"
"இசைஞானசுரபி" அ.ஜெயராமன் அவர்கள்
"விசேட லய நாத இசை
செல்வி த.அஜானா அவர்கள்
நாதஸ்வரம்
"ஈழநல்லூர் நாதஸ்வர கான விநோதன்"
P.S பாலமுருகன் அவர்கள்
தவில்
"ஈழநல்லூர் லயஞாபாலன்"
P.S செந்தில்நாதன் அவர்கள்
தபேலா
"லயஞானவிநோதன்"
சதா வேல்மாறன் அவர்கள்
வீணை இசை
செல்வி த.அஜானா அவர்கள்
கருத்துரை
"வீணாகானபாலமேதா"
மகாதேவ சோமசுந்தர சர்மா அவர்கள்
அணிசெய் கலைஞர்கள் கௌரவித்தல்
நன்றியுரை
ஆன்மீகச்செல்வன் திரு.இ.சாந்தகுமார்.

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்** | திரு.திருமதி தயானந்தன் தனஜா குடும்பத்தினர். (சுவிஸ்) | கோண்டாவில் கிழக்கு.

## வீடு வாடகைக்கு உண்டு

53,ராணிவீதி, நல்லூரில் கல்வித்திணைக் களத்திற்கும் சந்தைக்கும் 100Mதொலை வில் சகல வசதிகளுடன் கூடிய புதுவீடு வாடகைக்கு உண்டு. (உத்தியோகஸ்தர் தொடர்பு கொள்ளவும்.)

தொடர்பு: 0770496639 , 077 721 0330 (63050)(3.5.6)

## வீடு வளவு விற்பனைக்கு

அல்லைப்பிட்டி, முதலாம் வட்டாரத்தில் பிரதான வீதிக் கண்மையில் 10 நிமிடங்களில் யாழ் நகரை அடையக் கூடிய தூரத்தில் ஐந்து பரப்புக் காணியில் பயன்தரு மரங்களையும், சகல வசதிகளையும் உடைய திருத்தம் செய்யப்பட்ட அழகிய வீடு வளவு விற்பனைக்குண்டு.

(63176)(9.3) தொடர்பு: 021 205 4016

## ஆடு விற்பனைக்கு

ஜமுனாபாரி, காமேறியன், கலப்பின மறி ஆடு விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 986 6444 (63233)(9.3.7)

## சாரதி தேவை

வட்டுக்கோட்டை பிரதேசத்தில் நிறுவனம் ஒன்றிற்கு ஒப்பந்த அடிப்படையில் வான் ஓடுவதற்கு சாரதி தேவை. கொழும்பு மார்க்கம் தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை.

தொடர்பு: 077 24 8 4360 (63853)(3.5.7)

## விற்பனைக்குண்டு

Net Cafe இல் பாவித்த Computers, Photo copy machine , Air conditions, Reload machine, counter table, Net cafe table , Game table, Glass fitting IBM monitor

தொடர்பு:

077 8588712,0217914379

## பணியாளர்கள் தேவை

அச்சுவேலியில் உள்ள பிரபல உணவகத்தில் சமையல் வேலை, ரொட்டி போன்ற பலகார வகை தயாரிப்பதற்கும் மற்றும் சப்ளை செய்வதற்கும் பணியாளர்கள் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும்.

(17972)(9.3.7) தொடர்பு: 077 273 1040

## காணி விற்பனைக்கு

A9பாதையிலிருந்து20m தூரத்தில் கற்குளி வீதி, சாவகச்சேரியில் அமைந்த வெறுங்காணி(தென்னந்தோட்டம்) உடன் விற்பனைக்கு. 7பரப்பு அளவு.

(63033)(9.3) தொடர்பு: 077 975 0921


## Majestic

Cineplex Jaffna

கார்கில்ஸ் ஸ்குவெயர்

(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)

இப்பொழுது திரையில்




| | |
|---|---|
| மஜெஸ்டிக் ப்ளாட்டினம் | 10.30 a.m |




| | |
|---|---|
| சில்வர் | 10.15 / 2.15 / 6.15 |
| ப்ரொன்ஸ் | 10.30 / 2.30 / 6.30 |

விசாரணை ☎ 021- 2227712

CeylonTheatres
www.ceylontheatres.com

## கணிதம்/ வரலாறு

பெற்றோர்களின் விருப்பத்திற்கேற்ப தரம் 06 - O/L வரையான மாணவர்களுக்கு வீடுகளுக்கு வந்து தனியாகவோ, குழுவாகவோ அடிப்படையிலிருந்து ஏராளமான பயிற்சிகளுடன் கற்பிக்கப்படும்.

தொடர்பு: 075 248 0158 (63232)(9.3.7)

## காணி விற்பனைக்கு

யாழ் வட்டுக்கோட்டை அரச தள வைத்தியசாலைக்கு அண்மையில் பஸ் போக்குவரத்து பிரதான வீதியில் இருந்து 3ஆவதாக அமைந்த 9.36 பரப்புக் காணி விற்பனைக்கு (முழுக்காணியின் விலை 18 லட்சம்) தொடர்பு: 077 368 6142

## Canada வில்

கல்வியுடன் கூடிய வேலைவாய்ப்பு

- O/L உடன் Apply பண்ணலாம்
- 1 வருடத்திற்கு பின் Work Permit

**BANK BALANCE**

வங்கியில் 100% பணவைப்பு

ஒரே நாளில் 3,6,12 முன் பின் உங்கள் Account இல் பணம் போடுவோம்.சகல நாடும்

SHARMILA - 0778895640
TEENA - 0778848519
PRIYA - 0778898568

WORK PERMIT


max adz

## Tourist / Business Visit Visa Settlement / Refusal

வெள்ளவத்தையில் சகல நாடுகளுக்குமான

**Online Visa Applications**

UK, CANADA, USA, AUSTRALIA, SWEDEN, DENMARK, NORWAY, GERMANY, FRANCE, ITALY, NEW ZEALAND, HOLLAND, INDIA



Air Ticketing, Translation, Travel Insurance, Valuation, Dual Citizenship Applications

ஆகியன செய்து தரப்படும்

Computer Sales and Repairs, Computer Accessories, Computer Classes and Training, And IT Project Work Undertaken

**JANA COMPUTER TECH**

No. 385-1/1, Galle Road, Colombo- 06

Tel: 0773 480 494 | E-mail : visaonline5@gmail.com

FLEX Graphix

## Diploma

Conducting Diploma in net working administration win 2008 \2012 environment
Duration - 1 month
ICT , cambridge & edexcel syllabus for your addimission.

Please Contact : 071 984 3334, 077 433 1841

Email- ebpmnewsmedia@gmail.com

## CANADA USA VISA

- ஆகக் குறைந்த தகமை O/L
- குறைந்த செலவில் விண்ணப்பிக்கலாம்
- Part Time Job - Star Hotel களில் வேலைவாய்ப்பு College ஆல் பெற்றுத்தரப்படும்

## ITALY VISA

- 15 நாட்களில் Visa க்கு விண்ணப்பிக்கலாம்
- குறைந்த செலவில் விண்ணப்பிக்கலாம்
- ITALY யின் முக்கிய இடங்களை சுற்றிப்பார்ப்பதற்கான Visa

REENA - 0774303547
RATHA - 0778824524
MEERA - 0770085028

max adz

## மணமகள்கள் தேவை

*75 இல் பிறந்த 12 இல் செவ்வாய் 31 கிரகபாவமுடைய விவாகரத்துப் பெற்ற விசேட வைத்திய நிபுணருக்கு பட்டதாரி மணமகள் தேவை.

*83 இல் பிறந்த 4இல் சூரியனும் செவ்வாயும் 34 பாவமுடைய Msc இஞ்சினியர் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.

*80 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 5பாவமுடைய லண்டன் பிரஜாஉரிமை பெற்ற எக்கவுண்டன் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.

*86 இல் பிறந்த 7இல் செவ்வாய் 77½ பாவமுடைய பிரான்ஸ் பிரஜா உரிமைபெற்ற மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை.(சீதனம் எதிர்பார்க்கப்பட மாட்டாது)

*69 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 22 பாவமுடைய லண்டன் பிரஜா உரிமை பெற்ற எக்கவுண்டன் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை. (சீதனம் எதிர்பார்க்கப்பட மாட்டாது) (63054)(9.3.6)


தொடர்பு: காலக்கண்ணன் திருமண சேவை
இல.62, இராமலிங்கம் வீதி,
077 607 0862



## பழைய மாணவர் சங்கம் - புனித ஹென்றியரசர் கல்லூரி, இளவாலை

## ஹென்றீசியன் சங்கமம் - 18.07.2015

## வருடாந்த ஒன்று கூடலும் சாதனையாளர் கௌரவிப்பும்




இடம் : கல்லூரி வளாகம்
நேரம் - மாலை 6 மணி

பிரதம விருந்தினர் -
வைத்திய கலாநிதி இ.டனராஜ்
(சத்திரசிகிச்சை நிபுணர், முல்லைத்தீவு)

சிறப்பு விருந்தினர்கள் -
எந்திரி. ம.ட.வசீகரன்
(பொறியலாளர், வீதி அபிவிருத்தி திணைக்களம்)

திரு.அ.மோகன்ராஜ்
(கணக்காளர், வலி மேற்கு பிரதேச செயலகம்)

### 2014 இன் சாதனையாளர்கள் - மாணவர்கள்




தேசிய மட்டத்தில் 2ம் இடம் பெற்ற 17 வயதிற்குட்ட உதைபந்தாட்ட அணி



தேசிய மட்டத்தில் 2ம் இடம் பெற்ற உடற்பயிற்சி அணி



மாகாண மட்டத்தில் 1ம் இடம் பெற்ற ஆங்கில நாடகக் குழுவினர்

### 2014 இன் சாதனையாளர்கள் - பழைய மாணவர்கள்




அதிபர் சேவை தரம் 1 ஐ அடைந்த திரு.எஸ்.என். உதயகுமார்



சிறந்த ஆசிரியர் விருது பெற்ற திரு.எஸ்.பீ. பியென்வெனு



தேசிய தொழினுட்ப சேவை (மெய்வண்மை) தரம் 1 ஐ அடைந்த திரு.க.சசிக்குமார்



தேசிய உதைபந்தாட்ட அணி வீரர் திரு.செ. ஞானரூபன்

க.பொ.த உயர்தரத்தில் சிறந்த பெறுபேறு பெற்ற மாணவர்களான

| | |
|---|---|
| செல்வன்.ஏ.சுபராஜ் | செல்வன்.எஸ்.குயிந்தன் |
| செல்வன்.அ.மகீபன் | செல்வன்.ஜே.ஏ.ஜெரோசன் |

க.பொ.த சாதாரண தரத்தில் சிறந்த பெறுபேறு பெற்ற மாணவர்களான

| | |
|---|---|
| செல்வன்.எஸ்.மோகனராஜ் | செல்வன்.எஸ்.கீர்த்தனசர்மா |

**அனைத்து பழைய மாணவர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்**


| | | | |
|---|---|---|---|
| **கஜன் போட்டோ அன் வீடியோ**<br>நிகரை வைரவர் வீதி, சங்கானை<br>தொ.பே : 077-711-1022 | **ஆனந்தன் ஒப்பந்தக்காரர்,**<br>சென் யூட், இளவாலை | **VIPU.COM & FAMILY MART**<br>236, KKS Road, Chunnakam | **SHARON MOTORS**<br>663/3, K.K.S Road, Jaffna |
| **ஒலிம்பியா ஸ்போட்ஸ்**<br>இல.6 ஜீம்மா பள்ளிவாசல் லேன், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.<br>தொ.பே.021 222 3490 | **ரேஸ்ரா.....ஆ....மிக்ஷர்**<br>இல. 39, கலாசாலை வீதி, திருநெல்வேலி கோப்பாய்<br>தொ.பே: 021 320 6870 | **ACX COURIIER & CELLULAR CENTRE**<br>No.6 New Market, Jaffna (upstairs)<br>T.P: 021 222 6151, 077 751 9440 | **பொன்னரசி நகையகம்,**<br>79, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்<br>தொ.பே. 021 222 7648 |

| | | |
|---|---|---|
| **கிருபா லேணர்ஸ்**<br>226,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.<br>021 222 4353 | **சுந்தர்சன்**<br>யாழ்வீதி, மானிப்பாய்<br>தொ.பே.021 225 5136 | **அபிமிக்சர்**<br>சென்.அன்ரனிஸ்லேன், பண்டத்தரிப்பு<br>தொ.பே.077 991 7893 |


## துயிலெழுப்ப உதவும் புதிய அலார செயலி

ஸ்மார்ட் கைபேசிக்காக பல வகை துயிலெழுப்ப உதவும் அலார செயலிகள் இருக்கின்றன. இவற்றை எல்லாம் ஏமாற்றி விட்டு நாம் மீண்டும் தூங்கச் சென்றுவிடுவோம். ஆனால் தற்போது வந்திருக்கும் புதிய அலார செயலி, உங்களை அப்படி மீண்டும் தூங்குவதற்கு எளிதில் அனுமதிக்காது. அதனால் தான் இந்த செயலி தன்னைத் தானே 'எரிச்சலூட்டக்கூடிய துயிலெழுப்பும் செயலி' என வர்ணித்துக்கொள்கிறது. இந்த அப்பிளிகேஷன் பெயர் Alarmy. அலாரம் ஒலித்த பின் எளிதாக இதனை நிறுத்திவிட முடியாது. போனில் ஒரு ஒளிப்படத்தை எடுத்த பின் தான் இது மௌனமாகும். அது வரை இது ஒலித்துக் கொண்டே இருக்கும்.

இதனால் தான் இந்த அப்பிளிகேஷன் தன்னை 'எரிச்சலூட்டக்கூடிய துயிலெழுப்பும் செயலி' என்று சொல்லிக் கொள்கிறது. அலாரமும் வைத்து விட்டு அதை அவர்களுக்கே தெரியாமல் அணைத்து விட்டுத் தூங்குபவர்களுக்காகவே இந்தச் செயலி உருவாக்கப்பட்டுள்ளது.




## தாமாக இயங்கும் கார்களால் சூழலுக்கு ஆபத்தா?



கூகுள் நிறுவனம் உட்பட மேலும் சில கார் வடிவமைப்பு நிறுவனங்கள் ஓட்டுநர் இன்றி இயங்கக்கூடிய கார்களை வடிவமைத்துள்ளன.

இந்தக் கார்கள் தற்போது பரிசோதிப்பில் உள்ள நிலையில், இவற்றினால் சூழலுக்கான பாதிப்பு 90 சதவீதம் இல்லை என ஆய்வு ஒன்றின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. குறித்த ஆய்வை அமெரிக்காவிலுள்ள Berkeley Lab நிறுவனம் மேற்கொண்டுள்ளது. இதில் 2030 ஆண்டளவில் பாவனைக்கு வரவுள்ள முற்று முழுதாக இலத்திரனியல் தொழில்நுட்பத்தைக் கொண்ட தானியங்கிக் கார்கள் மூலமே சூழலுக்கு தீங்கு இல்லை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதேவேளை தற்போது சோதனையில் இருக்கும் தானியங்கிக் கார்கள் பகுதியாக எரிபொருளில் இயங்கக்கூடியவை என்பது குறிப்பிடத்தக்கது.

## அறிமுகமாகும் ASUS ZenPad 8



புதிய தொழில் நுட்பத்தைக் கொண்ட டேப்லட்டை பட்ஜெட் விலையில் எதிர்பார்ப்பவர்களுக்காக ASUS நிறுவனம் ZenPad 8 எனும் டேப்லட்டை அறிமுகம் செய்கின்றது. 200 டொலர்கள் பெறுமதியான இந்த டேப் லட், 8 அங்குல அளவு, 2048 x 1536 Pixel Reso lution உடைய தொடுதிரையைக் கொண்டுள்ளதுடன், 1.2GHz வேகத்தில் செயலாற்றக்கூடிய QuaddCore RockchipdMade Intel x3dC3200 Processor, பிரதான நினைவகமாக 1GB RAM, மற்றும் 16GB சேமிப்பு நினைவகம் என்பவற்றைக் கொண்டுள் ளது. இவை தவிர 5 மெகாபிக்சல்களைக் கொண்ட பிரதான கமெரா, 2 மெகாபிக்சல்களைக் கொண்ட வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற் கான கமரா என்பனவும் இணைக்கப்பட்டுள்ளன.

## ஆடிப்பிறப்பை முன்னிட்டு நடத்தப்பட்ட கலை, இலக்கிய போட்டிகளின் முடிவுகள்







வவுனியா, ஜுலை 18

வவுனியா பிரதேச செயலகத்தால் ஆடிப் பிறப்பை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட கலை இலக்கியப் போட்டிகளின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இந்தக் கலை, இலக்கியப் போட்டிகள், வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் அனுசரணையுடன், வவுனியா மாவட்ட பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்டது என்று பிர தேச செயலக கலாசார உத்தியோ கத்தர் இ. நித்தியானந்தன் தெரி வித்தார்.

வெற்றி பெற்ற மாணவர்களின் விவரம் வருமாறு –

### பேச்சுப் போட்டி

முதலாம் இடம் – சி. கிரிவாசன், வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம்.

இரண்டாம் இடம் – கு. குலவிழி, வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி.

ஜெ. ரிக்ஹிகா – வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்.

### கவிதை பாடல் போட்டி

முதலாம் இடம் – சி. சுலக்சிகா, வவுனியா நெளுக்குளம் கலைமகள் மத்திய மகா வித்தியாலயம்.

இரண்டாம் இடம் – தே. டிலானி, வவு னியா ஓமந்தை மத்திய கல்லூரி.

ம. துவர்ணியா – வவுனியா சைவப் பிரகாச மகளிர் கல்லூரி.

### தனிப்பாடல் போட்டி

முதலாம் இடம் – இ.துஸ்யத்தி, வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி.

இரண்டாம் இடம் – த. சுபர்ணா, வவுனியா விபுலானந்தாக் கல் லூரி.

மூன்றாம் இடம் – ம. புஸ்பகுமாரி, வவுனியா நெளுக்குளம் கலைமகள் மத்திய மகா வித்தியாலயம்.

### கட்டுரைப் போட்டி

முதலாம் இடம் – கி. தர்சிகா, வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம்

இரண்டாம் இடம் – சு. கிருபாலினி, வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி

மூன்றாம் இடம் – ஜெ. சதுர்சிகா, வவுனியா விபுலானந்தாக் கல்லூரி. (ற)

## 2100 ஆம் ஆண்டில் கடல் மட்டம் உயரும்

### விஞ்ஞானிகள் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஜுலை 18

2100 ஆம் ஆண்டில் கடல் மட்டம், தற்பொழுது உள்ளதை விடவும் 6 அடி 6 அங்குலத்தால் அதிகரிக்கவுள்ளது என்று விஞ்ஞானிகள் எதிர்வு கூறியுள்ளனர்.

அமெரிக்காவில் சில வாரங்களுக்கு முன்னர் நடந்த மாநாடொன்றில் இது குறித்துத் தெரிவிக்கப்பட்டதாக வடமாகாண கடல்வள, போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்தார்.


இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது–

கடல் வளப் பாதுகாப்பு ஏன் அவசியம் எனும் தொனிப்பொருளில் இந்த மாநாடு இடம்பெற்றது. அதில் பங்குபற்றும் வாய்ப்புக் கிடைத்தது. அதில் 16 நாடுகள் கலந்த கொண்டிருந்தன. 2100 ஆம் ஆண்டளவில் கடல் மட்டம் தற்போது உள்ளதை விட 6 அடி 6 அங்குலம் அதிகரிக்கவுள்ளதால் அதனைப் பாதுகாக்க வேண்டியது ஒவ்வொரு நாட்டினதும் கடமை என்றும் அந்த மாநாட்டில் வலியுறுத்தப்பட்டது – என்றார். (ற–4)



மறைந்த மெல்லிசை மன்னர் எம்.எஸ்.விஸ்வநாதனுக்கு நோர்வூட் வாத்தியக் கலைஞர்களின் ஏற்பாட்டில் அஞ்சலி நிகழ்வு நோர்வூட் கீழ்பிரிவு தோட்ட பாலர்பாடசாலையில் நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்றது. இந்த நிகழ்வில் அமரர் எம்.எஸ். வியின் உருவப்படத்துக்கு மலர்மாலை அணிவித்து விளக்கேற்றி அன்னாரது இசையமைப்பில் ஒலித்த பாடல்களை இசைத்து அஞ்சலி செலுத்தினர். (ற)

# புனித றமழான் பெருநாள் சிறப்பிதழ்-18.07.2015



## ஈதுல் பித்ர் தின வாழ்த்துச் செய்தி

இன்றைய தினத்தில் ஈதுல் பித்ர் பண்டிகையை கொண்டாடும் இலங்கை வாழ் மற்றும் அனைத்துலக முஸ்லிம் மக்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.


கடந்த மாதமானது நோன்பு, ஆன்மீக மலர்ச்சி மற்றும் உதவி தேவைப்பட்டோருக்கு உதவி புரியும் காலமாக இருந்தது. ஈதுல் பித்ர் பண்டிகையின் மூலம் பரிசுத்தம், புனிதத்தன்மை மற்றும் ஆன்மீக ரீதியான தூய்மை ஆகியவை மீளப் பெற்றுக்கொள்ளப்படுவதுடன், மனிதாபிமான ரீதியில் எம்மை ஒற்றுமைப்படுத்தும் விழுமியங்களும் பாதுகாக்கப்படுகின்றன.

உலக மதங்களின் செழிப்புமிக்க மரபுரிமையை இலங்கை அடைந்திருப்பதால் நிலையான நல்லிணக்கத்தையும், ஒற்றுமையையும் நோக்கிச் செல்கின்ற எமது தேசியத்தில் இஸ்லாம் மதம் எவ்வாறு பங்களிக்கின்றது என்பதை ஈதுல் பித்ர் பண்டிகை எமக்கு நினைவூட்டுகின்றது.

இன்ஷா அல்லாஹ். இலங்கை வாழ் முஸ்லிம் மக்களின் மகிழ்ச்சிகரமான ஈதுல் பித்ர் பண்டிகைக்கும் பாதுகாப்பு மிக்க சௌபாக்கியமான எதிர்காலத்துக்கும் எனது நல் வாழ்த்துக்கள்.

ஈத் முபாரக்

**இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின்**
**ஜனாதிபதி**
**கௌரவ மைத்திரிபால சிறிசேன.**




## முதலமைச்சர் அவர்களின் றமழான் வாழ்த்துச் செய்தி

இன்றைய தினம் றமழான் பண்டிகையைக் கொண்டாடுகின்ற அனைத்து முஸ்லிம் மக்களுக்கும் என்னுடைய இதயபூர்வமான றமழான் பண்டிகை வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். ஏழைகளின் பசியை உணர்வதற்காக உபவசாசம் முஸ்லிம்களுக்கு இறைவனால் விதியாக்கப்பட்ட கடமை என்று அறிகின்றேன். உண்மையில் இது ஒரு மகத்தான விடயமே. பொறுமையாக நோன்பினை நோற்று, இறைவனின் வழிகாட்டல்களை கடைப்பிடித்து வணக்க வழிபாடுகளில் முஸ்லிம்கள் ஈடுபடுகின்றார்கள். ஒரு கட்டுக்கோப்பான சமூகத்தை ஏற்படுத்துவதற்கு இது சிறப்பான முன்மாதிரியாகும்.

எமது பிரதேசத்திலே மிக நீண்டகாலமாக அமைதியின்மை நிலவியது, சமூகங்களுக்கிடையிலான நல்லிணக்கம் சீர்குலைந்திருந்தது. ஆனால் இப்போது ஒரு நல்ல நிலை மெல்ல மெல்ல உருவாகிக் கொண்டிருக்கின்றது. எமது பிரதேசத்திலே வாழ்வுரிமையைக் கொண்டிருக்கின்ற முஸ்லிம்களும் அத்தகைய நல்ல நிலைக்கு பங்களிப்புச் செய்யவேண்டும். எல்லா மக்களும் ஒன்றிணைந்து எமது பிரதேசத்தின் முன்னேற்றத்திற்காக உழைக்கவேண்டும். எமது பிரதேசம் முன்மாதிரியான இன ஐக்கியத்தினை அல்படுத்துகின்ற வகையில் கட்டியெழுப்பப்படவேண்டும், இதற்காக இந்த றமழான் பண்டிகை தினத்தில் எல்லோரும் இறைவனைப் பிரார்த்திப்போமாக.

**சி.வி.விக்னேஷ்வரன்**
**முதலமைச்சர் வடக்கு மாகாணம்.**



## சிறப்பான எதிர்காலத்துக்காக பிரார்த்திப்போம்

புனித ஈதுல் பித்ர் பெருநாள் கொண்டாட்டங்களில் ஈடுபட்டுள்ள சகோதர சமூகங்களுடன் இணைந்து வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

நோன்பிருந்து வணக்க வழிபாடுகளில் ஈடுபட்டு றமழான் மாதத்தைப் புனிதமாகப் பேணி இறைவனின் கட்டளைகளை நிறைவேற்றிய இந்தப் புனித மாதத்தைக் கடந்தும், இறையருள் பெருக ஒழுகும் வழி தொடரப் பிரார்த்திப்போம்.

தியாகமும் கருணையும் நிறைந்த சமூக ஒற்றுமையில் நாம் மகிழவும் எல்லா நலமும் சேரவும் அருளுறவு பெருகும் நல்ல செயற்பாடுகளில் இணையவும் பிரார்த்திப்போம்.

நாம் சந்தித்த துன்ப துயரங்களையும் சவால்களையும் வென்றுயரும் நல்லாட்சியை எமக்கு வழங்கவும் பரஸ்பர அன்புப் பகிர்வும் புரிந்துணர்வும் பெருகும் நடத்தையினால் இறையன்பை விளக்குமுறச் செய்யும் வகையிலும் நோன்பின் மகிமையை வெளிப்படுத்தி வாழ்வோம் சிறப்பான எதிர்காலத்திற்காகப் பிரார்த்திப்போம். புனித ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாள் வாழ்த்துக்களை மீண்டும் தெரிவித்து இன்புறுகின்றோம்.

எல்லாப்புகழும் இறைவனுக்கே.

**ஈ.சரவணபவன்**
**(முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்**
**தமிழ் தேசிய கூட்டமைப்பு)**





**CCTV, Network Cabling, Smart Home Installation, Copper Cabling & Wireless**

~CCTV Camera Installation
~Cloud Configuration
~Mobile&Remote Monitoring
~DDNS Configuration
~Backup & Access Permission
~DVR/NVR &Hard disk Configuration
~IP Camera Installation & Configuration


~Cabling for CCTV Camera
~Structured Network Cabling
~Wireless Router Installation & Configuration
~Smart Home Installation
~Copper Cabling with practicals


*Real Equipments இனால் பயிற்சி வழங்கப்படும்
*Win SYS இனால் அங்கிகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்

**Hello : 076-7013060**

WinSYS NETWORKS
77,Clock Tower Road,Jaffna
www.winsys.lk | info@winsys.lk
021-4926222

Second Batch Starts in July 31st
Limited Students Only

## ஈத் பெருநாள் இனிய வாழ்த்து

கண்ணியம் மிக்க புண்ணிய மாதமாம் ரமழான் மாதத்தை காத்திருந்து அடைந்த நாம், நோன்பு வையுங்கள் நீங்கள். உடல் ஆரோக்கியம் பெறுவீர்கள் என்ற எங்கள் கோமகன் நபிபெருமானார் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர் தம் வாக்கிற்கமைய எங்கள் ஆரோக்கியத்தையும் இறை பக்தியையும் பேணிக்கொள்வதில் ஆவலாயுள்ள நாம் அதனை நிறைவேற்றி நிம்மதி கண்டு அதன் மகிழ்வைக் கொண்டாட இன்று தயாராகி உள்ளோம். இவ் வேளையிலே ஒருமைப்பாட்டின் நிலையதை எடுத்தேகி அனைவரும் ஒற்றுமையுடன் செயற்பட்டு ரமழான் தந்து சென்ற பாடங்களை மனதில் பதித்து வாழ்ந்து எமது சீர் குலையாத வாழ்வாய் எம் வாழ்வையமைத்து அண்டை அயலாரை நேசித்து நெருங்கி வாழ இந்த நாளில் எம் முஸ்லிம் சமூகம் சார்பாக வாழ்த்துகின்றேன்.

வல்லவனாம் அல்லாஹ் எம் அனைவரையும் காத்து நல்லருள் பாலிக்க துஆ இறைஞ்சுகின்றேன் இந் நந்நாளில்.

**அல்ஹாஜ் மௌலவி**
**ஏ.எம்.ஏ.அஸீஸ்(ஹாஸ்மி)**
**(யாழ்/கிளி மாவட்ட உலமா சபை தலைவர்)**



## மக்கள் மனதுகளின் வெற்றித் திருநாள்

இன்றைய தினம் ஈகைத் திருநாளாம் நோன்புப்பெருநாளைக் கொண்டாடுகின்ற அனைத்து முஸ்லிம் மக்களுக்கும் என்னுடைய றமழான் பண்டிகை வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன். "ஈத் முபாரக்– ஈதுன் சஈத்", ரமழான் மாதத்தில் முப்பது நாளும் இறைவனுக்காக பகல் முழுவதும் நோன்பிருந்த அனைவரும் ஷவ்வால் மாதத்தின் முதல்நாளை ரமழான் பண்டிகையாக கொண்டாடுகின்றனர்.

அதிகாலையில் எழுந்து குளித்து புத்தாடை அணிந்து பள்ளிக்கு சென்று இறைவனை தொழுவதும், அதன் பின்னர் இறைவனின் புகழ்கூறுகின்ற தக்பீரை ஒலிக்கச் செய்வதும் இந்த நல்ல நாளின் சிறப்புகளாகும். உற்றார் உறவினர்களைத் தரிசிப்பதும், இறையடி எய்திய உறவினர்களின் அடக்கஸ்த்தலங்களைத் தரிசிப்பதும் இந்த நல்ல நாளின் சிறப்புகளே. நோன்பிருந்தவர்கள் அனைவரும் ஏழை எளியவருக்கு பித்ரா என்னும் தானதர்மங்களை வழங்கி மகிழ்ச்சியுறுகிறார்கள். ஜகாத் என்னும் தர்மத்தை முறைப்படி ஏழை எளியவர்களுக்கு வழங்குகிறார்கள். இவ்வாறு இது பல்வேறுவகையில் கொடைகளோடு தொடர்புறுகின்றமையால் ஈகைத்திருநாள் எனவும் அழைக்கப்படுகின்றது.

மகிழ்ச்சியினை மக்கள் மனதுகளின் ஏற்படுத்தும் இத்தகைய நல்ல நாளில் நாம் அமைதியையும், சமாதானத்தையும் பிரார்த்திப்போமாக. அனைவருக்கும் மீண்டும் ஒருதடவை என்னுடைய ஈகைத்திருநாள் வாழ்த்துக்களைக் கூறிக்கொள்கின்றேன்.

**கௌரவ அ. அஸ்மின்**
**வடக்கு மாகாணசபை உறுப்பினர்**


அனைவருக்கும் எமது றம்ழான் நோன்புப் பெருநாள் வாழ்த்துக்கள்
நோன்புப் பெருநாள் சிறப்புற வாழ்த்துகிறோம்.

யாழ் மண்ணில்
A/L இன் பின்னர் சவால்களை வெல்லும் சர்வதேச கல்வித் தகைமைகள்

BTEC HND in BIOMEDICAL SCIENCE
Leading to BSc (Hons) from UK universities

LLB (Hons) in LAW
Why Choose BCAS for Law?

GCE (O/L) தகைமையுடன்...
Engineer
BTEC National Diploma In Engineering

BTEC HND in...
> Computing & Systems Development
> Quantity Surveying
> Civil Engineering
> Business Management
> Biomedical Science
> Law
> Pshycology
Leading to BSc (Hons) / LLB (Hons) / BA (Hons) / BEng (Hons)

மேலதிக விபரங்களுக்கு
BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
16, Point Pedro Road, Jaffna.
0777 102 131 / 077 311 4105
Email : info@bcas.lk
Colombo | Kandy | Batticaloa | Kurunegala | Qatar
www.bcas.lk

# புனித றமழான் பெருநாள் சிறப்பிதழ்-18.07.2015

யாழ்ப்பாணம், வவுனியா மற்றும் மன்னாரில்

SPOKEN English with Grammar

முழுநேரப் பாடநெறியானது திங்கள் தொடக்கம் வெள்ளி வரை தினமும் 4 மணித்தியாலங்களாக நடைபெறுவதுடன் பகுதி நேரப் பாடநெறியானது சனி, ஞாயிறு மற்றும் இரவு நேரங்களிலும் நடைபெறுகின்றது.

Now Prepare for your Academic / General IELTS

AUTO CAD 2D & 3D Modeling

Sponsor விசாவில் UK செல்லவுள்ளவர்களுக்கான

IELTS Life Skills A1 B1

பரீட்சையில் சித்தியடைவதற்கு 100% உத்தரவாதம் வழங்கப்படும்

German & Swiss மொழிப் பாடநெறி — Deutsch

French மொழிப் பாடநெறி — French

Netherland மொழிப் பாடநெறி — Dutch

BRITISH COLLEGE OF EDUCATION

23, Kachcheri nallur Rd, Jaffna. Tel :021-4927114
103, Mannar Rd, Vavuniya. Tel : 024-4930041
39, Convent Rd, Mannar. Tel: 023-4924124
585, Peradeniya Rd, Kandy. 10, Verset place, Colombo -06

Computer Courses

Computerized Accounting

MS-Office

Graphics Designing

Hot Line : 0777-596148

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
இனிய றமழான் நோன்பு பெருநாள் வாழ்த்துக்கள்

TOPAZ

Jaffna No. 01 Shop

Specialist in Wedding Suits, Wedding Sarees, Party Sarees,
Wedding Frocks, Party Frocks and all kinds of Items

No.72, Grand Bazaar, Jaffna. ☎ 021 222 4743 021 222 7645 E-mail : topazagn@gmail.com

Branch:

TOPAZ 021 2224643
CUSTOM TAILORS No.80/24, Kasthuriyar Road, Jaffna.

TOPAZ Mall (Pvt) Ltd. 021 222 4933, 021 300 3163
195, Power House Road, Jaffna.

அனைத்து வடபகுதி இஸ்லாமிய வாடிக்கையாளர்களுக்கும் எமது இனிய றம்ழான் பெருநாள் வாழ்த்துக்கள்



தற்போது புதியதோற்றத்தில்

பயோட்டினெக்ஸ் e

இது மட்டுமே தலைமுடி சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வளிக்கிறது...!
இது எமது பாவனையாளர்களின் கருத்து

Biotinexe

MRP 850/-

* Now Available in All Leading Pharmacies & Super Markets

Rial E - ஹேர் ஒயிலில் உள்ள நேச்சுரல் (natural) விட்டமின் E உடன் மேலதிக ஊட்டச்சத்துக்கள் அடங்கியிருப்பதால் உங்கள் கேசத்தை காப்பதோடு மட்டுமல்லாமல் அதை செழிப்பாகவும் வைத்திருக்கிறது. மேலும், Rial E இல் உள்ள விசேட சன் ஸ்கிரீன் (sun screen) பார்முலா வெயிலால் உங்கள் தலை முடியில் ஏற்படும் வறண்ட தன்மையிலிருந்தும் உங்கள் கேசத்தை நாள் முழுவதும் பாதுகாக்கிறது.

தினந்தோறும் Rial E உபயோகிப்பவர்கள் முடி உதிர்தல்,
வறண்ட தலைமுடி, பிசுபிசுப்பான கேசம் மற்றும் இதரநோ
தொல்லைகளுக்கு ஆளாவதில்லை.

உங்கள் வளமான கேசம் பல மான கவசம் பெற
தினந்தோறும் உபயோகிப்பீர் Rial E

* Now Available in All Leading Pharmacies & Super Markets



Rial E

வளமான கேசத்திற்கு

மேலதிக தொடர்புகளுக்கு:
யாழ். மாவட்ட விற்பனை பிரதிநிதி
R.Y. பிரபு 077 4320 365

HOTLINE 011 309 4914

ஏக விநியோகஸ்தர்: ஜெகன் பார்மசி
462/B, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 021 222 43



சிறி குமரன் ரெக்ஸ்

விசேடமாக
Office Wear Sarees
சில்க் சாறி
Dilip கொட்டன்சாறி
சில்க் கொட்டன் சாறி
திரட்வேர்க் கொட்டன் சாறி
பஞ்சாபி துணி
என்பனவற்றை மலிவாக பெற்றுக்கொள்ளலாம்

வாரத்தில் 7 நாள்களும் கடை திறந்து இருக்கும்



தட்டாதெருச் சந்தியில் அசத்தலான ஆடித்தள்ளுபடி

புத்தம்புதிய தெரிவுகளை தள்ளுபடி விலையில் பெற்றிட

சிறி குமரன் ரெக்ஸ்

இல.770, K.K.S. றோட், தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம்.






பிரிட்டனில் தந்தையொருவரது வாகனம் மோதிச் சுவர் இடிந்து விழுந்ததில் 17 மாதங்களேயான அவரது குழந்தை உயிரிழந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. அதற்கு அப்பகுதி மக்கள் அஞ்சலி செலுத்தியுள்ளனர். (ஐ)

# மதிப்பு மிக்க நாடு கனடாவுக்கு முதல் இடம்

ரொறான்ரோ,ஜூலை 18

சர்வதேச அளவில் மக்களால் அதிகம் போற்றிப் புகழப்படும் மதிப்பு மிக்க நாடுகள் குறித்து மேற்கொள்ளப் பட்ட ஆய்வில் கனடா நாட்டுக்கு எப்பட்டது. அதாவது, உலகளவில் உள்ள 55 பணக்கார நாடுகளில் எந்த நாடு அதிக மக்களால் மதிக் கப்படுகிறது என ஆய்வு மேற் கொள்ளப்பட்டது.



முதல் இடம் கிடைத்துள்ளதாகத் தகவல் கள் வெளியாகியுள்ளன.

ஒரு நாட்டின் சுற்றுச்சூழல், அரசி யல் மற்றும் பொருளாதாரம் உள் ளிட்ட துறைகளில் சிறந்து விளங்கி, மக்களால் அதிக அளவில் புகழப் படும் நாடுகளின் பட்டியலை வருடந் தோறும் தனியார் நிறுவனம் ஒன்று வெளியிட்டு வருகிறது.

2015 ஆம் ஆண்டுக்குரிய ஆய்வு அறிக்கையை அண்மையில் வெளி யிட்ட அந்த நிறுவனம், சர்வதேச அளவில் அதிக மக்களால் மதிக்கத் தக்க நாடுகளில் கனடா முதல் இடம் பிடித்துள்ளதாகத் தெரிவித்துள்ளது.

ஜி8 நாடுகள் எனப்படும் பிரான்ஸ், ஜேர்மனி, பிரிட்டன், ஜப்பான், கனடா மற்றும் ரஷ்யா நாடுகளில் வசிக்கும் சுமார் 48 ஆயிரம் மக் களிடம் இந்த ஆய்வு மேற்கொள் ஆய்வில் பங்கேற்போரில் 75 சதவீதத்தினர் கனடா நாடு தான் மிகவும் மதிக்க தக்க நாடு என வாக்களித்துள் ளனர்.

இதே ஆய்வில் நோர்வே நாட்டுக்கு இரண்டாவது இடமும், சுவீடன் நாட்டுக்கு மூன்றாவது மற்றும் ஆஸ்திரேலியாவுக்கு நான்காவது இடமும் கிடைத்துள்ளன. உலக வல்லரசு நாடுகளில் முன்னிலை யில் உள்ள அமெரிக்கா, இந்த ஆய்வில் 22 ஆவது இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளது. 2015 ஆம் ஆண்டு மட்டுமன்றி, கடந்த 2011, 2012, 2013 ஆகிய மூன்று ஆண்டு களிலும் கனடா நாடு தொடர்ந்து முதல் இடத்தைப் பிடித்து வந்துள் ளது. கடந்த வருடம் மட்டும் தான் கனடா நாட்டுக்கு இரண்டாவது இடம் கிடைத்தமை குறிப்பிடத்தக்கது.(ஐ)

# நைஜீரியாவில் குண்டு வெடிப்பு

## 50 பேர் சாவு

அபுஜா, ஜூலை 18

வடகிழக்கு நைஜீரியாவில் அடுத் தடுத்து நிகழ்ந்த குண்டு வெடிப்புத் தாக்குதல் சம்பவங்கள் காரணமாக ஐம்பதுக்கும் அதிகமானோர் உயிரி ழந்துள்ளனர்.



கானோ மாவட்டத்தின் தலை நகரான கானோ நகரின் மையப் பகுதியில் உள்ள கடைத்தெருவில் றம்ழான் பண்டிகையை முன் னிட்டு துணிமணிகள் மற்றும் வீட் டுக்குத் தேவையான இதரப் பொருள் களை வாங்க ஏராளமான மக்கள் திரண்டிருந்தனர்.

அப்போது, அங்குள்ள பிரபல செருப் புக்கடை வாசலில் சக்தி வாய்ந்த குண்டொன்று வெடித்ததால் பலர் உடல் சிதறி உயிரிழந்தனர். காயங் களுடன் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த மேலும் பலரைக் காப்பாற்றுவதற்காக சிலர் விரைந் தோடி வந்தனர்.

சம்பவ இடத்துக்கு மிக அருகா மையில் அடுத்தும் ஒரு குண்டு பயங்கரமாக வெடித்தது. அதனால், அந்த இடமே போர்க்களம் போல் காட்சியளித்தது. வீதிகள் தோறும் மனித உடல்கள் கிழிந்து, சின்னா பின்னமாகி சிதறி கிடந்தன.

தகவல் அறிந்து விரைந்து வந்த பொலிஸாரும், அம்புலன்ஸ் ஊழி யர்களும் காயமடைந்தவர்களை மருத்துவமனைகளுக்கு ஏற்றிச் சென்றனர். இந்தச் சம்பவங்களில் ஐம்பதுக்கும் அதிகமானோர் உயிரி ழந்ததாகவும், நூற்றுக்கணக்கான வர்கள் படுகாயங்களுடன் கானோ நகரில் உள்ள பல்வேறு மருத்துவ மனைகளில் சிகிச்சை பெற்று வரு வதாகவும் உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



சிகிச்சை பெற்று வருபவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிட மாக உள்ளதால் சாவு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது.


இஸ்லாமியர்களும், கிறிஸ்தவர் களும் சமவிகிதத்தில் வாழும் நைஜீரி யாவில் இஸ்லாமிய சட்டதிட்டங் களுக்கு உட்பட்ட ஆட்சியை அமைக்க வேண்டும் என கடந்த 2009 ஆம் ஆண்டில் இருந்து தீவிரவாதத்தை ஆயுதமாக கையில் ஏந்தி போகோ ஹரம் என்ற அமைப்பு போராட்டத் தில் குதித்துள்ளது. இந்த போகோஹ ரம் தீவிரவாதிகளின் கொலை வெறித் தாக்குதல்களால் இதுவரை சுமார் 15 ஆயிரம் அப்பாவிப் பொது மக்கள் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# எய்ட்ஸ் கிருமிகளை மகனின் உடலில் செலுத்திய தந்தை

பகோடா,ஜூலை 18

கணவன் மனைவிக்கிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டு விவாகரத்து வரை சென்றதால், ஆஸ்த்மா நோயால் பாதிக்கப்பட்ட அவர்களு டைய மகனுக்கு, தந்தையே எய்ட்ஸ் கிருமி இரத்தத்தைச் செலுத்தியுள் ளார். மகன் இருந்தால் விவாக ரத்தில் ஜீவனாம்சம் அதிகம் செலுத்த நேரும் என்பதற்காகத் தந்தை இவ்வாறு ஒரு முடிவெடுத்துள் ளார்.

கொலம்பியாவைச் சேர்ந்த ப்ரி யன் ஜாக்சன் 11 மாத குழந்தையாக இருந்தபோது, ஆஸ்த்மா நோயால் பாதிக்கப்பட்டிருந்தார்.



அந்தச் சமயத்தில் ஜாக்சனுடைய தந்தை ப்ரியன் ஸ்டீவெர்ட்க்கும், தாய்க்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டிருந்தது. அதில், அவர்களது குழந்தையான ஜாக்சனும் பெரும் தலைவலியாக இருந்துள்ளான். அதனால், ஸ்டீவெர்ட் விபரீத முடிவு ஒன்றை எடுத்துள்ளார். ஸ்டீவெர்ட் டுக்கு உடலில் இரத்தம் செலுத்து வதைப் பற்றிய தொழில் பயிற்சி தெரிந்து இருந்ததால் ஒரு நாள், ஜாக்சன் சேர்க்கப்பட்டிருந்த மருத் துவமனைக்குள் புகுந்து எய்ட்ஸ் இரத்தத்தை எடுத்து ஊசியின் மூலம் தனது குழந்தை ஜாக் சனின் உடலில் செலுத்தியுள்ளார்.

இதை அறிந்த மருத்துவர்கள் குழந்தை நிச்சயமாக இறந்துவிடும் என்றே கூறினர். ஆனால், கொடுக்கப்பட்ட நோய்க் கிருமியால் எதிர்மறை யான நல்விளைவு ஏற்பட்டிருந்தது. குழந்தை சிரிக்கவும் அழவும் சோம்பல் முறித்து உற்சாகமாக வும் காணப்பட்டது. இதனால், கலவரமடைந்த ஜாக்சனின் தாய் மீண்டும் மருத்துவரிடம் கொண்டு சென்று பரிசோதிக்கவே செய்தார்.

மருத்துவர்கள் ஐந்து மாதங்களுக் குமேல் குழந்தை உயிரோடு இருக்க வாய்ப்பில்லை எனத் தெரிவித் தனர். மேலும், ஏற்கனவே குழந் தைக்கு நச்சுத்தன்மையான மருந் துகள் நிறைய கொடுக்கப்பட்டி ருக்கலாம் என்றும் கூறினர். எந்த நேரத்தில் என்ன பாதிப்பு ஏற் படுமோ என்ற அச்சத்தில் இன்று வரை ஜாக்சனின் தாயார் உள் ளார்.

ஜாக்சனது தந்தை ஸ்டீவெர்ட் உடன டியாக கைது செய்யப்பட்டார். மேலும், இதுபோன்று எய்ட்ஸ் இரத்தத்தை எதிரிகளை அச்சுறுத்த வேறு எவருக்காவது பயன்படுத் தியிருக்கிறாரா என்ற வகையிலும் கேள்விகள் கேட்கப்பட்டன. ஜாக் சனது தந்தையின் இந்தச் செயலுக் கான குற்றத்துக்கு ஆயுள் தண் டனை வழங்கப்பட்டது.

நீதிமன்றத்தில் நீதிவான் தீர்ப்புக் கூறும்போது, இந்தச் செயல் ஒரு மோசமான போர்க்குற்றத்துக்குச் சமமானது என்றார். மேலும், கடைசியில் உன்னைக் கடவுள் அழைக்கும்போது நீ நிச்சயமாக நரகத்தில் நிரந்தரமாக எரிக்கப்படு வாய் என்றும் தனது கோபத்தை நீத வான் வெளிப்படுத்தினார். (ஐ)

## சட்டவிரோத மது விற்பனையை ஒழிக்க வேண்டும்

சங்குவேலிப் பிரதேசத்தில் வீடுகளில் வைத்து மதுபான வகைகள் விற்கப்படுவதால் கலாசாரச் சீரழிவு ஏற்படுவதுடன் அங்கு மதுபான வகைகளை வாங்கி அருந்துபவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துக் காணப்படுகின்றது.

தற்போது மது மற்றும் போதைப்பொருள்களுக்கு எதிராக நாடு தழுவிய ரீதியில் விழிப்புணர்வுச் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. இவற்றின் தீமை தொடர்பாகவும் மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டு வருகின்றது. ஏராளமான குடும்பங்கள் வறுமைக்குள் தள்ளப்பட்டு அவலவாழ்வு வாழ்வதற்கு மது பாவனையே முக்கிய காரணமாகக் கருதப்படுகின்றது. ஆகவே மதுபாவனையை ஒழிக்கும் செயற்பாடுகள் அவசியமாக மாறியுள்ளன.


தற்போது பொலிஸாரும், மதுவரித் திணைக்களத்தினரும் சட்டவிரோத மதுபாவனை தொடர்பாக அதிக அக்கறையுடன் செயற்படுவதோடு குற்றவாளிகளையும் கைது செய்து வருகின்றனர். இந்த நிலையிலும் சிலர் தமது நடவடிக்கைகளைத் தொடரவே செய்கின்றனர்.

இந்த அடிப்படையில்தான் சங்குவேலிப் பிரதேசத்தில் வீடுகளில் வைத்து மதுபான வகைகளை விற்பனை செய்யும் நடவடிக்கைகள் தொடர்கின்றன.

சங்கானை மதுவரித்திணைக்கள உத்தியோகத்தர்கள் இதில் உடனடியாகத் தலையிட்டு சட்டவிரோத மது விற்பனையை ஒழிக்க வேண்டுமென்பதே இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த மக்களின் வேண்டுகோளாகும்.

***பா. சுந்தரலிங்கம் மானிப்பாய்***

## தேர்தல் களத்தில் குதித்திருக்கும் சகல கட்சிகளுக்கும் பணிவான வேண்டுகோள் தென்மராட்சி மக்கள் சார்பாக




கட்டி முடிக்கப்பட்ட சாவகச்சேரி சந்தைக் கட்டடத்தை கடந்த ஆறுமாதங்களாக பொறுப்புள்ள நகரசபையால் முடியாதுள்ளது. ஒப்பந்தம் செய்த தரப்புக்கு வெளித் தரைக்கு கொங்கிறீட் கல்லும், புல்லும் பதிக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளதாம். வர்த்தகர்களும், பொதுமக்களும் மழை, காற்று, வெயிலில், ரயில்வே கடவையை கடந்து தற்காலிக சந்தையை பயன்படுத்து வதில் பல கஷ்டங்களை அனுபவிக்கிறார்கள். ரயில்வே கடவையில் அதிர்ஸ்டவசமாக இன்னமும் ஒருவரும் இறக்கவில்லை. ஏ9 பாதையில் செல்லும் நுகர்வோர் கூட சந்தை எங்கே? என்று கண்டுபிடிக்கக் கஷ்டப் படுகிறார்கள். நகர அபிவிருத்தி அமைச்சர் ஹக்கீமினால் இதைச் செய்ய முடியும். போட்டியிட வந்திருக்கும் வேட்பாளர்களில் யார் இதை முதல் செய்விக்கிறார்களோ அவர்களுக்கே மக்கள் வாக்களிக்கத் தயாராக இருக்கிறார்கள்.

***என்.பெரியதம்பி சாவகச்சேரி***

## அச்சுவேலி பத்தமேனி, பாரதி வீதி கிராம வீதிகளை புனரமைக்க மாட்டார்களா?

அச்சுவேலி, பத்தமேனி, விவசாயம் செழித்து, தோட்டச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளைக் கொண்ட, கடின உழைப்பாளிகளைக் கொண்ட கிராமம் ஆகும். வெங்காயம், புகையிலை மற்றும் காய்கறிவகை தோட்டச் செய்கைக்கு பெயர்பெற்ற கிராமம் ஆகும்.

பயிர்ச்செய்கைகளில் ஈடுபடும் கடின உழைப்பாளிகளைக் கொண்ட கிராமமாக அச்சுவேலி, பத்தைமேனி, பாரதி வீதி கிராமம் திகழ்கின்றது. இத்தகு சிறப்புக் கொண்ட பத்தமேனி, பாரதி வீதி கிராமத் திலுள்ள சிறிய வீதிகள், பெரிய, சிறிய ஒழுங்கைகள் என்பன கடந்த நூற்றாண்டுகளுக்கு மேலாக திருத்தப் படாமல் மண் ஒழுங்கைகளாக, வீதிகளாக கவனிப் பாரற்ற நிலையில் உள்ளன. ஏதோ வகையில் சில சமூகவியல் சமூக அடிப்படையிலான காரணங்களால் திட்டமிட்டு இந்தக் கிராம வீதிகள், ஒழுங்கைகள் புனரமைப்புச் செய்யப்படாமல், கடந்த பல்லாண்டு காலமாக பலரிடமும் முறைப்பாடுகள், மகஜர்கள் கொடுத்தும் நேரடியாக உரையாடியும் புனரமைப்புச் செய்யப்படாமல் இருப்பதையிட்டு அந்தப் பகுதி மக்கள வேதனையும் விரக்தியும் கொண்டுள்ளனர் என்பதை சகலருக்கும் அறியத் தருகின்றேன்.

யாழ்.குடாநாடெங்கும் வீதிகள், சிறிய ஒழுங்கைகள் பெரிய ஒழுங்கைகள் என்பன மறுசீரமைக்கப்பட்டும் புதிதாக தாரிட்டு தார் வீதிகளாகவும் காப்பெற் வீதிகளாகவும் ஆக்கப்படும் நிலையில் அச்சுவேலி, பத்தமேனி, பாரதி வீதி கிராமத்தின் ஒழுங்கைகள் சிறிய பெரிய வீதிகள் மட்டும் புனரமைக்கப்படாமலுள்ளன. எனவே இவற்றை புனரமைத்து பத்தமேனி மக்களின் குறைபோக்குமாறு சம்பந்தப்பட்ட வர்களை உருக்கமாகக் கேட்டுக்கொள்கிறோம்.

***சமூக நல ஆர்வலர்கள்.பத்தமேனி***

### கேலிச் சித்திரம்



நன்றி: லங்காதீப

## சொன்ன சொல்லை காப்பாரா மைத்திரி?

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதி செயலகத்தில் நடத்திய விசேட ஊடகவியலாளர் மாநாட்டில் மக்களைக் குழப்பத்தில் ஆழ்த்திவந்த - சந்தேகிக்க வைத்த பல விடயங்களைத் தெளிவுபடுத்தியுள்ளார். இதன்மூலம் சமீபகாலமாக அவர் கடைப்பிடித்து வந்த மௌனம் கலைந் துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வேட்பாளர் நியமனம், சமீபகாலமாக ஜனாதிபதிக்கு கடுமையான நெருக்கடிகளைக் கொடுத்துவந்தது. ஜனாதிபதி மைத்திரிபாலவைத் துரோகி என்று பலரும் பகிரங்கமாகத் திட்டித்தீர்த்தனர். ஜனவரி - 8இல் மக்கள் வழங்கிய ஆணையை மீறி விட்டார் என்று குற்றம்சாட்டினர். அப்படியிருந்தும், மஹிந்த போட்டியிடுவதை ஜனாதிபதி தடுக்கக்கூடும் என்று கடைசிநேரம் வரை - வேட்பாளர் நியமனப் பத்திரம் தாக்கல் செய்வதற்கு முதல்நாள் வரை எதிர்பார்க்கப் பட்டது. கடைசியில் எதுவும் நடைபெறவில்லை. ஜனாதிபதி தலைமை வகிக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்ன ணியில் குருநாகல் மாவட்டத்தில் மஹிந்த போட்டியிட வேட்பு மனு தாக்கல் செய்யப்பட்டு விட்டது. ஆகவே அவர் போட்டியிடுவதைத் தடுப்பதற் கான அனைத்து முயற்சி களும் தோல்வியடைந்து விட்டன. அவருக்கு வேட்பாளர் நியமனம் வழங்கியதன் மூலம் மீண்டும் அதிகாரத்துக்கு வருவதற்கான வழி ஒன்று திறந்து விடப்பட்டுள்ளது. இதற்கான முழுப் பொறுப்பும் ஜனாதிபதி மைத்திரிபால மீது சுமத்தப்பட்டது. அதனால் தான் அவர் காரசாரமான விமர்சனத்துக்கு உள்ளானார்.

இலங்கையில் பதவியேற்ற ஜனாதிபதிகளில் தம்மைத் போன்று மிகக் குறுகிய காலத்தில் கடுமையான விமர்சனங்களை எதிர்நோக்கிய ஜனாதிபதி வேறு எவரு மில்லை என்று பகிரங்கமாகவே தெரிவித்துள்ளார் ஜனாதிபதி மைத்திரிபால. இரு தரப்பினராலுமே சந்தேகத்துக்குரியவராகப் பார்க்கப்பட்டார். இப்படியான மிக இக்கட்டான நிலையிலேயே அவரது மௌனம் கலைந்துள்ளது. ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட் டில் ஜனாதிபதி தெரிவித்த கருத்துகளின் சாராம்சம் வருமாறு:-

- ஜனவரி - 8 வெற்றியை பின்-ோக்கி நகர்த்த நான் தயாரில்லை. ஜனவரி - 8க்கு முன்னதாக என்னிடம் இருந்த மஹிந்த மீதான எதிர்ப்பு இன்னும் அப்படியே இருக்கிறது.
- ஜனவரி - 8 ஜனாதிபதித் தேர்தலில் தோற்கடிக் கப்பட்ட முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர் வரும் நாடாளுமன்றத் தேர்தலிலும் தோற்கடிக்கப்படுவார்.
- நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட மஹிந்தவுக்கு வேட்பு மனு வழங்கப்படுவதை கடுமையாக ஆட்சேபித்தேன். இதில் எனக்கு உடன்பாடு இருக்கவில்லை.
- மஹிந்தவுடனான சந்திப்பின்போது அவரை பிரதமர் வேட்பாளராக நியமிக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையை நிராகரித்தேன். எந்த நிலையிலும் நான் இதற்கு இணங்க வில்லை. ஓகஸ்ட் 17 நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வென்றாலும் நான் மஹிந்தவைப் பிரதமராக நியமிக்கப்போவதில்லை.
- ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் போட்டியிட மஹிந்தவுக்கு வேட்பாளர் நியமனம் வழங்குவது மறுக்கப்பட்டிருந்தால் அவர் வேறு கட்சியில் போட்டியிட்டு நாடாளு மன்றம் வரும் வாய்ப்பு இருந்தது. அல்லது தேசிய பட்டியல் மூலம் நாடாளுமன்றம் வரமுடிந்திருக்கும்.
- கடந்த ஆறுமாதங்களில் டைட்டானிக் கப்பல் போன்றே அரசைக் கொண்டுவந்தேன். டைட்டானிக் கவிழ்ந்துவிட்டது. ஆனால் அரசை நான் கவிழவிடவில்லை. அரசைக் கவிழ்க்க முயற்சி எடுக்கப்பட்டபோது பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையைப் பயன்படுத்தி நாடாளுமன்றத்தைக் கலைத்தேன்.

இவையே ஜனாதிபதி ஆற்றிய உரையின் முக்கிய சாராம்சம். இவற்றுள் பிரதானமான வற்றில் ஒன்று பிரதமர் பதவி குறித்து ஜனாதிபதி தெரிவித்த கருத்து. மஹிந்த வென்று அவரது கட்சி பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்றாலும் மஹிந்தவுக்குப் பிரதமர் பதவி வழங்கப்போவதில்லை என்று ஜனாதிபதி நேற்று முன்தினம் ஆற்றிய உரையில் குறிப்பிட்டிருந்தார். இதற்கு சூட்டோடு சூடாக நேற்றே பதில் கிடைத்துவிட்டது. நேற்று நடைபெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் விசேட நிர்வாகச் சபைக் கூட்டத்தில் கருத்து வெளியிட்ட அதன் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த, மைத்திரியை கட்சியின் தலைமைப்பதவியில் இருந்து அகற்றும் திட்டம் இல்லை என்றும் தேர்தலின் பின்பு பிரதமரைத் தெரிவு செய்வது, தெரிவுசெய்யப்பட்ட கட்சி உறுப்பினர்களே என்றும் தடாலடியாகத் தெரிவித்துள்ளார்.

ஆகவே தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கூடுதல் ஆசனங்களைப் பெற்று ஆட்சி அமைத்தால், மஹிந்த பிரதமர் ஆவதை மைத்திரியால் தடுக்க முடியுமா என்ற கேள்வி எழுகிறது. வேட்பாளர் நியமன விவகாரத்தில் கோட்டைவிட்டமை போன்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சியைக் கைப்பற்றும் பட்சத்தில் பிரதமர் நியமன விவகாரத்திலும் கோட்டைவிடப் போகிறாரா ஜனாதிபதி மைத்திரிபால

**பத்தி எழுத்து**

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## மனித உரிமை மீறல்களால் பாதிப்புற்றோருக்கு மீட்சி கிட்டுமா?

போரின்போது, அரச படைகளிடம் சரண் அடைந்து காணாமற்போன முன்னாள் போராளிகள் மற்றும் பொதுமக்கள் தொடர்பாக அரசின் சார்பில் நடத்தப்படும் விசாரணைகளில் எவ்வித முன்னேற்றமும் இல்லை--

இதேவேளை -அரசின் இரகசியத் தடுப்பு முகாம்கள் இயங்குவதாக, தமிழ் அரசியல்வாதிகளும் செயற்பாட்டாளர்களும் தொடர்ந்து குற்றஞ்சாட்டி வருகின்றனர். ஆனால் அதிகாரிகள் அதனைத் தொடர்ந்து நிராகரிக்கிறார்கள்--

மேற்போந்த இரண்டு கருத்து நிலைகளும், குறிப்பாக அவதானிப்புகளும், பிரிட்டனின் வெளிவிவகார அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள இந்த ஆண்டின் முதல் அரை ஆண்டுக்குரிய அறிக்கையில் தொட்டுக் காட்டப்பட்டுள்ளன.

அதேவேளை, தமிழ் மக்களின் பிரதேசங்களை இராணுவ மயமாக்குதல், பொதுமக்களின் வாழ்வில் தலையீடுகள் என்பனவும்-- கணிசமான அளவில் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன என்று அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

அதேபோன்று, போர் நடைபெற்ற வேளையில், ஆயுதப் படைகளிடம் சரண் அடைந்த முன்னாள் போராளிகள், காணாமற்போனவர்கள் தொடர்பாக நடத்தப்பட்ட விசாரணைகளில் எவ்வகையான முன்னேற்றமும் இல்லை--

தமிழ் அரசியல்வாதிகளும் செயற்பாட்டாளர்களும் இரகசியத் தடுப்பு முகாம்கள் இயங்குவதாகத் தொடர்ந்து குற்றஞ்சாட்டி வருகின்றனர்-- என்று பிரிட்டனின் வெளிவிவகார அமைச்சரால் வெளியிடப்பட்ட நீண்ட அரை ஆண்டு அறிக்கையில் தொட்டுக் காட்டப்பட்டுள்ளது.

மேற்போந்த நிலைமைகள் குறித்து மட்டுமன்றி அரசின் ஆக்கபூர்வமான செயற்பாடுகள் குறித்தும் அந்த அறிக்கை எடுத்து இயம்பி உள்ளது.

மனித உரிமைகள் தரப்படுத்தலுக்கு உட்படுத்தப்படுவது பொருத்தமற்றது என்பதை இங்கு தொட்டுக்காட்டுவது பொருத்தம்.

ஜனநாயக நாடு என்று பறைசாற்றப்படும் எந்தவொரு நாட்டிலும், காணாமற்போனவர்களின் எண்ணிக்கை குறைந்து விட்டது என்று சொல்வதற்கும், அதனைத் தடுத்து நிறுத்துவதற்கு மனமார்ந்து செயற்படுத்துவதற்கும் இடையில் மிகப் பெரும் இடைவெளி உண்டு.

இந்த நாட்டில் காணாமற் போனோர் - இல்லை, இல்லை, காணாமற்போகச் செய்யப்பட்டோர் தொடர்பாக சந்தேகநபர்கள் சட்டத்தின் முன்னால் கொண்டு வரப்பட்டார்களா? மிகக் குறிப்பாக, காணாமற் போகச் செய்யப்பட்ட தமிழ் இளைஞர்கள் விடயத்தில் தண்டிக்கப்பட வேண்டியவர்கள் தண்டனையிலிருந்து விலக்களிக்கப்பட்டனரா? என்பன போன்ற வினாக்களுக்கான பதில்கள் இன்னமும் மூடு மந்திரமாகவே தொடர்கின்றன.


கடந்த காலங்களில், மனித உரிமை மீறல்களில் தொடர்புள்ளவர் எவரும் தண்டிக்கப்பட்ட "சரித்திரம்" இந்த இலங்கை நாட்டில் நிகழ்ந்துள்ளதா?

மனித உரிமை மீறல்களால் பாதிப்புற்றவர்கள், அவற்றிலிருந்து விடுபட்டு மேலெழுந்து சமூகத்துடன் இணைந்து வாழ்வதற்கு வாய்ப்புக் கிடைத்ததா என்பதும் கேள்விக்கு உரிய ஒன்றாக உயர்ந்து நிற்கிறது.

பாதிப்புற்றவர்கள் பாவிகளாகவே வாழ்ந்து மடியும் நிலையே இந்த நாட்டின் "நீதி"யும் "நல்லாட்சி"யும் என்றாகிவிட்டது. அது எப்போது, எந்த அரசின் ஆட்சியில் செப்பனிடப்படும்? சாதகமான நல்லாட்சி எப்போது மலரும் என்று மனவெம்பலுடன் பொறுத்து இருக்க வேண்டியது தானா..?

# தேசிய நல்லிணக்கம் சாத்தியப்படுமா...?

செ.உமாசுதன்




இலங்கையில் எதிர் வரும் ஓகஸ்ட் மாதம் 17ஆம் திகதி 8ஆவது நாடாளுமன்றத் தேர்தல் இடம்பெறவுள்ளது. அதற்கான தயார்ப்படுத்தல்கள் வழக்கம் போல இடம்பெற்று வருகின்றன. இதற்கு முன்னர் இடம்பெற்ற தேர்தல்களில் இடம்பெற்ற நாடகங்களும், அடாவடித்தனங்களும், ஓரங்கட்டுதல்களும், கட்சித் தாவல்களும், முட்டிமோதல்களும், வார்த்தை ஜாலங்களும் இடம்பெறுகின்றன. இனியும் இடம்பெறவுள்ளன. வெற்றி பெற்று யார் எழுந்தருளினாலும் ஆன்ம ஈடேற்றம் வேண்டி நிற்கும் தமிழ் ஆத்மாக்களுக்கு முத்தி விமோசனம் என்பது கேள்விக்குறியே.

7ஆவது நாடாளுமன்ற தேர்தல் 30 வருடங்களின் பின்னர் 2010ஆம் ஆண்டு இலங்கையில் இடம் பெற்றிருந்தது. தேர்தலில் 36அரசியல் கட்சிகளும், 301 சுயேச்சைக் குழுக்களும் போட்டியிட்டன. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு 117 ஆசனங்களையும்,ஐக்கிய தேசியக் கட்சி 46 ஆசனங்களை யும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 14ஆசனங்களையும் பெற்றுக் கொண்டன.

இதன்மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 3ஆவது பெரிய கட்சியாகத் தெரிவாகியிருந்தது. யாழ். தேர்தல் மாவட்டத்தில் 12 அரசியல் கட்சிகளும், 15 சுயேச்சைக் குழுக்களும் போட்டியிட்டன. இவற்றின் பலமுனைப் போரை எதிர் கொண்டு இந்த வெற்றியைப் பதிவு செய்தது. இதன் மூலம் தமிழர் பிரச்சினை தொடர்பில் பேசுவதற்கான பலமும், பிரதிநிதித்துவ ஜன நாயகமும் தமிழ் மக்களால் வழங்கப்பட்டது.

2005 ஆம் ஆண்டில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார். இந்தத் தேர்தல் ஜனாதிபதியின் அதிகார ஆழத்தைத் தீர்மானிக்கும் தேர்தலாக கருதப்பட்டது. 2010இல் மீண்டும் அவர் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதன் மூலம் இது உறுதிப்படுத்தப்பட்டது. இது போன்று 2010 ஏப்ரல் மாதத்தில் இடம்பெற்ற 7ஆவது நாடாளுமன்ற பொதுத்தேர்தலிலும் 2/3 பெரும்பான்மையைப் பெற்றுக் கொண்டுஆட்சி அமைத்தனர். ஆனால் இந்த வெற்றியை அவர்கள் தேசிய இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான அடித்தளமாகப் பார்க்கவில்லை. அதேபோன்று தமிழர்களின் உரிமை தொடர்பான நியாயமான கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டு அதற்கான தீர்வை முன்வைக்க எத்தனிக்க வில்லை.

2009ஆம் ஆண்டு மே மாதத்தில் விடுதலைப்புலிகளைத் தோற்கடித்தமை, தான் ஈட்டிய முதலாவது வெற்றி எனவும் 2010ஆம் ஆண்டு ஜனவரியில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றமை இரண்டாவது சாதனை எனவும், நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றமை மூன்றாவது சாதனை எனவும் சொல்லப்பட்டு வந்தது.

நாடாளுமன்றத் தேர்தலில் மக்கள் வழங்கிய அதிகளவு ஆதரவைப் பலமாகக் கொண்டு தேசிய நல்லிணக்கத்தை, அதற்கான இலக்கை எய்தும் பொருட்டு மிக வேகத்துடன் செயலாற்றுவேன் எனவும் தென்னாசியாவிலேயேபொருளாதார மற்றும் சமூக முன்னேற்றத்தில் எமது நாட்டை ஒரு மத்திய பிரதேசமாக நான் வளர்த்தெடுக்க முயல்வேன் என்று கூறியதும் நீர்த்துப்போயின. மாறாக தான்வகித்த இரண்டு பதவிக்காலத்தின்போதும் தேசிய நல்லிணக்கத்தைப் புறந்தள்ளி தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை சிதைத்தமை மாத்திரமன்றி இலங்கைக்குள்ளே தன்னுடைய குடும்ப ஆட்சியை நிறைவேற்றதிகாரத் தோடு நிலைநாட்டி தன்னுடைய குடும்பப் பொருளாதார முன்னேற்றத்தில் மாத்திரம் அக்கறை கொண்டிருந்தார் என்பது யாவரும் அறிந்ததே.

இலங்கையில் நடைபெற்று முடிந்த தேர்தல் பெறுபேறுகள் அந்த நாட்டில் அதிகாரப்பகிர்வு, தேசிய நல்லிணக்கம் ஆகிய இரண்டையும் உருவாக்க அரசுக்கு அரிய சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளதாக அப்போதைய தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்க உதவி அமைச்சர் றொபேட் ஓ பிளேக் சுட்டிக்காட்டியிருந்தார்.

அதேபோன்று அது ஜனநாயக தேசிய முன்னணி மற்றும் ஜாதிக ஹெல உறுமய போன்ற சிங்கள தேசியவாத கடும் போக்காளர்களின் தோல்வி எனவும் குறிப்பிட்டிருந்தார். இவை மஹிந்த அரசில் இடம்பெற்றதாகத் தெரியவில்லை. அதேபோன்று கடந்த 30 வருடங்களில் ஆட்சியில் இருந்த எந்த அரசிலும் இடம்பெற்றதாகவும் தெரிய வில்லை. அதிகாரத்துக்கு வரும் போது அதிகாரப்பகிர்வு, நல்லிணக்கம் என்பன தாரக மந்திரங்களாகச் சொல்லப்படுகின்றன. ஆனால் சிலகாலம் செல்ல அவை மரித்துப் போகின்றன. மேற்குலக நாடுகள் தமிழர் பிரச்சினை தொடர்பில் வார்த்தை ஜாலங்களை மாத்திரமே பிரயோகிக்கின்றன. பிரச்சினையைத் தீர்த்து வைப்பதில் செயல்முனைப்புடன் இல்லை. கடந்த 2012ஆம் ஆண்டு ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்கா இணைந்து கொண்டது. ஐநா மனித உரிமைகள் பேரவையில் கொண்டுவரப்பட்ட தீர்மானங்கள் மஹிந்த ராஜபக்ஷவை கட்டுக்குள் கொண்டுவர வும், பிராந்திய வல்லரசு நாடு களை குறிப்பாக சீனா, பாகிஸ்தான் போன்ற நாடுகளின் ஆதிக்கத்தை கட்டுப்படுத்துவதற்குமான ஒரு கருவியாகவே அமைந்திருந்தன. இதில் வெற்றியும் கண்டு கடந்த தேர்தல் மூலம் ஆட்சி மாற்றத்தை கொண்டுவருவதில் வெற்றி கண்டு வருகிறது. அதேநேரம் போர்க் குற்றம் தொடர்பிலும் அதுசார்ந்த விசாரணை மற்றும் பதில் கூறும் விட யங்களில் அதுஆர்வம் கொண்டி ருக்கவில்லை என்பது நோக்கத்தக்கது.

அடுத்தடுத்து நடந்த தேர்தல்களில் பெரும் தோல்விகளைச் சந்தித்து தொடர் பின்னடைவைக் கண்டு வந்த ஐக்கிய தேசியக் கட்சி மிகப் பலவீனமான கட்டமைப்பை அடைந்திருந்தது. கடந்த ஜனாதிபதி தேர்தலின் மூலம் ஒரு ஸ்திரநிலைமை அடைந்துள்ளது. நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலில் 2/3 பெரும்பான்மையை பெற்று ஆட்சி அமைப்பார்களா? என்ற போட்டி நிலையே பெரும்பான்மை இன சிங்கள தேசியவாத கட்சிகளிடையே தற்போது நிலவி வரு கிறது. இந்த நிலையில் வடகிழக்கு மாகாணங்களில் தமிழர் பிரதிநிதித்துவங்கள் 20ஆசனங்களை பெற்றுக்கொள்ளப் போட்டியிட வேண்டிய தேவை இருக்கிறது.

கடந்த ஜனாதிபதி தேர்தல் மூலம் ஓரங்கட்டப்பட்ட மஹிந்த ராஜ பக்ஷ அரசியலில் இருந்து ஒதுங்கியிருக்க தாம் விரும்பியதாகவும் ஆனால் தன் மீது பற்றுக்கொண்ட நாட்டு மக்கள் தன்னை அரசியலில் இருந்து ஒதுங்கவிடவில்லை எனக் கூறி தற்போது மீண்டும் தனது அரசியல் பிரவேசத்தை உறுதிப்படுத்தியிருக்கிறார்.

தனது சொந்த மாவட்டத்தில் மக்களின் ஆதரவு குறைந்துள்ள நிலையில் குருநாகல் மாவட்டத்தில் போட்டியிடுகின்றார். தற்போதைய அரசு தேசிய பாதுகாப்பை புறந்தள்ளி விட்டதாகவும் பயங்கரவாதிகளுக்கு ஆதரவாக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். இது கடந்த காலங்களைப் போன்று பயங்கரவாதம், புலிவேட்டை என்பவற்றைக் காட்டி, வாக்கு சேகரிப்பதற்கான தந்திர மாகவும் இருக்கக்க கூடும். இந்தப் பிரவேசம் தமிழரின் அழிவிற்கானதா? தன்னுடைய கட்சியிலே தான் பெற்ற 2/3 பெரும்பான்மையை வைத்துக்கொண்டு மிகப்பெரிய பிரச்சினையாக இருந்த, இருக்கின்ற தேசிய இனப்பிரச்சினைக்கு ஒரு நீதியான, நியாயமான தீர்வை தமிழர் தரப்போடு பேசி அதனை நடைமுறைப்படுத்தியிருக்கலாம். ஆனால் அதன் எதிர்வினையையே தமிழினம் சந்தித்திருந்தது.

போர் நிலைமை முடிவுக்கு வந்த போதிலும், மக்கள் ஏராளமான சவால்களை எதிர்கொள்கின்றார்கள். தமிழ்மக்களுடைய இயல்பு வாழ்க்கையோ, வாழ்வாதார நிலைமைகளோ ஒழுங்காக இல்லை. போரில் தமது குடும்பங்களை, குடும்ப அங்கத்தவர்களை இழந்துவிட்டனர், ஏராளமானோர் காணாமற் போய்விட்டனர். இந்தப் பாதிப்புக்களில் இருந்து மக்கள் இன்னமும் மீளமுடியாமல் உள்ளனர்.

இந்தத் தேர்தலில் போட்டியிடுகின்ற பெரும்பான்மையின கட்சிகள் அனைத்தும் தேசியவாதக் கட்சிகளே இவை கடும் போக் காளர்களையே வேட்பாளர்களாகக் கொண்டிருக்கின்றன. தமிழ் மக்களுடன் எந்த வகையிலும் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ளக் கூடாது என 30வருடங்களுக்கு மேலாக அடம் பிடித்து வந்தவையே இவை என்பதும் தெரிந்ததே.

ஆகவே இந்தத் தேர்தலிலும் ஏதோ ஒரு கட்சி வெற்றி பெற்று பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கும். சிங்கள தேசியவாதம் மீண்டும் மாற்றமின்றி பயணிக்கும். இது தொடர்பில் சிந்திப்பதற்கும் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் இவற்றுக்கு மேலாக ஒட்டுமொத்த தமிழரின் உரிமை தொடர்பான பிரச்சினைகளுக்குச் சரியானதொரு தீர்வைப் பெற்றுத் தருவதற்கும் தமிழர் பிரதிநிதித்துவத்தின் நிலை திருப்தி என்பது மக்களால் இந்த தேர்தலில் உறுதிப்படுத்தப்பட வேண்டும்: அதற்காக தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டும்.

வாக்களித்தல் என்பது அவர்களின் வரலாற்றுக்கடமை என்பதை மறந்து விடக்கூடாது.

■ ஜெ.சத்தியேந்திரன்
தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்.

# தென்னையைத் தாக்கும் செவ்வண்டும், அதன் நவீன கட்டுப்பாடும்



விஞ்ஞான ரீதியாக ரின்கோ போரஸ் பெருன் ஜீனஸ் (Rhyncho phorus ferrungineus) என அழைக்கப்படும் செவ்வண்டு தென்னை வளரும் இடங்கள் எல்லாவற்றிலும் காணப்படும். 3–15 வருட பராயமுள்ள தென்னை களைப் பாதிக்கும் அதி முக்கியத்துவம் வாய்ந்த தீவிர மான பீடையை ஏற்படுத்தும் வண்டினம் ஆகும். இதன் இனங்கள் பலவகையாகக் காணப் பட்டாலும், பெருன் ஜீனஸ் என்ற இனமே எமது பிரதேசங்களில் கூடுதலான தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

**செவ்வண்டுத் தாக்கத்துக்கு ஏது வான காரணிகள்:**
இளம் தென்னை மரங்களின் புதிய காயங்களில் மட்டுமே இவை முட்டையிடுகின்றன. சில வேளைகளில் அதிக நீர் மட்டம் காரணமாக தண்டுகளில் வேர் உருவாகும் இடத்திலிருந்து(bole) காற்று வேர்கள் உருவாகுவதால், தண்டு பெரியதாகும் சந்தர்ப்பத்தில் இயற்கை வெடிப்புக்கள் ஏற்படுத்தப்படுகின்றன.

**சேதத்தின் தன்மையும், இனங் காணலும்**
சேதம் செவ்வண்டுகளின் குடம்பிப் பருவத்தினால் ஏற்படுத்தப்படுகின்றது. பெருமளவிலான குடம்பிகள் உள் இழையங்களை உண்ணுவதால், மரத்தின் வட்டுப் பகுதி அல்லது அடிப்பகுதி பாதிப்படைந்து இறுதியில் இறந்து விடுகின்றன. ஆரம்பத் தொற்றுதலின்



போது, செவ்வண்டுத் தாக்கத்தை இனம் காண்பது மிகவும் கஷ்டமானதாகும்: அறிகுறிகளாக, வட்டுப்பகுதியில் அல்லது அடிமரத்தில் துளைகள் காணப்படும். இவற்றிலிருந்து வண்டினால் மெல்லப்பட்ட நார்கள் வெளித் தள்ளப்பட்டுக் காணப்படும். விடியற் காலைப் பொழுதில் தென்னையின் அடியில் காதை வைத்து ஒட்டுக்கேட்டால் நறநற என்ற ஒரு வித ஒலியைக் கேட்கக்கூடி யதாக இருக்கும். இலைகள் மஞ்ச ளாகும். குருத்துப்பகுதி வாடி வதங்கி காணப்படும். ஓலையின் அடிப் பகுதி மட்டையில் நார்த்தன் மையான புழுக் கூடுகளை அவ தானிக்கலாம்.

**செவ்வண்டு பற்றிய விளக்கம்**
நிறைவுடலி வண்டு சிவப்பு சார்ந்த கபில நிறமாகவும் 36mm நீளமும், 10mm அகலமும் உடையதாக இருக்கும். தலையில் காணப்படும் நீண்ட மூக்கினால் வித்தியாசப்படுத்தப்படும். உடலின் பின்நடுப் பகுதியில் கடும்நிறப்புள்ளிகள் காணப்படும். பெண்செவ்வண்டுகள் மரத்திலுள்ள காயங்களிலிருந்து உண்டாகும் திரவத்தின் வாசத்தினால் கவரப்படும். புதிய துவாரங்களில் பெரிய எண்ணிக்கையில் மிகச் சிறிய வெண்ணிற முட்டை வடிவ முட்டைகளை இடும்.

முட்டைகள் 35 நாள்களுக்குள் குடம்பிகளாகப் பொரித்து அடிமரம் அல்லது அரும்புகளின் நார் இழையங் களை உண்கின்றன. இந்தக் குடம்பி கள் 35mm நீளம் வரை வளர்ந்த தும் இதன் கபில நிறத்தலையினால், வெண்ணிற கால்களற்ற உடம்பால் இலகுவாக அடையாளம் காணலாம்.
55நாள்களின் பின்னர், அடிமரத்தின் வெளிமேற்பரப்புக்கு அருகில் நார் கொண்ட புழுக்கூட்டை உருவாக்குகின்றன. இந்தப் புழுக்கூட்டுக்குள் காணப்படும் கூட்டுப்புழுதான் அதன் ஓய்வு காலம் ஆகும். 20 நாள்களின் பின்னர் நிறையுடலி வண்டு அடிமரத்தை அல்லது ஓலைக் காம்பை வெட்டி துளையிடுவதன் மூலம் வெளியே வருகின்றது? இவ்வாறு தோன்றிய ஆண் வண்டுகள் பெரமோன் சேர்வையை வெளிவிடுகின்றன. இந்தச் சேர்வையால் ஆண், பெண் வண்டுகள் கவர்ந்திழுக்கப்பட்டு தொற்றுக்குள்ளான மரத்திலேயே இரண்டாவது சந்ததியின் இனப் பெருக்கமும் ஆரம்பிக்கப்படுகின்றது. இதன் விளைவு தென்னையின் வட்டு சரிந்து விழுந்து இறப்பு ஏற்படும்.

**செவ்வண்டுத் தாக்கத்தைத் தடுத்தல்**
செவ்வண்டு முட்டையிடலைத் தடுப்பதற்காக, எல்லா இளம் தென்னை மரங்களின் அடிப்பகு திக்கு அல்லது இலைக்காம்புகளின் புதிய காயங்களுக்கு நிலக்கரித்தார் அல்லது என்ஜின் ஒயில் பூசுதல் வேண்டும்.
சில சமயங்களில் செவ்வண்டுத் தாக்கத்துக்குஉள்ளானமரங்கள்,ஏற்கனவே கருவண்டினால் பாதிப்படைந்து இருந்தால் அந்தக் காலங்களில் செவ்வண்டு முட்டையிட வாய்ப்புண்டு.
கருவண்டுத் தாக்கத்தைத் தடுப்பதற்கு உக்கிய மரக்குற்றிகளை காணியில் இருந்து அகற்றி விடவும் அல்லது எரித்து விடவும்.
இளம் தென்னைகளில் காயங்கள் ஏற்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும்.
ஷெல் பட்ட மரங்களிலுள்ள துவாரங்களைத் தார் அல்லது களிமண் கொண்டு அடைத்து விடலாம்.
மிகஉக்கிரமாகத் தாக்கப்பட்டு குணமடையாத நிலையிலுள்ள மரங்களை தறித்து உடன் எரித்து விடுதல் வேண்டும்.

**செவ்வண்டைக் கட்டுப்படுத்தும் முறைகள்**
இதனைக் கட்டுப்படுத்த கடந்த காலங்களில் பரிந்துரைக்கப்பட்ட பூச்சி நாசினி மொனோ குரோடோபொஸ் ஆகும். ஆனால் தற்சமயம், இந்தப் பூச்சி நாசினி தடை செய்யப்பட்டுள்ளது.
முறை I: பெரமோன் பொறி யைப் பாவித்தல்– 5 ஏக்கரை விடக் கூடிய தென்னம் தோட்டங்களுக்கு இந்தப் பெரமோன் பொதி வைத்தல் சிபார்சு செய்யப்பட்டுள்ளது.
முறை II இரசாயன முறை செவ்வண்டுத் தாக்கத்தைக் கட்டுப் படுத்த புதிய வகையான கிருமி நாசினியை தென்னை ஆராய்ச்சி நிலையம் அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த கிருமிநாசினியை உபயோ கித்து தென்னைச் செய்கையாளர் கள் பூரண பயனை அடையமுடியும்.
சந்தைப் பெயர் :Virta வலி வேட்டக்கோ
அளவு : 60 மில்லி மீற்றர்
வேறு பெயர்கள் : Thayameno kasam 20%
Clorentraniphol 20%
புதியதாக செவ்வண்டுத் தாக்கத்தைக் கட்டுப்படுத்த அறிமுகப்படுத்தப்படும் வேட்டக்கோ பூச்சி நாசினியை பாவிக்கும் முறை
4ஆ(கிராம்) பக்கட் அளவில் பெற்றுக்கொள்ள முடியும். இதில் இருக்கும் 4g தூளை 250ml(மில்லி லீற்றர்) (1/4 லீற்றர்) நீரில் கரைத்து, 60ml(மில்லி லீற்றர்)இனை ஒரு மரத்துக்கு செலுத்தமுடியும். மரத்தின் உயரம் 5அடி அல்லது அதற்கு குறைந்தால் மரத்தின் உயரத்துக்கு ஏற்றவாறு செலுத்தலாம்.
உதாரணமாக : மரத்தின் உயரம் 5அடி எனில் முதலாவது துளையை 12அடிஉயரத்திலும், 2ஆவது துளையை 4அடி உயரத்திலும், இட லாம். 1ஆவது துளையிட்ட எதிர்ப் பாகத்துக்கு 2ஆவது துளையை இடவும்.
5அடிக்கு மேல் உயரமுள்ள மரமாயின், மேற்குறித்த முறையில் துளையிட்டு 5அடியை விட உயரத்தில் இரு புறமும் இருதுளையை மேலதிகமாக இடல் வேண்டும்.

**பூச்சி நாசினியை உட்செலுத்தும் முறை**
4gதூளை போத்தலில் இட்டு 1/4 லீற்றர் நீரில் கரைக்கவும்.
மரத்தின் உயரத்துக்கு ஏற்ப 5cm ஆழத்தில் 450கோணத்தில் துறப்பணத்தின்உதவி கொண்டுதுளையை இடலாம்.(இதற்கு மின்சார துளையிடு கருவிகளையும் பாவிக்கலாம்) இவ்வாறு துளையிடும்போது கறுப்பு அல்லது ஊதா நிறத்தில் துறப்பணம் காணப்பட்டால் அந்த இடத்தில் பூச்சி நாசினியை உட்செலுத்தக் கூடாது. வெள்ளை சார்ந்த நிறமாக இருந்தால் மட்டுமே பூச்சி நாசினி உட்செலுத்த உகந்த பிரதேசம் ஆகும்.
சிறிஞ்(ஊசி) ஒன்றை கொள்வனவு செய்து, (5ml அளவு) பூச்சி நாசினியை அளந்து எடுக்கவும். சிறிஞ்சின் அளவு 5ml ஆக இருப்பின், மெதுவாக, மொத்த அளவு 60ml உட்செலுத்த முடியும்.
பூச்சி நாசினியைச் செலுத்திய பின்பு, தென்னை மரத்திற்கு ஏற்படுத்தப் பட்ட துளைகளை களிமண் அல்லது சிமெந்தினால் மூடிவிட வேண்டும்.
பூச்சி நாசினி செலுத்திய பின்பு மரத்திலிருந்து நீர் வடிதல் போன்ற அறிகுறிகள் தென்பட்டால், 2 கிழமைகளின் பின்பு, மீண்டும் இதே செயன்முறையைத் தொடர வேண்டும்.(1முறை)
பூச்சி நாசினிகள் நஞ்சாக இருப்பதால், மிகவும் அவதானமாக கையுறைகளைப் பாவித்து இந்தச் செயன் முறையைச் செய்யவும்.
மேற்கொண்டு செவ்வண்டுத் தாக்கம் பற்றிய விளக்கங்கள் தேவைப்படுவோர், அந்தப் பிரதேசத்திலுள்ள கமநல சேவை நிலையங்களில் உள்ள தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் காரியாலயங்களில், ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தரைச் சந்தித்துப் பெற்றுக்கொள்ள முடியும்.

## ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு மாதத்தைக் கொண்டாடும் லபார்ஜ் சிமேந்து

லபார்ஜ் மகாவலி சிமேந்து நிறுவனத்திற்குள் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள வேலைத் திட்டத்துக்கு அமைய 2015ஆம் ஆண்டு ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு மாதம் தொடர்பான நிகழ்வு இலங்கை துறைமுக அதிகார சபையில் அமைந்துள்ள லபார்ஜ் சிமேந்து பொதியிடல் தொழிற்சாலை வளாகத்தில் நடைபெற்றது.
இந்த வேலைத் திட்டத்தை ஆரம்பித்த காலகட்டத்தில் பாதுகாப்புடன் தொடர்புடைய அதிகாரிகளைப் பயன்படுத்தி ஊழியர்களை திடப்படுத்தியதாகவும் மற்றும் அவர்களது புதிய நோக்கு நிலைகளுக்கு அமைய தமது பாதுகாப்பு தொடர்பாக தாங்களுக்கே நிர்வகிக்கக் கூடிய விதத்தில் வேலைத் திட்டமொன்று முன்னெடுக்கப்படுவதாகவும் லபார்ஜ் நிறுவனத்தின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான பிரதானி அத்துல கருணாநாயக்க தெரிவித்தார்.
இம்முறை லபார்ஜ் நிறுவனத்தின் பங்குதாரர்களுக்கும், அதில் கடமையாற்றும் ஊழியர்கள் மட்டுமன்றி அவர்களது குடும்ப அங்கத்தவர்களுக்கும் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு செயற்திட்டத்தின் கீழ் சிறந்த பயிற்சி என்ற தொனிப் பொருளின் கீழ் போட்டிகளில் பங்குபற்றுவதற்கான சந்தர்ப் பம் வழங்க வேண்டுமென்ற சிறந்த கருத்தை முன்வைத்த ஜனக்க சமரசிங்க, சானக்க, லக்ஷமன் மற்றும் இந்திக்க முனசிங்க ஆகியோருக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன.
3 வயதிற்கும் 14 வயதிற்கும் இடைப்பட்டோருக்காக ஏற்பாடு செய்யப்பட்ட சித்திரம் வரைதல் போட்டியில் 'வீட்டில் பாதுகாப்பு' என்ற தொனிப் பொருளில் பங்குபற்றிய சிறுவர், சிறுமி களுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன.
அந்த நிறுவனத்தின் உயர் அதிகாரிகளின் பங்களிப்புடன் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த லபார்ஜ் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப் பாளர் அநுராக் காக், தூசிகள் இல்லாத சூழல் ஒன்றை அமைப்பதற்கான எண்ணத்தை அனைத்து பிரிவினர் ம்த்தியிலும் ஏற்படுத்துவதே எமது நோக்கமாகும் எனத் தெரிவித்தார்.
ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான பிரதானி அத்துல கருணாநாயக்க மேலும் கருத்துத் தெரிவிக்கையில், நிறுவனத்தின் ஊழியர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்கள் ஆகியோரது ஐக்கியமே இந்த வெற்றிக்கு முக்கிய காரணமாகும். அதனால் அவர்களுக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன் என்றார். (த)

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 2 | | | | | 1 |
| | 4 | | | | 8 | | | 5 |
| | 9 | | | 4 | | | | 6 |
| 4 | 2 | | | | 3 | | 6 | |
| | | 7 | | | | 8 | | |
| | 5 | | 7 | | | | 4 | 3 |
| 6 | | | | 8 | | | 9 | |
| 2 | | | 9 | | | | 1 | |
| 7 | | | | | 6 | | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 1 | 2 | 5 | 6 | 7 | 8 | 4 | 3 |
| 3 | 7 | 6 | 1 | 4 | 8 | 2 | 5 | 9 |
| 5 | 8 | 4 | 9 | 3 | 2 | 1 | 6 | 7 |
| 8 | 2 | 9 | 7 | 5 | 6 | 3 | 1 | 4 |
| 7 | 4 | 3 | 2 | 8 | 1 | 5 | 9 | 6 |
| 6 | 5 | 1 | 4 | 9 | 3 | 7 | 8 | 2 |
| 4 | 3 | 7 | 8 | 1 | 9 | 6 | 2 | 5 |
| 2 | 9 | 8 | 6 | 7 | 5 | 4 | 3 | 1 |
| 1 | 6 | 5 | 3 | 2 | 4 | 9 | 7 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளை யாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரை களையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரை களை யும் கொண்டிருக் கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டாங் கள், பகுதிகள், உப சதுரங் கள் என்றும் அழைக்கிறார் கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண் டும் மீண்டும்) வராது நிரப் பப்பட வேண்டும். அவ் வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்காங் கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற் கனவே நிரப்பப் பட்டி ருக்கும். தர்க்கரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டி யதே வேலை. சுடோக்கு என் பது ஜப் பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகர மாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உகை அளவில் பிரபல்யமானது.

## நாளை

ஆடி–03
ஞாயிற்றுக்கிழமை
19.07.2015

**திதி:** திருதியை
மு.ப. 10.51 வரை
**நட்சத்திரம்:** மகம்
மு.இ.09.38வரை
**சுபநேரம்:**
09.01-10.31 வரை
**இராகுகாலம்:**
04.31-06.01 வரை
சதுர்த்தி விரதம்





| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 60 | 60 | 60 | 60 | 60 | 40 | 30 |
| கத்தரி | 50 | 50 | 70 | 50 | 40–50 | 80 | 50 | 30 |
| கரட் | 150 | 130 | 160–300 | 120 | 200–240 | 200 | 240 | 200 |
| மரவள்ளி | 60 | 50 | 60 | 50 | 50 | 60 | 60 | 45 |
| பயிற்றை | 100 | 80 | 70 | 100 | 80 | 80 | 120 | 100 |
| பாகல் | 150 | 160 | 160 | 160 | 120 | 160 | 120 | 110 |
| கருணைக்கிழங்கு | 120 | 100 | 100 | 120 | 100 | – | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 100 | 100 | 90 | 90 | 90–100 | 100 | 120 | 80–90 |
| சி.வெங்காயம் | 160 | 170 | 180 | 180 | 120–140 | 200 | 160 | 110–130 |
| பூசணி | 40 | 30 | 30 | 40 | 20–30 | 40 | 60 | 20–25 |
| தக்காளி | 160 | 160 | 140 | 140 | 140–160 | 200 | 120 | 120–150 |
| வாழைக்காய் | 70 | 60 | 50 | 50 | 40–60 | 60 | 60 | 30 |
| கீரை | 20 | 20 | 30 | 05 | 15–20 | 30 | 35 | 20 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 30 | 30 | 20 | 40 | 10 | 10 |
| பச்சை மிளகாய் | 350 | 300 | 280 | 360 | 360 | 400 | 500 | 300 |
| புடோல் | 60 | 60 | 50 | 50 | 60–80 | 60 | 80 | 60 |
| கோவா | 90 | 100 | 80 | 80 | 80–100 | 100 | 100 | 50–60 |
| வெண்டி | 100 | 60 | 80 | 80 | 100–120 | 120 | 120 | 50–60 |
| போஞ்சி | 200 | 160 | 200 | 180 | 180 | 180 | 200 | 210 |
| லீக்ஸ் | 100 | 140 | 160 | 100 | 120–140 | 160 | 120 | 120 |
| தேங்காய் | 50 | 35–40 | 60 | 40–50 | 40–60 | 50 | 35–45 | 35 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 80 | 70–80 | 80 | 90 | 120 | 100–120 |
| தேசிக்காய் | 80 | 80 | 80 | 60 | 60 | 80 | 100 | 50–60 |
| வல்லாரை | 25 | 20 | 10 | 10 | 30–40 | 20 | 20 | 10 |
| கறிமிளகாய் | 140 | 170 | 120 | 180 | 220–260 | 200 | 220 | 160–180 |
| இராசவள்ளி | 120 | 120 | – | – | 100 | 160 | 160 | 80 |
| முருங்கைக்காய் | 200 | 160 | 200 | 160 | 100–140 | 200 | 200 | 110 |




| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 700 | 600 | 800 | 700 | 700 | 650 |
| நண்டு | 350 | 400 | 400 | 350 | 300 | 400 |
| கணவாய் | 650 | 500 | 700 | 600 | 600 | 550 |
| பாரை | 600 | 500 | 600 | 550 | 600 | – |
| சுறா | 650 | 500 | 600 | 600 | 700 | 450 |
| சீலா | 300 | 400 | 500 | 400 | 600 | – |
| விளை | 700 | 450 | 400 | 450 | 600 | 350 |
| முரல் | 350 | 400 | 400 | 400 | 400 | – |
| கும்பிளா | 400 | 400 | 400 | 400 | 400 | – |
| கிழாக்கன் | 650 | 500 | – | 400 | 400 | 500 |
| ஓரா | 400 | 350 | 400 | 350 | 400 | – |
| திரளி | 250 | 300 | 220 | 300 | 200 | 300 |
| நகரை | 200 | 300 | 200 | 300 | 200 | 300 |
| சூடை | 150 | 200 | 200 | 100 | 200 | 80 |
| ஒட்டி | 250 | 300 | 250 | 300 | 300 | – |
| திருக்கை | 150 | 350 | 250 | 250 | 300 | 120 |
| பாலை | 400 | 300 | 350 | 400 | – | – |
| வாழை | 100 | 150 | – | 300 | 300 | – |
| கொய் | 100 | 150 | 60 | 120 | 100 | – |
| மதனம் | 150 | 250 | 220 | 280 | 200 | 200 |


# மாட்டு இறைச்சியின் தீமைகள்

அசைவ உணவுகளில் ஒன் றான மாட்டு இறைச்சியில் புரோட்டீன் மற்றும் தாதுப் பொருள்கள் அதிகம் உள் ளன. மாட்டிறைச்சிக்கறியை அதிகமாக உண்பதால் எமது வாழ்நாள் குறையும் என்று புதிய ஆய்வு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதிக அளவு மாட்டிறைச்சிக் கறியை உண்பதால் இதய நோய் ஏற்படும். ஏனெனில் அந்த இறைச்சியில் அதிக மான அளவு கொழுப்பு நிறைந்துள்ளது. அதனால் தமனிகளில் செல்லும் இரத்தத்தின் அளவு குறை வதோடு, வீரியம் குறைந்து நாள்பட்ட நோயையும் ஏற்படுத்தும். அதேசமயம், ஏனைய இறைச்சிகளைப் போல இதையும் அளவோடு எடுத்துக் கொள் ளலாம் என்கிறார்கள். அரிசி, வெண்ணெய், சீஸ் போன்றவற்றில் கூட கொழுப்புகள் உள்ளது. இருப்பினும் அவற்றை எவ் வாறு சாப்பிடுகிறோமோ, அது போலவே அந்த மாட் டிறைச்சிக் கறியையும் அள வோடு உண்ண வேண்டும். ஏனெனில் மிருகத்தின் கொழுப்பானது மனிகளில் தங்கி, இரத்த ஓட்டத்தைத் தடுக்கும். அதனால் மாரடைப்புக் கூட ஏற்படும். மாட்டி றைச்சிக் கறியில் உள்ள கார்சி



னோஜென், புற்றுநோயை ஏற்படுத் தும் பொருள். ஆகவே அளவுக்கு அதிகமாக மாட்டிறைச்சிக் கறியை உண்டால் உடலில் கார்சினோஜென்னின் அளவு அதிகரிக்கும். மாட்டிறைச்சிக் கறியில் கலோரி அதிகமாகவுள்ளது. ஆகவே அவற்றை அதிகமாக உண்டால் உடல் எடை அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது.

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....




**நன்மை செய்பவன் தனக்குத்தானே நன்மையைத் தேடிக்கொள்கிறான்**

சமநிலையில் இருந்து பிறழாதவன், மனச் சாந்தமுடைய வன், இரக்கமும், கருணையும் கொண்டவன் ஆகியோர் நல்ல பணிகளை மட்டும் வாழ்வில் செய்ய முற்படுவர். அதன் மூலம் அவர்கள் தமக்கே நன்மையைத் தேடிக் கொள்கின்றனர். தீமையைச் செய்வதால், எமக்கு நாமே தீமை செய்கிறோம். நன்மையைச் செய்வதால் எமக்கு நாமே நன்மை தேடிக் கொண்டவர்களாகிறோம்.
சித்தாந்தங்களையும், தத்துவங்களையும் தெரிந்து கொள்வ தால் என்ன நன்மை விளையப்போகிறது! நல்லவர்களாக வாழுங்கள். மற்றவர்களுக்கு நன்மை செய்து வாழ்வைப் பயனுடையதாக்குங்கள்.

# ஜூலை மாத ராசி பலன்கள்

## மிதுனம்



உங்கள் ராசிக்கு 2 இல் குருவும், சுக்கிரனும் 6இல் சனியும் 10 இல் கேதுவும் உலவுவதால் குடும்பத்தில் குதூகலம் நிறைந்திருக்கும். ஒன்றுக்கு மேற்பட்ட இனங்களால் ஆதாயம் கிடைத்துவரும். திரவப்பொருள்கள் இலாபம் தரும். கடல் வாணிபம் செய்பவர்களுக்கு ஆதாயம் அதிகரிக்கும். செய்து வரும் தொழில் விருத்தி அடையும். ஆசிரியர்கள், பேராசிரியர்கள், மதபோதகர்கள், உத்தியோகத்தர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள் ஆகியோருக்கெல்லாம் முன்னேற்றமான சூழ்நிலை நிலவிவரும். திருமணம் போன்ற சுப காரியங்கள் நிகழும். விருந்து, உபசாரங்களில் ஈடுபாடு கூடும். பொது நலப்பணிகளில் ஈடுபாடு உள்ளவர்களுக்கு நற்பெயர் கிடைக்கும். நண்பர்களால் நலம் கூடும். உடன் பிறந்தவர்கள் ஓரளவுக்கு உதவி புரிவார்கள். பொருளாதாரப் பிரச்சினைகள் தலைதூக்கும். செய்து வரும் தொழிலில் அதிக கவனம் தேவை. பெரியவர்கள் மற்றும் மேலதிகாரிகளின் அதிருப்திக்கு ஆளாகாமல் இருப்பது நல்லது. கொடுக்கல்–வாங்கலில் விழிப்புத் தேவை. பேச்சில் நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது. வியாபாரிகளுக்கு அனுகூலமான போக்குத் தென்படும். வீண் விவகாரங்களில் தலையிடவேண்டாம். குடும்ப நலனில் கவனம் தேவை. மிருகசீரிடம், திருவாதிரை நட்சத்திரக்காரர்களுக்கு சிறப்பான மாதமிது.

***தொழிலாளர்களுக்கு:***
தொழில், வியாபாரத்தில் நிர்வாகச் செலவு அதிகரிக்கும். சுமாரான இலாபம் கிடைக்கும். எதிரிகளின் இடையூறுகளைச் சந்திக்க நேரிடும். புதிய தொழில் தொடங்கவோ, முதலீட்டை அதிகரிக்கவோ வேண்டாம். பணியாளர்கள் சிறப்பான நிலையில் இருப்பர். எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கும். வேலைப்பளு குறையும்.

***மாணவர்களுக்கு:***
மாணவர்கள் அக்கறையுடன் படிப்பது நல்லது. புதன் சாதகமற்ற இடத்தில் இருப்பதால் போட்டியில் வெற்றி காண்பது அரிது. முயற்சிக்குத் தகுந்த பயன் நிச்சயம் கிடைக்கும்.


***விவசாயிகளுக்கு:***
விவசாயிகள் கால்நடை வளர்ப்பு மூலம் வருமானம் காண்பர். வழக்கு விவகாரத்தில் அலட்சியமாக இருக்க வேண்டாம்.



***பெண்களுக்கு:***
பெண்களுக்கு அயல் வீட்டாரின் நட்புக் கிடைக்கும். குடும்பம் சிறந்து விளங்கும். பிறந்த வீட்டில் இருந்து சீதனப் பொருள் கிடைக்கப் பெறலாம். வேலைக்குச் செல்லும் பெண்கள் கடினமாக உழைக்க வேண்டியதாக இருக்கும்.

**அதிர்ஷ்ட எண்:** 4,5
**அதிஷ்ட நிறம்:** வெள்ளை,கருப்பு
***பரிகாரம்:*** நாக தேவதையை வணங்கி வாருங்கள். துர்க்கை அம்மனை வழிபடுங்கள். ராகு கால பைரவர் பூஜையில் பங்கு பெறுங்கள்.

## கடகம்



உங்கள் ஜென்ம ராசியில் சுக்கிரனும் 3 இல் ராகுவும், 11 இல் புதனும் உலவுவதால் தோற்றப் பொலிவு கூடும். புதிய பொருள்கள் சேரும்.
வெளியூர், வெளிநாட்டுத் தொடர்புகள் பயன்படும். வியாபாரத்தில் வளர்ச்சி காண வழிபிறக்கும். நண்பர்களும் உறவினர்களும் உதவி புரிவார்கள். மாணவர்களது நிலை உயரும்.
ஆராய்ச்சியாளர்களுக்குப் பாராட்டுக்கள் குவியும். கணிதம், எழுத்து, பத்திரிகை, விஞ்ஞானம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் வளர்ச்சி காண்பார்கள். வியாபாரிகள் விழிப்புடன் செயற்படுவது அவசியமாகும். பண வரவு அதிகமாகும். புதிய சொத்துக்கள், பொருள்கள் ஆகியவற்றின் சேர்க்கை கிட்டும்.
சிலருக்கு வாகன யோகம் கிடைக்கும். பேச்சாற்றல் கூடும். செயலில் வேகம் பிறக்கும். பிரச்சினைகள் எளிதில் தீரும்.
கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். குடும்பத்தில் நற்காரியங்கள் நிகழும். நீண்ட நாள்களாக எண்ணியிருந்த காரியம் இப்போது இனிது நிறைவேறும். பொன்னும் பொருளும் சேரும். உடல் நலனில் கவனம் தேவைப்படும். எந்தக் காரியத்திலும் பதற்றப்படாமல் நிதானமாக ஈடுபடுவது அவசியமாகும்.
உடன்பிறந்தவர்களாலும், வாழ்க்கைத் துணைவராலும், தந்தையாலும் சிறுசிறு பிரச்சினைகள் ஏற்படும்.
பக்குவமாகச் சமாளிப்பது நல்லது. பூச நட்சத்திரக்காரர்களுக்கு சுப பலன்கள் கூடும் மாதமிது.

***தொழிலாளர்களுக்கு:***
தொழில், வியாபாரத்தில் அரசின் சலுகை கிடைக்கும். அதிகமாக உழைக்க வேண்டியிருக்கும்.
பணியாளர்களுக்கு வேலைப்பளு அதிகரிக்கும். அதிகாரிகளின் ஆதரவு ஓரளவே கிடைக்கும்.

***மாணவர்களுக்கு:***
மாணவர்கள் சிரத்தை எடுத்துப் படிக்க வேண்டி இருக்கும்.
ஆசிரியர்களின் அறிவுரையை ஏற்பது நல்லது. குரு சாதகமான இடத்தில் இருப்பதால் சிறப்பான நிலையைக் காணலாம்.

***விவசாயிகளுக்கு:***
விவசாயிகளுக்கு பயிர்களில் விளைச்சல் பெருகும். கால்நடை மூலமும் வருவாயை எதிர்பார்க்கலாம்.
புதிய சொத்து வாங்கும் எண்ணம் தடைப்படலாம்.

***பெண்களுக்கு:***
பெண்கள் குதூகலமாக இருப்பர். ஆனால் மாத முற்பகுதியில் உறவினர்களால் பிரச்சினை நேரலாம்.

**அதிர்ஷ்ட எண்:** 2, 3

**அதிர்ஷ்ட நிறம்:** மஞ்சள் , வெள்ளை

பரிகாரம்: ஆதரவற்றோருக்கு இயன்ற உதவி செய்யுங்கள்.
இராமர் வழிபாடு உயர்ச்சி தரும். தினமும் சூரிய தரிசனம் செய்யுங்கள். முருகன் ஆலயத்துக்குச் சென்று வழிபடுங்கள்.

# பெண்கள் குறித்து


## வினோதமான விடயங்கள்...




பெண்கள் அழகானவர்கள், கவர்ச்சியானவர்கள், மென்மையானவர்கள், ஏன் மேன்மையானவர்களும் கூட. ஆனால் அவர்கள் நிறைய வித்தியாசமானவர்கள், வித்தியாசமான, நூதனமான, வினோதமான பழக்க வழக்கங்களை உடையவர்களும் கூட.
சற்றும் கற்பனையே செய்து பார்க்க முடியாத பல விடயங்கள் பெண்களிடம் இருக்கிறதாம். ஆண்கள் செய்யத் துணியாததைச் செய்யத் துணிபவர்கள் பெண்களாம். பல விடயங்களை உண்மை போலவே செய்து காட்டுவதில் பெண்கள்கில்லாடிகளாம்.

**மனசுக்குள் இருப்பதை கடைசிவரை மனசோடு வைத்திருப்பது எனப் பல விடயங்களில் பெண்கள் கெட்டிக்காரர்கள்**

வயதை மறைப்பதில், மனசுக்குள் இருப்பதை கடைசி வரை மனசோடு வைத்திருப்பது எனப் பல விடயங்களில் பெண்கள் கெட்டிக்காரர்கள். ஆண்கள் செய்யத் தயங்கும் விடயத்தை, ஏன் யோசிக்கத் தயங்கும் விடயத்தைக் கூட சட்டென்று முடித்து விடுவதில் பெண்கள் திறமையானவர்கள்.
கைப்பை இல்லாமல் பெண்களை வெளியில் யாருமே பார்க்கவே முடியாது. கைப்பையும், பணப்பையும் பெண்களுடன் ஒட்டிப் பிறந்தவை. வீட்டைவிட்டு இறங்கி அடுத்த தெருவுக்குப் போனால் கூட, அதில் ஏதாவது ஒன்று கூடவே ஒட்டிக் கொண்டிருக்கும். கையில் எதுவும் இல்லாவிட்டால், அவர்களுக்கு ஒரு மாதிரியாக இருக்குமாம். ஆனால் கைப்பையில் என்ன வைத்திருக்கிறார்கள் என்பதை அறிவது மட்டும் ரொம்பக் கஷ்டமான காரியம்.
அதேபோன்று புடைவைக்கடைக்குப் போனால் பெண்களைத் திருப்திப்படுத்துவது மிகக் கஷ்டம். எத்தனை துணிகளைப் பார்த்தாலும் அவர்களுக்குத் திருப்தியே வராதாம். கடைசியில் ஏதாவது ஒன்றைத் தெரிவு செய்வார்கள் தான்... ஆனால் சிட்டைக்குப் பணம் கட்டும் வேளையில் கூட, இதை விட நன்றாக இருந்திருக்கலாம் என்று எண்ணுவார்களாம்.
பெரும்பாலான பெண்கள் தினசரி குளித்து அழகாக, கமகமவென்று காட்சி தருபவர்கள் என்றாலும் கூட, பல பெண்கள் தினசரி குளிக்கும் வழக்கம் இல்லாதவர்களாக இருக்கிறார்களாம். இருந்தாலும் எப்படி வாசனையாக திகழ்வது என்ற ரகசியம் அவர்களது கை நுனியில் இருக்குமாம்.
ஆண்களுக்கு முன்பு குறைவாகச் சாப்பிடுவது போல பெரும்பாலான பெண்கள் நடிக்கிறார்களாம். ஆனால் தனியாகச் சாப்பிடும்போது நிறையவே சாப்பிடுவார்களாம். ஆண்களை விட பெண்கள்தான் ரசித்து, ருசித்துச் சாப்பிடுவதில் வல்லவர்கள்.








# நட்பின் இலக்கணம்

இரு நண்பர்கள் வேறுபலருடன் சேர்ந்து பயணம் செய்த கப்பல் ஒன்று ஒரு தீவுக்கு அருகில் பாறையில் மோதி விபத்துக் குள்ளானது. அந்த இரு நண்பர் களைத் தவிர அந்தக்கப்பலில் பயணம் செய்த அனைவரும் இறந்து விட்டனர். அந்த இருவரும் நீந்தி அந்தத் தீவின் கரையை அடைந்தனர். ஆனால் அங்கு கண்ணுக்கு எட்டிய தூரம் வரை மனித நடமாட்டம் தென்படவில்லை. இருவருக்கும் கடும் பசி. அப்போது அந்த இருவரில் ஒருவர், நான் மேற்குப் பக்கம் சென்று ஏதாவது உணவு கிடைக்குமா என பார்த்து வருகிறேன். நீ எங்கேயும்போகாமல் இங்கேயே இரு என மற்றவருக்குச் சொல்லி விட்டுச் சென்றார். சிறிது நேரத்தில் மற்றவரோ கிழக் குப் பக்கமாக சிறிது தூரம் சென்று விட்டு ஒன்றும் கிடைக்காமல் இருந்த இடத்துக்கே வந்துவிட்டார். பசியினால் மிகவும் களைப் படைந்து கண்களை மூடி கடவுளிடம் உண வுக்காக உருக்கமாக மன்றாடினார். கண் விழித்த போது அவர் முன்னால் நிறையப் பழங்கள் இருந் தன. மகிழ்வோடு சாப்பிட்டுப் பசியைப் போக்கினார் அவர். பின்னர் தனி யாக இங்கே இருக்கிறோமே ஒரு துணை இருந்தால் நல் லாயிருக்குமே என்று வேண்டி னார். ஓர் அழகிய பெண் அவர் முன்னே வந் தார். மனிதர் வாழாத இந்தத் தீவில் இந்தப் பெண்



ணோடு இருந்து என்ன செய்ய, வேறு பக்கம் செல்லலாமே என்று நினைக்ககடலில் ஒருகப்பல் தென் பட்டது. சரி போகலாம் என்று அந்தப் பெண்ணையும் கூட்டிக் கொண்டு கப்பலுக்குப் போனார் அவர். அப்போது, உனது நண் பனை விட்டுவிட்டுச் செல் கிறாயே என்ற ஒரு குரலைக் கேட்டார். ‘அவன் ராசியில்லா தவன், அவ னோடு வந்து கப்பலும் உடைந்து விட்டது, உணவும் கிடைக்க வில்லை, உணவு தேடிப் போன வன் இதுவரை வரவில்லை’ என்று பதில் சொன்னார். அப்போது அந்தக் குரல், ‘அங்கே உனது நண்பன், கடவுளே எனது நண்பன் கேட்பதையெல்லாம் கொடு என்று உனக்காகச் கடவுளை வேண்டிக் கொண்டே உணவுக்காக அலைந்து கொண்டிருக்கிறான்’ என்று சொன் னது. அப் போது தான் தனது நண் பனின் நட்பை அந்த மனிதரால் உணர முடிந்தது.

# பேராசை பெருநட்டம்



தர்மபுத்தி, துஷ்டபுத்தி என்ற இரு இளைஞர்கள் நண்பர்களாயிருந் தனர். அவர்கள் வியாபாரத்துக் காக ஒரு நாள் பயணமொன்றை மேற்கொண்டனர். வழியில் ஒரு காட்டில் அவர்களுக்கு ஒரு புதை யல் கிடைத்தது. அதில் நிறையத் தங்கக் காசுகள் இருந்தன. தர்ம புத்தி, துஷ்டபுத்தியிடம் “நாம் இரு வரும் இதைச் சமமாகப் பங்கிட் டுக் கொள்ளலாம். ஊர் திரும்பி மகிழ்ச்சியாக வாழலாம் என் றான். ஆனால் துஷ்ட புத்தியோ, தர்மபுத்தியை வஞ்சிக்க நினைத் தான். அவன் தர்மபுத்தியிடம் இப்போது இந்தப் புதையலை நாம் ஊருக்குள் எடுத்துச் செல் லல் ஆகாது. தற்போது செல வுக்காக ஆளுக்குக் கொஞ் சம் எடுத்துக் கொள்வோம். மீதியை இந்த மரத்தடியில் புதைத்து வைப் போம். பின்னர் தேவைப்படும் போது வந்து எடுத்துக் கொள் ளலாம் என்று கூறினான்.

துஷ்டபுத்தியின் கெட்ட எண்ணத் தைப் புரிந்து கொள்ளாத தர்மபுத்தி, அதற்கு ஒப்புக்கொண்டான். இரு வரும் புதையலை மரத்தடியில் புதைத்துவிட்டு ஊர் வந்து சேர்ந் தனர். துஷ்டபுத்தி தனது கையி லுள்ள காசுகளைச் சீக்கிரமே செலவு செய்து விட்டான். மரத்தடியிலுள்ள மொத்த காசுகளையும் தர்மபுத்திக் குத் தெரியாமல் தாமே எடுத்துக் கொண்டால் என்ன என்ற எண்ணம் வந்தது. அவன் காட்டுக்குச் சென்று மொத்த தங்கக் காசுகளையும் எடுத்து வந்தான்.

சில மாதங்கள் கழிந்தன. தர்மபுத்தி துஷ்டபுத்தியிடம் வந்தான். மரத்தடி யிலுள்ள காசுகளில் கொஞ்சம் எடுத் துக் கொள்ளலாம் என்று அழைத் தான். இருவரும் காட்டுக்குச் சென் றனர். மரத்தடியில் தோண்டினர். அங்கே புதையல் பானையைக் காணவில்லை.காசுகளைதுஷ்டபுத்தி தான்எடுத்திருக்கவேண்டும்எனதர்ம புத்திக்குச் சந்தேகம் வந்தது. அவன் அதுபற்றி துஷ்டபுத்தியிடம் கேட் டான். துஷ்டபுத்தியோ தான் எடுக்க வில்லை என்று மறுத்தான். இறுதி யாக தர்மபுத்தி அரசனிடம் சென்று வழக்குத் தொடுத்தான்.

துஷ்டபுத்தி அரசனிடம் ‘அரசே! நான் நண்பனுக்குத் துரோகம் செய் பவன் அல்லன். காசுகளை நான் எடுக்கவில்லை, அதற்கு வனதேவ தையே சாட்சி’ என்றான்.

வன தேவதை வந்து சாட்சி சொல் லுமா உனக்காக? என்றார் அரசர். துஷ்ட புத்தியோ காட்டுக்குச் சென்று வனதேவதையிடம் கேட்டால் விடை கிடைக்கும் என்றான். மறு நாளே காட்டுக்குச் சென்று பார்ப் போம் என்று அரசர் முடிவு செய்தார்.

அன்றைய இரவு வீட்டுக்கு வந்த துஷ்டபுத்தி தனது தந்தையை அழைத் தான். நடந்த அனைத் தையும் கூறினான். பின்னர் தனது தந்தை யையே வன தேவதை போல் நடிக் கத் தயார் செய்தான். அன்றி ரவே ஒரு மர பொந்தில் தந்தையை ஒளிந் திருக்கச் செய்து அரசர் கேட்கும் போது ‘எனதுமகன்குற்றவாளிஅல் லன்’என்றுஅசரீரிபோலப்பேசவேண் டும் என்று கேட்டுக் கொண்டான்.

மறுநாள் அரசரும், துஷ்டபுத்தி மற்றும் தர்மபுத்தி ஆகியோரும் காட்டை அடைந்தனர். வனதேவ தையிடம் அரசர் கேள்வி கேட் டார். உடனே மரப்பொந்திலிருந்த துஷ்ட புத்தியின் தந்தை ‘நான் வன தேவதை பேசுகிறேன். எனது பிள்ளை குற்றம் செய்யவில்லை. தர்மபுத்தி தான் திருடினான்’ என்று அசரீரி போலக் கூறினார்.

அரசர் அந்த மரபொந்துக்குஅருகே சென்று சற்று நேரம் அமைதி யாகச் சிந்தித்தார். அரசருக்குச் சந்தேகம் வந்தது. தர்மபுத்தியோ அரசரிடம் இதில் ஏதோ சூழ்ச்சி இருப்பதாகவும், உண்மையை வெளிக் கொண்டு வர ஒரு யோசனை இருப்பதாகவும் கூறி னான். அரசர் அவ்வாறே செய்யத் தர்மபுத்தியை அனுமதித் தார்.

தர்மபுத்தி ஓடிச் சென்று காய்ந்த சருகுகளையும் குச்சிகளையும் திரட்டி வந்து, மரத்தடியில் போட் டுத் தீமூட்டினான். குபுகுபுவென தீபற்றிக் கொண்டது. தர்மபுத் தியின் செயலைக் கண்டு மன்னர் திகைத்தார்.

சற்று நேரத்தில் மரப்பொந்தில் ஒளிந்துகொண்டிருந்த துஷ்ட புத்தியின் தந்தைக்கு உடல் வெந்து போனது. மறுநொடியே மரப் பொந்திலிருந்து அவர் வெளியே குதித்தார்.

‘மன்னா! ஏதோ பிள்ளைப் பாசத் தால் எனது மகனுக்காக நான் தான் மரப்பொந்திலிருந்து வன தேவதை போலப் பேசினேன்” என்று உண்மையைக் கூறிவிட் டார். காசுகளைத் திருடியதோடு அல்லாமல், நண்பன் மீது பழியை யும் சுமத்திய துஷ்டபுத்திக்கு கடு மையான தண்டனை விதிக்கப் பட்டது.



# லட்டு

வட்டமான தட்டு
தட்டு நிறைய லட்டு
லட்டு மொத்தம் எட்டு
எட்டில் பாதி பிட்டு

எடுத்தான் மீதம் கிட்டு
மீதமுள்ள லட்டு
முழுவதும் தங்கை பட்டு
போட்டாள் வாயில் பிட்டு

கிட்டு நான்கு லட்டு
பட்டு நான்கு லட்டு
மொத்தம் தீர்ந்த லட்டு
மீதம் காலி தட்டு

# ஐ.தே.க. ஆட்சியில் இனவாதம் ஒழியும்

## கூறுகிறார் பெரோஸா

கொழும்பு, ஜூலை, 18

ஐக்கிய தேசிய கட்சி ஆட்சிக்கு வந்ததும் முதலில் இனவாதம் முற்றாக ஒழித்துக்கட்டப்பட்டு மூவின மக்களும் இலங்கையர்கள் என்ற அடிப்படையில் ஒற்றுமைப்படுத்தப்படுவர் என ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட வேட்பாளரும், கட்சியின் கொழும்பு மாவட்ட அமைப்பாளருமான பெரோஸா முஸம்மில் தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரை யாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

இந்த நாட்டில் பிறந்த அனைவருக்கும் இந்த நாடு சொந்தம். எமது நாட்டை அபிவிருத்தி செய்து சர்வதேச அளவில் முன்னுக்குக்கொண்டு வருவது எமது கடமை. இதற்கு முதலில் தேவை இன ஒற்றுமைதான். இன ஒற்றுமை இல்லா விட்டால் நாடு சீரழிந்துவிடும். ஆனால், இந்த இன ஒற்றுமையை சீர்குழைத்து நாட்டை அழிப்பதற்காக ஒரு குழு அலைந்துகொண்டு இருக்கின்றது.

இவர்கள் கடந்த காலங்களில் முஸ்லிம்களுக்கு இழைத்த கொடுமைகள் அதிகம். ஆனால், அந்த நிலைமை மாறிவிட்டது. அதற்குக் காரணம் ஐக்கிய தேசியக் கட்சிதான். இந்த நாடு சர்வதேச அரங்கில் முன்னுக்குவர வேண்டும். அனைத்து இன மக்களும் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்று விரும்புகின்றனர்.

அதற்காகவே பாடுபடுகின்ற ஒரேயொரு கட்சி ஐக்கிய தேசியக் கட்சி தான். இந்த கட்சியை வெற்றி பெறச் செய்வதன் மூலம்தான் அனைவரும் நிம்மதியாக வாழ முடியும். ஐக்கிய தேசிய கட்சி ஆட்சிக்கு வந்ததும் முதலில் இந்த இனவாதத்துக்கு முற்றாக சாவு மணி அடிக்கப்படும்.அதற்காக நாம் இந்தக் கட்சியை வெற்றி பெறச் செய்யவேண்டும்.

இவ்வாறன ஒரு கட்சியில் இந்த நாடாளுமன்றத் தேர்தலில்போட்டியிடுவதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். நான் வெற்றிபெற்றால் கொழும்பில் நான் முன்னெடுத்து வரும் அபிவிருத்தித் திட்டத்தைமேலும் விரிவாக்குவதோடு இனவாதத்துக்கு எதிராக அர்ப்பணிப்புடன் பாடுபடுவேன்–என்றார். (த–10)

# துப்பாக்கிக்கு பதில் புகைப்படக் கருவி

கொழும்பு, ஜூலை, 18

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலின்போது தேர்தல் சட்டங்களை மீறுவதைத் தடுக்கும் வகையில் துப்பாக்கிக்குப் பதிலாகப் புகைப்படக் கருவிகளைப் பயன்படுத்த பொலிஸாருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆலோசனையை தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய வழங்கியுள்ளார்.

தேர்தல் சட்டதிட்டங்களை மீறுபவர்களைப் புகைப்படம் எடுத்து வழக்குத் தொடருமாறும் தாம் ஆலோசனை வழங்கியுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

ஏதேனும் தேர்தல் பரப்புரை நடவடிக்கை காரணமாக நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சைக்கு பாதிப்பு ஏற்படுமானால் அந்த பரப்புரை நடவடிக்கைக்குப் பொறுப்பான தரப்பினர் அதற்கு பொறுப்புக் கூற வேண்டும் எனவும் தேர்தல் ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார். (த–10)

**விற்பனைக்கு**

ஒரு தடவை குட்டி ஈன்ற, 1½வயது நிரம்பிய LION SHEPERT நாய் விற்பனைக்கு உண்டு விலை - 20,000/=

(63246) Tel- 077 883 0294

**யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் விசேட கலந்துரையாடல்**

விடயம்:- கல்லூரியின் 200 ஆவது ஆண்டு நிறைவு விழா தொடர்பாக பழைய மாணவர்கள் அனைவருடனுமான கலந்துரையாடல்.

காலம்:-ஞாயிற்றுக்கிழமை 19.07.2015 பி.ப 4.30 மணி

இடம்:- கல்லூரியின் றொமேன் மண்டபம்

இக்கலந்துரையாடலில் அனைத்து பழைய மாணவர்களையும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பழைய மாணவர் சங்கம்
யாழ் மத்திய கல்லூரி.

(63056)

**திருமணசேவை**

பட்டதாரிகள், மருத்துவர்கள், பொறியியலாளர்கள், ஆசிரியர்கள், வங்கியாளர்கள் உட்பட உள்நாட்டு , வெளிநாட்டு மணமக்களின் ஜாதகங்கள் அநேகம் எம்மிடம் உண்டு. மணமக்களைத்தேடுவோர் நேரில் சந்திக்கவும்.

சிவா திருமணசேவை
100 அரசடி வீதி
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
(யாழ் இந்து மகளிர் கல்லூரியடி)
T.P: 077 899 6281

(63243)

# மிதக்கும் ஆயுதக் களஞ்சியத்தை இடம் மாற்றுவதற்கு அனுமதி

கொழும்பு, ஜூலை 18

காலி துறைமுகத்தில் நங்கூரம் இடப்பட்டுள்ள எவன்காட் நிறுவனத்துக்குச் சொந்தமான மிதக்கும் ஆயுத களஞ்சியசாலையை வேறு கப்பலுக்கு மாற்றுவதற்குக் காலி பிரதான நீதிவான் நிலுபூலி லங்காபுர, அந்த கப்பலுக்குச் சொந்தமான சிலோன் சிப்பிங் நிறுவனத்துக்கு அனுமதியளித்தார்.

இந்த ஆயுதக் களஞ்சியசாலை இருக்கின்ற 'மஹநுவர' என்ற கப்பலின் காப்புறுதிக் காலம் நிறைவடைந்துள்ளது என்பதனாலும் அந்தக் கப்பல் மிகவும் பழையது என்பதனாலும், ஏதாவது ஆபத்துகள் ஏற்படுவதற்கு வாய்ப்பிருக்கின்றது. அவ்வாறு ஆபத்து ஏற்படுமாயின் பெரும் சேதங்கள் ஏற்படுவதற்கு வாய்ப்புள்ளது.

ஆகையினால், அந்தக் களஞ்சியசாலையை 'மஹாவலி' என்ற வேறு கப்பலுக்கு மாற்றுவதற்கு இடமளிக்குமாறு அந்த நிறுவனம் நீதிமன்றத்திடம் கோரியிருந்தது. (த)

**விற்பனைக்கு**

கலர் பிறிண்டர், றெஸ்டோரன்ட் கண்ணாடிக்கதவுகள், Bill போடும் Dotmatrix பிறிண்டர், CCTV கமராக்கள், EBPAX இன்டர் கொம் சாதனங்கள், கிடாரங்கள், சமையல் பாத்திரங்கள் விற்பனைக்கு உண்டு.

(63245) 078 521 0575

**அறை வாடகைக்கு**

அரச பணிபுரியும் பெண்களுக்கு மட்டும் நல்லூர் பகுதியில் அறைகள் வாடகைக்கு உண்டு.

(63244) 076 708 2370

**கண்ணீர் அஞ்சலி**

**இரத்தினம் சிவானந்தலிங்கம்**

தென்மராட்சி பிரதேச செயலகத்தின் நிதிக்கிளையில் ஓய்வூதிய உத்தியோகத்தராக கடமையாற்றும் **திருமதி அனுசா திவாகரன்** அவர்களின் அன்பு தந்தையார் **இரத்தினம் சிவானந்தலிங்கம்** அவர்களின் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரிசங்கம்
பிரதேசசெயலகம்
தென்மராட்சி

(C 17979)

## கேள்வி அறிவித்தல்
## வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை (மல்லாகம்)
## மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதி
## (சுற்றுலாத்துறை அபிவிருத்தி)

01.கீரிமலைக் கேணியின் (ஆண்கள்) படிக்கட்டுகள் மற்றும் சுற்றுப்புறம் சீரசெய்தல் — ஒப்பந்த இல:-NP/14/41(14)/05/PSDG/01/2015

02.மலசலகூடம் அமைத்தலும் குடிநீர் வசதி ஏற்படுத்தலும் - கீரிமலை — ஒப்பந்த இல:-NP/14/41(14)/05/PSDG/02/2015

01. வலிகாமம் வடக்கு பிரதேச சபை மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதியினைக் கொண்டு கீழ்க்காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத் திட்டங்களுக்கு கொடுப்பனவிற்கென பயன்படுத்த உத்தேசித்துள்ளது.
02. தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை (மல்லாகம்) வட மாகாணம், தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட கட்டுமான வேலைகளுக்கு கோருகின்றார்.
03. கேள்விகோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
04. கேள்வி பெறத்தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப்பட்டியலில் (Black List) சேர்த்துக்கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் கட்டட அமைப்புக்கான இக்ராட் (ICTAD) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
05. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) பகுதி 5இல் காட்டப்பட்டுள்ளது.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை (மல்லாகம்) தொலைபேசி:- 0212241130, தொலைநகல்:- 0212241130இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாள்களில் 07.08.2015வரை காலை 09.00 மணிமுதல் 14.00 மணிவரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.
07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தலைவர்,பெறுகைக்குழு, வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை (மல்லாகம்) எனும் இடத்திலிருந்து 18.07.2015ஆம் திகதியிலிருந்து 07.08.2015 வரை காலை 09.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.1500.00 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படவேண்டும்.
08. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தலைவர், பெறுகைக்குழு ,வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை (மல்லாகம்) எனும் முகவரிக்கு 07.08.2015ஆம் திகதி 14.30மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படவேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படவேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரரின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
09. கேள்விகளானது கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியில் இருந்து வேலை 63 (அறுபத்தி மூன்று- 09.10.2015) நாள்கள் வரையும் செல்லுபடியாகும்.
10. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| இல | ஒப்பந்த இல | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியனில்) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 01 | NP/14/41(14)/05/PSDG/01/2015 | கீரிமலைக் கேணியின் (ஆண்கள்) படிக் கட்டுகள் மற்றும் சுற்றுப்புறம் சீர் செய்தல் | 3.46 | 03 மாதம் | C8 அல்லது அதற்கு மேல் | 40,000.00 | 06.11.2015 |
| 02 | NP/14/41(14)/05/PSDG/02/2015 | மலசலகூடம் நிர்மாணித்தலும் குடிநீர் வசதி ஏற்படுத்தலும் - கீரிமலை | 0.84 | 03 மாதம் | C9 அல்லது அதற்கு மேல் | 10,000.00 | 06.11.2015 |

11. கேள்விகோரல் பற்றியமுன் கூட்டிய கூட்டம் 24.07.2015ஆம் திகதி பி.ப.14.30 மணிக்கு வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை (மல்லாகம்) அலுவலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்த செலவில் கலந்துகொள்ளமுடியும்.

தலைவர்,
உள்ளூர் அதிகாரபெறுகைச்சபை,
காங்கேசன்துறை.(மல்லாகம்)
18.07.2015.

வலிகாமம் வடக்கு பிரதேச சபை,

(C/17976)(10.6.3)

## மரண அறிவித்தல்

### தம்பிஐயா சதாசிவம்



ஆஸ்பத்திரி வீதி, சங்கானையைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனி (Berlin) ஐ வதிவிடமாகவும் கொண்ட தம்பிஐயா சதாசிவம் 13.07.2015 திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிஐயா - செல்லம்மா தம்பதிகளின் அருமை மகனும் காலஞ்சென்றவர் களான இராமசாமி - தையல்முத்து தம்பதிகளின் அன்பு மருமகனும் கமலா தேவி அவர்களின் அன்புக் கணவரும் சதீஸ்குமார் (அப்பன்), சத்தியலதா, தமிழ்செல்வி, பிரேமலதா, கேமலதா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ரேணுகா, கேதீஸ்வரன், தசரதன், சுகந்தன், ஜீவகுமார் ஆகியோரின் அன்பு மாமனாரும் சுப்பிரமணியம், சிவசோதி, குணசேகரம், வைத்திலிங்கம், பாலேந்திரன், கஜேந்திரன், காலஞ்சென்றவர்களான மகாதேவன், நவரத்தினம், ரஞ்சிதமலர் ஆகியோரின் அன்புச் சகோதரரும், சந்துஸ், சதூரன், சௌமியா, சங்கவன், சாரண், கவிசா, அக்சயா, அபிசயா, அவிஸ் ஆகியோரின் பாசமிகு பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 20.07.2015 திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் Krematorium Berlin Ruhleben Am Hain 1, 13597, Berlin Germany எனும் முகவரியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் : த.சுப்பிரமணியம் (சகோதரர்)
(ஓய்வு பெற்ற ஆசிரியர் - நவாலி வடக்கு)
த.பரமேஸ்வரன் (மைத்துனர் - சங்கானை)

ஆஸ்பத்திரி வீதி,
சங்கானை.

## மரண அறிவித்தல்

### திருமதி பவளம் கந்தையா



பாற்பண்ணை வீதி திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பவளம் கந்தையா நேற்று (17.07.2015) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காந்தி - சின்னப்பிள்ளை தம்பதியினரின் மகளும் காலஞ் சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும் பவானி, காலஞ்சென்ற நித்தியானந்தராசா ஆகியோரின் பாசமிகு தாயாரும் இரஞ்சிதமலர்,ரவி காலஞ்சென்ற மீனலோஜினி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் சின்னம்மா, காலஞ்சென்ற பொன்னுத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரியும் பவிதா, பவிதன், சுகந்தன், சுதன், துசேந்து (டோகா), ரஞ்சித் கண்ணா, நிவேதா, ஜனா(பிரான்ஸ்), ஜெனி, தினேஸ், திவிதரன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் தர்சன், நிரோஜா, மகி ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (19.07.2015) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் - குடும்பத்தினர்
பாற்பண்ணை வீதி, திருநெல்வேலி.

## மரண அறிவித்தல்

### சி. க. நாகமணி (ஜோதிடர்)



தோற்றம் : 24.08.1937
மறைவு: 16.07.2015

காரைநகர்விளானை அழகா புரியை பிறப்பிடமாகவும், மலேசி யாவை வசிப்பிடமாகவும் தற்போது நியூஸிலாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட நாகமணி அவர்கள் 16.07.2015 வியாழக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் கந்தையா- பொன்னுப் பிள்ளை தம்பதியரின் மூத்த புதல்வனும் பொன்னையா சிவகாமி (சுழிபுரம்) தம்பதியரின் மருமகனும் தவமணிதேவி யின் (நியூஸிலாந்து) அன்பு கணவரும், குணதீசன் (நியூஸிலாந்து) ஸ்ரீனிவாசன், விக்கினேஸ்வரன் (அவுஸ்ரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜொய்சி (நியூஸிலாந்து) லச்சனா (அவுஸ்ரேலியா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் டினேஸ் சோனியா (நியூஸிலாந்து) ஆகியோரின் அன்புப் பேரனாரும் காலஞ் சென்ற அம்பலம்(மலேசியா) மற்றும் பாலசிங்கம் (கொழும்பு) காலஞ்சென்ற சிவலிங்கம் (சுழிபுரம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் நாளை (19.07.2015) ஞாயிற்றுக்கிழமை 150,Central park Drive, Henderson, Auckland New zealand இல் 2.00 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.


தகவல்: குடும்பத்தினர்
மனைவி, பிள்ளைகள்
006 496 209 401

(63236)(3.5.7)

## மரண அறிவித்தல்

### சண்முகம் கிருஷ்ணமூர்த்தி

(ஓய்வுபெற்ற SINGER COMPANY உத்தியோகத்தர்)



சுழிபுரம் மேற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சண்முகம்(கங்காணியார்) கிருஷ்ணமூர்த்தி நேற்று (17.07.2015) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம்- இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ் சென்றவர்களான மலேசியா சிற்றம்பலம்- சிவக் கொழுந்து தம்பதிகளின் அன்பு மருமகனும் இராஜேந்திரம்மாவின் அன்புக்கணவரும் காலஞ் சென்ற வேலுப்பிள்ளை மற்றும் சறோஜினி தேவி(பிரான்ஸ்), லோகேஸ்வரன், நந்திகாதில கேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் இராஜகீதம், இந்திரா, அருள்நேசன் ஆகியோரின் அன்புத்தந்தையும் காலஞ்சென்ற குருபரன் மற்றும் தவக்குமார், மஞ்சுளா ஆகியோரின் அன்பு மாமனாரும் பமீனா, சாஜிதன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.07.2015) சனிக்கிழமை பி.ப ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :-
குடும்பத்தினர்.
021 225 1290

சுழிபுரம் மேற்கு. (63248)

## மரண அறிவித்தல்

### பசுபதி பொன்னுத்துரை



வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும் உப்புக் குளம் மன்னாரை வசிப்பிடமாகவும் கொண்ட பசுபதி பொன்னுத்துரை 16.07.2015 வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பசுபதி சிவயோகம் தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ் சென்றவர்களான மயில்வாகனம் அன்னப்பிள்ளை தம்பதியினரின் மருமகனும் தனலட்சுமியின் அன்புக் கணவரும் ஜெயந்தி, ஜெயக்குமார்(கனடா), புஸ்பராசா(பிரான்ஸ்), ஜெயகௌரி, ஜெயசிறி ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற வர்களான ஐயாத்துரை, மனோன்மணி, சோமசுந்தரம் மற்றும் செல்வநாதன்(அவுஸ்திரேலியா) ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற வர்களான பார்வதி, சின்னராசா, சுப்பிரமணியம் மற்றும் நாகராசா, தங்கராசா, சண்முகராசா, மாணிக்கம் ஆகியோரின் மைத்துனரும் மருதலிங்கம், நந்தினி (கனடா), கமலேஸ்வரி(பிரான்ஸ்), நகுலன், கிருபாகரன் ஆகியோரின் மாமனாரும் சங்கீதா காலஞ்சென்ற வினோதா மற்றும் தீபிகா, கோபி, நவீன்(கனடா), பானுஷா, கதுஷன், ஜகர்ஷினி, ஹரிஸ்ராஜ் (பிரான்ஸ்) ஆகியோரின் பேரனும் காருஜன், மதுஷன், அக்ஷாயினி, ஆகியோரின் பூட்டனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் (20.07.2015) திங்கட்கிழமை மு.ப 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மன்னார் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல் - குடும்பத்தினர்
மூர் வீதி, உப்புக்குளம், மன்னார். 077 485 8955

## மரண அறிவித்தல்

### இராசலிங்கம் நந்தகுமார்



கல்வியங்காட்டைப் பிறப்பிட மாகவும் கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட இராசலிங்கம் நந்தகுமார் அவர்கள் 2015.07.16 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் இராசலிங்கம் - சரஸ்வதி தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற தம்பிராசா மற்றும் தங்கரத்தினம் தம்பதி யரின் மருமகனும் சிவசோதியின் பாசமிகு கணவரும் தனுஷன், நிரோஷன், தனுசியா (மாணவி, 2017 வர்த்தகப்பிரிவு யாழ் இந்து மகளிர் கல்லூரி) ஆகி யோரின் பாசமிகு தந்தையும் கருணாகரன் (கனடா), ஜெயக்குமார் (கனடா), சிவகுமார் (நல்லூர் ப.நோ.கூ சங்கம்), ஜெயக்குமாரி (லண்டன்), கருணாவதி, செந்தில்குமார்(கனடா), சிவாஜினி ஆகியோரின் சகோதரனும் சுபாசினி (கனடா),சுபாசினி(கனடா), ராஜ்குமார்(லண்டன்), முருகதாஸ், சுபாஜினி (கனடா), சிவகுமாரன், தவமலர், தர்மகுலசிங்கம், புஸ்பராணி, றஞ்சினிதேவி, குமாரகுலசிங்கம், இந்திரநாதன், தவநாதன், காலஞ்சென்ற சிவலிங்கம் மற்றும் சிவமணி, அருட்சோதி ஆகியோரின் மைத்துனரும், இரத்தினசிங்கம் அன்னலட்சுமி தம்பதியரின் பெறாமகனும் கனகலிங்கம், குணபாலசிங்கம், தில்லையம்பலம் ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(2015.07.19) ஞாயிற்றுக்கிழமை காலை 09 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோண்டாவில் கிழக்கு கட்டை ஆலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பழநியாண்டவர் கோவிலடி,இருபாலை வீதி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.
0776181454

தகவல் -
குடும்பத்தினர்

## வருடாந்த பரிசளிப்பு விழா

கைதடி, ஜூலை 18

கைதடி கலைவாணி வித்தியாலயத் தின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை காலை 9 மணியளவில் பாடசாலை அதிபர் நா.கருணாகரன் தலைமை யில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி கல்விப்பணிப்பாளர் சு. கிருஷ்ணகுமாரும், சிறப்பு விருந்தின ராக சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதி பர் நசாவேஸ்வரனும், கௌரவ விருந் தினராக கைதடி மேற்கு சரஸ்வதி சன சமூக நிலையத் தலைவர் ச. மகேந்திர னும் கலந்துகொள்வர். மாணவர்களின் கலை நிகழ்வுகளும் பரிசில் வழங்கல் என்பன இடம்பெறும். (த-131)

## 5 பிள்ளைகள் பெறுவாராம் ஹிருனிகா

கொழும்பு, ஜூலை 18

திருமணத்துக்கு முன்னரே தான் கர்ப் பம் தரித்ததாக சிலர் வதந்திகளைப் பரப்பி வருகின்றனர். அவ்வாறு கூறுப வர்கள், இன்னும் ஒன்பது மாதங்க ளில் உண்மையை அறிந்துகொள் வார்கள் என்று தெரிவித்துள்ள மேல் மாகாண சபைஉறுப்பினர் ஹிருனிகா பிரேமசந்திர, தனது திருமண வாழ் வில், ஐந்து பிள்ளைகளைப் பெற்றெ டுக்கப் போவதாகவும் கூறியுள்ளார். சில தினங்களுக்கு முன்னர் திருமண பந்தத்தில் இணைந்த ஹிருனிகா தொடர் பில் தற்போது சில வதந்திகள் பரவி வருகின்ற நிலையிலேயே, அது தொடர் பில் அவர், தனியார் ஊடகமொன் றுக்கு விளக்கமளித்துள்ளார். அதன் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள் ளார்.

இது குறித்து தொடர்ந்து கருத்து தெரிவித்துள்ள ஹிருனிகா, 'நான் கர்ப்பம் தரித்துள்ளதாலேயே திடீரென திருமண பந்தத்தில் இணைந்ததாகச் சிலர் கூறுகின்றனர். நான் அவர்களுக்கு ஒரே ஒரு விடயத்தை மாத்திரமே சொல்ல விரும்புகின்றேன். ஒன்பது மாதங்களில் பார்த்துக்கொள்ளுங்கள் எது உண்மை என்று' எனக் கூறினார்.

ஹிரான் என்னுடைய மூன்றாவது காதலன். என் தந்தையைப்போல் என்னைப் பார்த்துக் கொள்ளும் ஒருவரையே நான் இது வரை காலமும் தேடிக் கொண்டிருந்தேன். அது தற்போது நிறைவேறியுள்ளது.

எங்களுடைய திருமண வாழ்க்கயை எண்ணி நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இந்த திருமண வாழ்க்கையில் நான் ஐந்து பிள்ளைகளைப் பெற்றுக் கொள்வேன்' என்று ஹிருனனிகா, மேலும் கூறினார். (த)

உதயன்
விளம்பரம்
advt@uthayan.com
0215671111

# காணாமற்போனது மைத்திரியின் படம்

கொழும்பு, ஜூலை 18

கொழும்பு 7இல் உள்ள எதிர்க்கட்சித் தலைவரின் செயலகத்தில் மாட்டப்பட்டிருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் படம் திடீரென அகற்றப்பட்டுள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவராக மைத்திரிபால சிறிசேனவே இருக்கும் நிலையில், கொழும்பு 7இல் உள்ள எதிர்க்கட்சித் தலைவரின் செயலகத்தில் அவரது படம் மாட்டப்பட்டிருந்தது.

எனினும், நேற்று முன் தினம் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவர்கள் அங்கு செய்தியாளர் மாநாட்டை நடத்திய போது, மைத்திரிபால சிறிசேனவின் படம் அகற்றப்பட்டு, அங்கு வெற்றிலைச் சின்னத்துடன் கூடிய பதாகை ஒன்று பொருத்தப்பட்டிருந்தது.

மகிந்த ராஜபக்‌ஷவுக்கு எதிராக மைத்திரிபால சிறிசேன வெளியிட்ட கருத்துக்களை அடுத்து, அவரை சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவியில் இருந்து நீக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

எனினும், கட்சியின் மத்திய செயற்குழுவைக் கூட்ட நீதிமன்றம் மூலம் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, சிறிலங்கா சுதந்திரக் கட்சியினதோ, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினதோ தலைவர் பதவியில் இருந்து மைத்திரிபால சிறிசேனவை நீக்குவதற்குத் தாம் திட்டமிடவில்லை என்று சுசில் பிரேமஜெயந்த தெரிவித்திருந்தார்.

ஆனாலும், மைத்திரிபால சிறிசேனவின் படம் எதிர்க்கட்சித் தலைவரின் செயலகத்தில் இருந்து அகற்றப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (த)

# சஜித் மீதான வழக்குக்கு ஆதாரம் வழங்கத் திகதி

கொழும்பு, ஜூலை 18

வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிகளின் நிதியை பயன்படுத்தி, வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சர் சஜித் பிரேமதாஸவினதும் ஐ.தே.க. உறுப்பினர்களினதும் அரசியல் ஆதரவாளர்களுக்கு கடன் வழங்கப்படுவதாகச் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு ஜூலை 29ஆம் திகதியில், ஆதாரம் வழங்குமாறு உயர் நீதிமன்றம், நேற்று முன்தினம் வியாழக்கிழமை அறிவித்துள்ளது.

இந்த மனுவை அகில இலங்கை சமுர்த்தி அபிவிருத்தி மற்றும் விவசாய ஆராய்ச்சி உதவியாளர் சங்கமும் அதன் பிரதான உறுப்பினர் இருவரும் தாக்கல் செய்தனர்.

மனுதாரர் சார்பில், ஜனாதிபதி வழக்குரைஞர் மனோகர டி சில்வா முன்னிலையானார். சஜித் பிரேமதாஸ சார்பில் ரெமேஷ் டி சில்வா, சாலிய பீரிஸ் சுகத் கல்டெராகவும் முன்னிலையாகினர். பிரதமர் சார்பில் ஜி.ஜி. அருள் பிரகாசம் வழிப்படுத்தலில் மூன்று பிரபல வழக்குரைஞர்கள் முன்னிலையாகினர்.

சமுர்த்திப் பயனாளிகளுள் தெரிவுசெய்யப்பட்ட சிறிய பிணையாளர் குழுவுக்கு வெளியே உள்ளவர்களான, கடன்களுக்கு சிபாரிசு செய்ய அனுமதிக்கும் சுற்றறிக்கை சமுர்த்தி வங்கித் திட்டத்தை அரசியல் சலுகைகள் வழங்க பயன்படுத்த வழிவகுத்துள்ளதென மனுதாரர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இந்த குற்றச்சாட்டு தொடர் பில் நிதி மோசடி புலனாய்வு பிரிவுக்கு முறையிடச் சென்றபோது, அவர்கள் முறைப்பாட்டை ஏற்க மறுத்து, பிரதமரால் ஸ்தாபிக்கப்பட்டுள்ள விசேட புலனாய்வு பிரிவு அனுப்பிவைக்கும் முறைப் பாடுகளை மட்டுமே தாங்கள் ஏற்பதாக கூறியதாக, மனுதாரர் முறையிட்டுள்ளார். (த)

# பொலிஸாருக்கு 'டிமிக்கி' கொடுத்து வந்த கசிப்பு உற்பத்தியாளர் கைது

தென்மராட்சி, ஜூலை 18

மட்டுவில் சந்திரபுரம் பகுதியில் நீண்டகாலம் பொலிஸாருக்கு டிமிக்கி கொடுத்து வந்த கசிப்பு உற்பத்தியாளர் நேற்று அதிகாலை கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளையில் மறைந்திருந்த சாவகச்சேரி பொலிஸாரிடம் வசமாக மாட்டிக் கொண்டார்.

நீண்ட காலமாக மட்டுவில் சந்திரபுரம் பகுதியில் கசிப்பு உற்பத்தி செய்யப்படுவதாக பல தடவைகள் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தபோதெல்லாம் குறித்த நபரின் வீட்டைப் பொலிஸார் சோதனையிட்டபோது கண்டுபிடிக்க முடியாமல் போயுள்ளது.

இப் பகுதியில் கசிப்பு உற்பத்தி தொடர்பாக கடந்த மாதம் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற பிரதேச கூட்டத்தில் கலந்து கொண்ட மக்களால் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பாகப் பொலிஸார் இரகசியமாகக் கண்காணிப்பில் ஈடுபட்டனர். பொலிஸாரின் நடமாட்டத்தை அவதானிக்கும் சிலர் உடனுக்குடன் தகவல் கொடுப்பதால் குறித்த நபரைக் கையும் மெய்யமாகப் பிடிக்கமுடியவில்லை.

இந்நிலையில் நேற்று அதிகாலை அப் பகுதியில் மறைந்திருந்த பொலிஸார் திடீரென குறித்த நபரது வீட்டைச் சுற்றிவளைத்து தேடுதல் நடத்தினர். அப்போது அவர் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டிருந்தபோது கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டார்.

இவரிடமிருந்து 25 லீற்றர் கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தும் கோடாவும், இரண்டு லீற்றர் உற்பத்தி செய்யப்பட்ட கசிப்பையும் கைப்பற்றியதுடன் அந்த நபரையும் கைது செய்து பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர்.

இந்த நபர் ஏற்கனவே கசிப்பு விநியோகத்தில் ஈடுபட்டவேளை பொலிஸாரிடம் அகப்பட்டு பல தடவைகள் நீதிமன்றினால் தண்டிக்கப்பட்டவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

விசாரணையில் பொலிஸாரின் வருகையைத் தெரிவிக்கப் பலருக்குப் பணம் கொடுத்து உளவாளியாக வைத்திருந்தமை தெரியவந்துள்ளதாகப் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (த-9)

# மைத்திரி 'அவுட்'


கொழும்பு, ஜூலை 18

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை கைகழுவிவிட்டு மஹிந்தவின் முழுமையான தலைமைத்துவத்துடன், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தமது தேர்தல் பரப்புரையை நேற்று உத்தியோகபூர்வமாக ஆரம்பித்தது.

தேர்தல் பரப்புரைக் கூட்டம் இடம்பெற்ற மேடையில் அமைக்கப்பட்டிருந்த பதாகையில், கட்சித் தலைவர் என்ற அடிப்படையில் ஜனாதிபதி மைத்திரியின் புகைப்படம் காட்சிப் படுத்தப்பட்டிருக்கவில்லை. மஹிந்தவின் புகைப்படம் மட்டுமே பொறிக்கப்பட்டிருந்தது.

அதுமட்டுமல்ல, கூட்டத்தில் உரையாற்றிய சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் அநுர பிரியதர்ஷன யாப்பா, எதிர்க்கட்சித் தலைவரும், சு.கவின் சிரேஷ்ட உப தலைவருமான நிமல் சிறிபால டி சில்வா, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த, தினேஷ் குணவர்த்தன ஆகியோர் கூட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறித்து எவ்வித கருத்தையும் வெளியிடவில்லை. முழுமையாக மஹிந்தவின் பெருமையை மட்டுமே கூறியதை அவதானிக்க முடிந்தது.

மேலும், கூட்டத்தில் உரையாற்றிய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பெரும்பான்மையான உறுப்பினர்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை கடுமையாகச் சாடி உரையாற்றினர்.



பிரதான மேடைக்கு அருகில் அமைக்கப்பட்டிருந்த இரு பெரிய பதாகைகளிலும் மஹிந்தவின் படம் மட்டுமே பொறிக்கப்பட்டிருந்தது. ஆதரவாளர்களும் மஹிந்தவின் புகைப்படத்தை மட்டுமே கையில் ஏந்தியிருந்தனர்.

தேசத்திற்கு உயிர் கொடும்போம், புதிதாக ஆரம்பிப்போம்' என்ற தொனிப்பொருளில் ஐ.ம.சு. முன்னணியின் தேர்தல் பரப்புரை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. புதிதாக ஆரம்பிப்போம் என்பதனூடாக ஜனாதிபதி மைத்திரியைப் புறக்கணித்து, புதிய பயணத்தை ஐ.ம.சு.மு. முன்னோக்கிக் கொண்டுசெல்லப் போகின்றதா என்ற சந்தேகத்தை ஏற்படுத்தி யுள்ளது.

தலைமைத்துவம் தொடர்பான சர்ச்சை தற்போது சு.க. மற்றும் ஐ.ம.சு.முன்னணியில் எழுந் துள்ள நிலையில், நேற்றைய கூட்டமானது ஜனாதிபதி மைத்திரியைப் புறக்கணிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. (த-சி)

## ஓராண்டு நினைவஞ்சலி

### செல்வி கந்தசாமி பவானி



தோற்றம் 31.03.1961

மறைவு 30.07.2014

திதி - பூர்வபக்க திருதியை


பாரினில் வந்துதித்த பாசமிகு
பவானியே
பதை பதைத்து நாம் நிற்க பாதியிலே
ஏன் பிரிந்தாய்
ஓயாது உன் நினைவு உறங்காது
எம் மனது
விழி சொரியும் துளிகளுடன்
என்றென்றும் உன்னுடன் நாம்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

குடும்பத்தினர்.
280 ஆவது கி.மீ. கட்டை,
A9 வீதி வண்ணாங்கேணி, பளை.

## மரண அறிவித்தல்

### சதாசிவம் கணேஸ்வரன்

(BA, Dip in Edu, MED, SLPS II அதிபர் புங்குடுதீவு மகாவித்தியாலயம்)



நயினாதீவைப் பிறப்பிடமாகவும் யாழ் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் கணேஸ்வரன்(அதிபர் புங்குடுதீவு மகாவித்தியாலயம்) 16.07.2015 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வீ.சதாசிவம் ச.சௌந்தரம் ஆகியோரின் அன்பு மகனும் லோகாம்பிகை (கொழும்பு), கமலாம்பிகை (கனடா), நகுலேஸ்வரன்(பிரான்ஸ்) காலஞ்சென்ற மகேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் மாணிக்கவாசகர், கதிரவேலு, கருணாதேவி, அம்பிகாவதனி ஆகியோரின் மைத்துனரும் பிரபா(ஆசிரியை) மணிகண்டன், கம்சா(கனடா), கருணாகரன்(கனடா), காங்கேயன்(கனடா), சாலினி (ஆசிரியை), தரணிதரன்(லண்டன்) ஆகியோரின் ஆசை மாமனாரும் வித்தியா,தர்மேஸ்வரா(பிரான்ஸ்) ஆகியோரின் அருமை சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (18.07.2015) சனிக்கிழமை காலை 8.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை கொழும்பு ஜெயரட்ன மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்படும்.

(19.07.2015) ஞாயிறு அன்று யாழ் புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மறுதினம் திங்கட்கிழமை (20.07.2015) அன்று கொழும்பு ஜெயரட்ன மலர்ச்சாலையில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று பொறளை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு :-
லோகாம்பிகை 077 445 7516

(c 17981)

தகவல் :-
குடும்பத்தினர்.

## மட்டுவில் வளர்மதி பரிசளிப்பு விழா இன்று

மட்டுவில் ஜூலை 18

மட்டுவில் வளர்மதி சனசமூக நிலையத்தின் பொன் விழாவை முன்னிட்டு கரப்பந்தாட்ட இறுதிப் போட்டியும் பரிசளிப்பு நிகழ்வும் இன்று இரவு 7.30 மணியளவில் மட்டுவில் வளர்மதி விளையாட்டரங்கில் தலைவர் சி.சுஜீவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் உதயன் குழுமத் தலைவருமான ஈ. சரவணபவன் கலந்து கொள்வார்.

கரபந்தாட்டத்தில் வெற்றியீட்டும் அணிக்கு பிரதம விருந்தினர் பரிசில்களை வழங்கி கௌரவிப்பார். (த)

## துறைமுக நகர் திட்டத்தை நிறுத்துமாறு அழுத்தம் கொடுத்தார் அஜித் டோவல்

### கோத்தா குற்றச்சாட்டு

சீனாவின் முதலீட்டில் மேற்கொள்ளப்படும் கொழும்புத் துறைமுக நகரத் திட்டத்தை நிறுத்துமாறு மஹிந்த ராஜபக்ஷ அரசிடம், இந்தியப் பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல், அழுத்தம் கொடுத்தார் என்று, முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடந்த கருத்தரங்கு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இந்த தகவலை வெளியிட்டார்.

இந்தியாவில் பா.ஜ.க. அரசு பதவிக்கு வந்த பின்னர், இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவலைச் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தேன்.

கொழும்புத் துறைமுக நகரத் திட்டத்தை நிறுத்த வேண்டும் என்பதே அவரது முதன்மையான கோரிக்கையாக இருந்தது.

எமது அரசிடம் அந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டது போலவே, இப்போதைய அரசிடமும், நிச்சயம் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கும்.

துறைமுக நகரத் திட்டம் இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும் என்பதே அவர் கூறிய காரணம். இந்தியாவின் பாதுகாப்புக்கு கொழும்புத் துறைமுக நகரைத் திட்டத்தினால் அச்சுறுத்தல் ஏதும் ஏற்படாது என்று முன்னைய அரசு உத்தர வாதம் அளித்தது.

அந்தக் கோரிக்கையை தற்போதைய அரசு எவ்வாறு எதிர்கொள்கிறது என்று எனக்குத் தெரியவில்லை என்றும் அவர் கூறியுள்ளார். (த)

## மைத்திரி குறித்து வாய் திறக்காத மஹிந்த

கொழும்பு, ஜூலை 18

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் பரப்புரை நேற்று அநுராதபுரத்தில் ஆரம்பமானது. இதில் முன்னாள் ஜனாதிபதியும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் குருநாகல் மாவட்ட வேட்பாளருமான மஹிந்த ராஜபக்ஷ உட்படப் பலர் கலந்துகொண்டு உரையாற்றினர். ஆனால், தனக்கு எதிராக விமர்சனங்களை முன்வைத்த ஜனாதிபதி மைத்திரிபால குறித்து மஹிந்த கருத்து எதனையும் நேற்றைய கூட்டத்தில் வெளியிடவில்லை.

மஹிந்த தனது உரையில் விடுதலைப்புலிகள் குறித்து கருத்து வெளியிட்டு, இனவாதத்தைக் கக்கினார். அத்துடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் ஒப்பிட்டுக் கடுமையாகச் சாடினார். முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவையும் அவர் மறைமுகமாகச் சாடினார்.

ஆனால், ஜனாதிபதியும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன தனக்கு எதிராக வெளியிட்ட கருத்துக்கு நேற்றைய கூட்டத்தில் பதில் எதனையும் மஹிந்த வழங்கவில்லை.

கடந்த ஜனவரி 8ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் தோற்கடிக்கப்பட்டது போலவே, எதிர்வரும் ஓகஸ்ட் 17ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலிலும் மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் தோற்கடிக்கப்படுவார் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த செவ்வாய்க்கிழமை தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதியின் இந்தக் கருத்துக்கு நேற்றைய கூட்டத்தில் பதில் வழங்குவேன் என்று கடந்த புதன்கிழமை கொழும்பில் ஊடகவியலாளர்களிடம் மஹிந்த கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

---

### 115 ஆசனங்களை

தோல்வியடைவார் எனத் தெரிவித்து வருகின்றார். இத்தகைய நிலையில் சுதந்திரக் கட்சிக்கு வாக்களிப்பதில் எந்தப் பயனும் கிடைக்காது. குழப்பம் நிறைந்துள்ள கட்சிக்கு வாக்களிப்பதற்கு மக்கள் தயாராக இல்லை. நடைபெறப் போகும் நாடாளுமன்றத் தேர்தல் இளைஞர்களின் வாழ்க்கையுடன் தொடர்புடைய தேர்தல். ஆகவே, மஹிந்த ராஜபக்ஷவின் ஊழல் ஆட்சி குறித்து இளைஞர்கள் சிந்திக்கவேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொருளாதாரக் கொள்கை என்பது மிக நீண்டநாள் அபிவிருத்தியைக் கொண்டது. பிரமதர் ரணில் விக்கிரமசிங்க இளைஞர்களுக்கு 10 இலட்சம் வேலைவாய்ப்பை ஏற்படுத்தப் போவதாகத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் வெளிநாட்டு வேலை வாய்ப்பைக் கொண்டு வந்தோம். அதேபோன்று பல்வேறு தொழில் துறைகளை நாங்கள் கொண்டு வந்துள்ளோம்.

மஹிந்தவின் ஆட்சிக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட அபி விருத்திகள் அனைத்தும் கடனை அடிப்படையாகக் கொண்டவை. மத்தள விமான நிலையம், அம்பாந்தோட்ட துறைமுகம் என் பன கடனின் உச்சக் கட்டங்கள்.

எமது ஆட்சியில் முதலீடு களை மேற்கொள்வதற்கு முதலீட்டாளர்கள் விரும்பு கின்றனர். மஹிந்தவின் ஆட்சிக்காலத்தில் நீதித்துறை சுயாதீனமற்றுக் காணப் பட்டது, ஊடக சுதந்திரம் கேள்விக் குறியாகக் காணப் பட்டது. இன்று 19 ஆவது திருத்தச் சட்டத்தைக் கொண்டுவந்து இந்த நாட்டில் ஜனநாயகத்தை ஏற்படுத்தியுள் ளோம்.

புலம்பெயர் தமிழர் அமைப்புகள் மிகவும் சக்திமிக்க அமைப்புகளாகக் காணப் படுகின்றன. கடந்த மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில் புலம்பெயர் தமிழர் அமைப்புகள் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ள பேச்சுகளை நடத்தியிருந்தன. என்றாலும் அதற்கு மஹிந்த அரசு இடமளித்திருக்கவில்லை. கண்டிப்பாக எதிர்காலத்தில் சக்திமிக்க அமைப்பாகக் காணப்படும் புலம்பெயர் தமிழர் அமைப்புகள் இங்கு வந்து முதலிடுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்துவோம்.

ஆகவே, ஒரு சக்திமிக்க அரசை ஏற்படுத்துவதற்கு மக்கள் எம்மை ஆதரிக்கவேண்டும். இன்று நாட்டில் இரண்டு குழுக்கள் காணப்படுகின்றன. ஒன்று சமாதானத்தையும், நீதியையும் நிலைநாட்டும் குழு. மற்றது அநீதியையும், ஊழலையும் ஆதரிக்கும் குழு. இவை குறித்து மக்கள் தெளிவடைந்து தமது வாக்குகளை உரிய வகையில் பயன்படுத்தவேண்டும்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி 115 ஆசனங்களைப் பெற்று பாரிய வெற்றியைப் பெறும் என்பது இன்று தெளிவாகியுள்ளது. அதற்கு மக்கள் ஆணை வழங்கத் தயாராகவுள்ளனர்.

மஹிந்த ராஜபக்ஷவால் 10 வருடத்தில் செய்யமுடியாததை 100 நாள்களில் செய்தோம். எனவே, நாட்டின் எதிர்காலத்தையும், இளைஞர்களது எதிர்காலத்தையும் சிந்தித்து மக்கள் வாக்களிக்க வேண்டும்– என்றார். (த–சி)

### முதலிடம்

டத்தின் வாக்குச் சீட்டே மிக நீள மானதாக அமையும் என்று தேர்தல்கள் திணைக்களம் தெரி வித்துள்ளது.

தேர்தலுக்கான வாக்குச் சீட்டுகளை அச்சிடும் பணிகளில் தேர்தல்கள் திணைக்களம் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. ஏற்கனவே 18 மாவட்டங்களுக்கான வாக்குச் சீட்டுகளின் மாதிரிகள் தயாரிக்கப்பட்டு, ஒப்புநோக்கும் பணிகள்யாவும் முடிந்து அச்சிடு வதற்கு தயார் நிலையில் உள்ளன.

ஏனைய நான்கு மாவட்ட வாக்குச் சீட்டுகளின் ஒப்புநோக்கும் பணிகள் செய்யப்பட வேண்டியுள்ளன. இவை முடிந்த பின்னர், பெரும்பாலும் வாக்குச்சீட்டுகளை அச்சிடும் பணிகள் ஆரம்பிக்கப்படும்.

அதேவேளை, இந்தமுறை தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்திலேயே கூடுதலான வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. 16 அரசியல் கட்சிகளும், 30 சுயேச்சைக் குழுக்களுமான மொத்தம் 46 வேட்புமனுக்கள் போட்டிக்காக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

இதனால், 46 கட்சிகள் மற்றும் குழுக்களின் சின்னங்களை வரிசையாக அச்சிட்டு, அதன் கீழ் விருப்பு இலக்கங்கள் அச்சிடப்பட வேண்டியுள்ளது. இம்முறை மட்டக்களப்பு மாவட்ட வாக்குச்சீட்டு மிக நீளமானதாக இருக்கும் என்றும் தேர்தல் திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (த–5)

### நிறைவேற்ற

நேற்று இடம்பெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முதலாவது தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றியபோதே அவர் இவ் வாறு குறிப்பிட்டார்.

மஹிந்தவுக்கு ரணில் விக்கிரமசிங்கவுடன் போட்டி இல்லை. கடந்த முறையும் போட்டியாக இருக்கவில்லை. ஆனால், நூற்றுக்கு 85 வீத வாக்குகளை வடக்கு, கிழக்கு புலி ஆதரவாளர்கள் வழங்கினர். மேற் குலக நாடுகளில் பணத்தைப் பதுக்கிவைத்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வாக்குகளைப் பெற்றுத்தான் கடந்த முறை அவர்கள் நியமிக்கப்பட்டனர். மஹிந்த தோற்கவில்லை. சூழ்ச்சியின் பிரதிபலன்தான் இது என்று நாம் தெளிவாகக் கூறவேண்டும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 9 லட்சம் வாக்குகள் அன்னம் சின்னத்திற்கு வழங்கப்பட்டன. வெற்றிலை சின்னத்துக்கு 3 லட்சம் வாக்குகளும் கிடைத்தன. மஹிந்தவை நாம் தோற்கடிக்க வில்லை. ஆனால், தற்போது நடை பெறவுள்ளது பொதுத் தேர்தல். இதில் மாவட்ட மட்டத்தில்தான் எம்.பிக்கள் தெரிவு செய்யப்படுவர். அநுராதபுரத்தில் 7 ஆசனங்களைக் கைப்பற்றுவோம். இந்த வெற்றியை ஏனைய மாகாணங் களுக்கும் கொண்டுசெல்வோம். ஓகஸ்ட் 17ஆம் திகதி மஹிந்த ராஜ பக்ஷ நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக ஸ்ரீ மகாபோதியின் ஆசீர்வாதம் கிடைக்கவேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்– என்றார். (த–சி)

### புலிப் புராண

கள் நியமிக்கப்பட்டனர். மஹிந்த தோற்கவில்லை. சூழ்ச்சியின் பிரதிபலன்தான் இது என்று நாம் தெளிவாகக் கூறவேண்டும்.'– என்றார்.

**சரத் என் சில்வா**

ரணில் விக்கிரமசிங்க புலிகளிடம் மண்டியிட்டு என்ன செய்தார்? சமாதான ஒப்பந்தத்தினூடாக பிரபாகரன் பலமடைந்தார். அவரது பங்கர்கள் அப்படியே இருந்தன. புலிகளின் தொடர்பாடல் மத்திய நிலையமாக சம்பூரில் இரு கோபுரங்களை நோர்வேயின் நிதி உதவியுடன் ரணில் அமைத்துக் கொடுத்தார். இதனூடாக எமது இராணுவத்தினர் என்ன செய்கின்றார்கள் என்பதை புலிகளால் அறிந்து கொள்ளக்கூடியதாக இருந்தது.'– என்றார்.

விமல் வீரவன்ஸவும் புலிகள் தொடர்பில் கருத்து வெளியிட்டதுடன், நாட்டில் ஏற்பட்டிருந்த பாதுகாப்பற்ற நிலைமை, புலிகளால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் என்பன குறித்தும் கருத்து வெளியிட்டிருந்தார்.

இதேவேளை, உரையாற்றிய ஏனையோர்களும் மஹிந்த ராஜ பக்ஷ போரை முடிவுக்குக் கொண்டு வந்ததை சுட்டிக்காட்டி கருத்து வெளியிட்டமையும் குறிப்பிடத்தக்கது. (த–சி)

### மைத்திரி

பிரிய தடை விதித்துள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதி ராக மைத்திரிபால சிறிசேன வெளியிட்ட கருத்துக்களை அரச தொலைக்காட்சிகள் திரும்பத் திரும்ப ஒளிபரப்பி வருவ தாகவும், அது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கும், அதன் வேட்பாளர்களுக்கும் அநீதியாக இருப்பதாகவும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவர்கள் தேர்தல் ஆணையா ளரை சந்தித்து முறையிட்டிருந் தனர்.

இதையடுத்தே, தேர்தல் ஆணையாளர், மைத்திரிபால சிறிசேனவின் உரையை திரும்பத் திரும்ப ஒளிபரப்பக் கூடாது என்று இலத்திரனியல் ஊடகங்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.

தேர்தலின்போது, எந்தவொரு வேட்பாளரையோ, அரசியல் கட்சியையோ ஊக்குவிக்கும் வகையில், இன்னொரு கட்சியை சாடும் வகையில் வெளியிடப்பட்ட எந்தவொரு உரை அல்லது அறிக்கையையும் திரும்பத் திரும்ப ஒளிபரப்புவது அல்லது ஒலிபரப்புவது சட்டவிரோ தமானது என்றும் தேர்தல் திணைக்களம் சுட்டிக் காட்டியுள்ளது. (த–5)

### சுவரொட்டிகளை

ஸார் நேற்றுமுன்தினம் கைப் பற்றியுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸாரால் யாழ். நீதிவான் நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. கைப்பற்றப்பட்ட சுவரொட்டிகளை அழிக்குமாறு பொலிஸாருக்கு நீதிவான் பெ. சிவகுமார் உத்தரவிட்டார்.

இதேவேளை, யாழ். நகரப் பகுதியில் தேர்தல் விதிமுறை களை மீறி ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டிகளை அகற்றும் பணியில் பொலிஸார் நேற்று ஈடுபட்டிருந்தமையை அவதா னிக்க முடிந்தது. (த–103)

### வலி.வடக்கின்

கத்தில் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு மீள்குடியேற்ற அமைச் சின் செயலாளர் தலைமையில் அரச அதிபர், பிரதேச செய லாளர்கள் கலந்து கொள்ளும் கூட்டம் இடம் பெறவுள்ளது.

குறித்த கூட்டம் முடிவடைந்த பின்னர் பலாலி இராணுவத் தலைமையகத்தில் பிற்பகல் 3 மணிக்கு கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தலைமையிலேயே மேற்படி கலந்துரையாடல் நடைபெறவுள்ளது. இந்தக் கலந்துரையாடலில், மீள்குடியேற்ற அமைச்சின் செய லாளர், அரச அதிபர், பிரதேச செய லாளர்கள் கலந்து கொள்ளவுள் ளனர்.

இதேவேளை, கடந்த மாத இறுதியில் மீள்குடியேற்ற அமைச்சர், விடுவிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டிருந்தார். இதன் போது, விடுவிக்கப்பட்ட பகுதிகளில் மக்கள் பாவனைக்கு இன்னமும் விடுவிக்கப்படாத பகுதிகள் குறித்து சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. அவ்வாறு சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலை மையில் கடந்த 3 ஆம் திகதி இடம்பெற்ற கலந்துரையாடலில் ஆராயப்பட்டிருந்தது.

இவ்வாறானதொரு பின்னணியிலேயே, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் யாழ்ப்பாணத்துக்கு இன்று பயணம் மேற்கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது. (த–5)

### வடக்கு

இரத்த வெள்ளத்தை நிறுத்தினேன். இந்த கிராமபுறங்களில் எவ்வாறான தொரு நிலை இருந்தது. வடக்கிலுள்ள பிள்ளைகளுக்கு கடந்த காலத்தில் ரயில் ஒன்றை வரையத் தெரியாது. போர் டாங்கிகளை தொடர்ச்சியாக அடுக்கி வைத்து இதுதான் ரயில் என்று ஆசிரியர்கள் காட்டினார்கள். முல்லைத்தீவை படத்தில்தான் இங்குள்ள வர்கள் பார்த்தனர். இன்று வடக்கிற்கு ரயில் சேவையை வழங்கியுள்ளோம். இன்னும் இருந்திருந்தால், அதிவேக நெடுஞ்சாலையையும் அமைத்திருப்போம்.

இன்று வடக்கில் குற்றச் செயல்கள் அதிகரித்துள்ளன. பெண்கள் வீதியில் இறங்கிச் செல்ல முடியாத நிலைமை உள்ளது. புலிகள் இருந்திருந்தால் இவ்வாறான நிலை உருவாகியிருக்காது என்று சிலர் கூறுகின்றனர். வடக்கிற்கு இப்போது செல்ல முடியுமா? முன்னர் ஆயிரக்கணக்கில் பஸ்கள் சென்றன. ரயிலில் சென்றனர், பஸ்களில் சென்றனர். இந்த 6 மாதத்தில் செல்கின்றனரா? இல்லை. குறைந்துள்ளது. இன்று வடக்கு, கிழக்குக்கு செல்ல எவரும் அச்சப்படுகின்றனர். புலிகள் உருவான போது இவ்வாறானதொரு நிலைமைதான் அங்கிருந்தது. இதனூடாக நாட்டைப் பிரிக்கப் பார்க்கின்றார்களா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது. இவை குறித்து சிந்திக்க வேண்டும்–என்றார். (த–சி)

### வாய்த் தர்க்கம்

கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலைக்கு எடுத்துச் சென்ற போதும் அவர் இடை வழியில் உயிரிழந்துவிட்டார்.

இது தொடர்பில் ஒருவரைக் கைது செய்துள்ள கிளிநொச் சிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (த–101)

### தேர்தல்

இவர்களை நேற்று வவுனியா நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு அவர்களை தலா 25ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் விடுதலை செய்யுமாறு நீதிவான் உத்தரவிட்டார். (த–402)


# மஹிந்தவுக்கு பாதுகாப்பை குறைக்க முடியா

## தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 18

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த இம் முறை பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார் பில் குருநாகல் மாவட்டத்தில் போட் டியிடுகின்றார். இந்த நிலையில், அவரின் பாதுகாப்பைக் குறைக்க முடியாது.

–இவ்வாறு தேர்தல்கள் ஆணையா ளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித் துள்ளார்.



முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவின் பாதுகாப்பைக் குறைப்பதற்கு சட் டத்தில் இடமில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடை பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

எந்வொரு வேட்பாளருக்கும் வழங் கப்பட்டுள்ள பாதுகாப்பைக் குறைப் பதற்கு தமக்கு அதிகாரமில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சபாநாயகர், அமைச்சரவை அமைச் சர்கள், பிரதி அமைச்சர்கள் உள் ளிட்டவர்களுக்கு அரசியல் சாசனத் தின் அடிப்படையில் பாதுகாப்பு வழங் கப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமை வாக முன்னாள் அமைச்சர்களுக்கு பாதுகாப்பை வாபஸ் பெற்றுக்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளதாகக் கூறி யுள்ளார்.

அச்றுசுத்தல் காணப்படும் வேட்பாளர் களுக்கு கூடுதல் பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த)

## விலகினார் மேர்வின்

கொழும்பு, ஜூலை 18

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் களனித் தொகுதி அமைப்பாள ரான முன்னாள் அமைச்சர் மேர் வின் சில்வா அப்பதவியில் இருந் தும் விலகியுள்ளார்.

இந்த முறைப் பொதுத் தேர்த லில் போட்டியிடுவதற்கு தமக்கு வேட்புமனு வழங்கப்படாமை மற்றும் ராஜபக்ஷக்களின் சதிக் குள் சிறிலங்கா சுதந்திரக் கட்சி சிக்கிக் கொண்டுள்ளமை, அந் தக் கட்சியால் தமக்கு அநீதிகள் இழைக்கப்பட்டுள்ளமை ஆகிய காரணங்களால் களனி அமைப் பாளர் பதவியில் இருந்தும் தாம் விலகுவதாக மேர்வின் சில்வா தனது கடிதத்தில் குறிப்பிட்டுள் ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பாதுகாத்துக் கொள்ளும் ஆற் றல் கட்சியின் இன்றைய தலை வரான ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவுக்கும், கட்சியை நேசிக் கும் கட்சிக்காரர்களுக்கும் மாத் திரமே உள்ளது எனவும் மேர் வின் சில்வா குறிப்பிட்டுள்ளார்.

ராஜபக்ஷாக்கள் மற்றும் பல் வேறு கட்சிகளிலுமுள்ள சதிகா ரர்களிடமிருந்து சிறிலங்கா சுதந்திரக் கட்சி விடுதலையாகும் தினத்தில் மீளவும் கட்சிக்காகச் சேவையாற்றுவதற்கு தாம் வரு வதாகவும் மேர்வின் சில்வா வின் அந்தக் கடிதத்தில் குறிப் பிடப்பட்டுள்ளது. (த–22)

# அடித்தும் உயிர் பிரியாத பாம்பு மஹிந்த

## நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணி தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 18

எதிர்வரும் பொதுத் தேர்தலுக்குப் பின்னரும் அனைத்துக் கட்சிகளும் இணைந்து நல்லாட்சியை ஏற் படுத்த வேண்டும் என்று நல்லாட் சிக்கான ஐக்கிய தேசிய முன்னணி அழைப்பு விடுத்துள்ளது.

பாம்பின் தலையை நசுக்குவதால் அது இறந்து விடாது. அதன் உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கும். அதே போன்றுதான் இன்று மஹிந்தவின் நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்று அந்த முன்னணியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் சம்பிக்க ரண வக்க தெரிவித்தார். எனவே தான் அரசில் இருந்து மஹிந்தவைத் துடைத் தெறிய வேண்டும் என்றும் அவர் குறிப்பிட் டார்.

பத்தரமுல்லையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில உரை யாற்றிய அவர் இவ்வாறு கூறினார். அவர் அங்கு தொடர்ந்தும் உரை யாற்றுகையில்,

எதிர்வரும் பொதுத் தேர்தலில் நல் லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன் னணி பெரும்பான்மைப் பலத்தை பெற்று ஆட்சியை அமைப்பது நிச் சயம். ஆனால், பொதுத் தேர்தலுக் குப் பின்னர் அனைத்துக் கட்சிகளும் இணைந்து நல்லாட் சியை அமைப் பது தொடர்பில் ஆராயப்படும். அதற் காக அனைத்துக் கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கின்றோம்.

கடந்த காலங்களில் வறுமையை அரசியலாக்கி சமுர்த்திக் கொடுப் பனவு பெறுவோரை மனிதக் கேட யங்களாக்கியே ஜனாதிபதித் தேர் தலில் பஸில் ராஜபக்ஷவால் மஹிந்த வுக்கு 57 இலட்சம் வாக்குகளைப் பெற்றுக்கொடுக்க முடிந்தது. ஆனால், இம் முறை பொதுத் தேர்தலில் இந்த விளையாட்டுக்கு இடம் இல்லை.

நியாயமான – நீதியான தேர்தலே நடைபெறவுள்ளது. எனவே, மஹிந்த வுக்கும் அவர் ஆதரவு அணிக்கும் இந்தத் தேர்தலில் வெற்றி பெற்றுக் காட்டுமாறு சவால் விடுக்கின்றோம் –என்றார். (த)



கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாக மாணவர்களின் ஏற்பாட்டில் போதைப்பொருள் பாவனை மூலம் ஏற்படும் விளைவுகள் பற்றி பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வீதி நாடகம், நேற்று முன் தினம் வியாழக்கிழமை திருகோணமலை பஸ் நிலையத்துக்கு அருகாமையில் நடைபெற்றது. (த)

## கோப் அறிக்கையை வெளியிட இடைக்காலத் தடை விதிப்பு



கொழும்பு, ஜூலை 18

மத்திய வங்கி முறிகள் விநியோ கம் தொடர்பான கோப் குழு வின் அறிக்கை வெளியீட்டிற்கு எதிராக கொழும்பு மாவட்ட நீதிமன்றம் இடைக்காலத் தடை யுத்தரவொன்றை நேற்று முன் தினம் பிறப்பித்தது. பிரதி நீதி அமைச்சர் சுஜீவ சேன சிங்க வினால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை கருத்திற்கொண்டே இந்தத் தடையுத்தரவு பிறப்பிக் கப்பட்டுள்ளது.

ஜூலை மாதம் 23 ஆம் திகதிவரை இந்த இடைக்காலத் தடையுத்தரவு நடைமுறையில் இருக்கும் என கொழும்பு மாவட்ட நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டார். (த)

# மஹிந்தவின் ஏஜெண்டுகளாகினர் வன்னி முஸ்லிம் வேட்பாளர்கள்

## வவுனியா பரப்புரைக் கூட்டத்தில் ரிஷாத் பதியுதீன்

வவுனியா, ஜூலை, 18

நடைபெறவுள்ள பொதுத் தேர்த லில் மஹிந்த ராஜபக்ஷ ஐக்கிய மக் கள் சுதந்திர முன்னணியில் போட்டி யிடுவதுடன் அவரது ஏஜெண்டுக ளாக வன்னியில் சில முஸ்லிம்கள் வேட்பாளர்கள் நிறுத்தப்பட்டுள்ள னர் எனத் தெரிவித்தார் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேசிய தலை வரும், கைத்தொழில் மற்றும் வணி கத்துறை அமைச்சருமான ரிஷாத் பதியுதீன்.

வவுனியா சாளம்பைக்குளம் மற் றும் தலைமன்னார் பியர் கிராமங் களில் நேற்றுமுன்தினம் வியாழக் கிழமை நடைபெற்ற மக்கள் சந்திப் பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அமைச்சரின் வவுனியா மாவட்ட இணைப்பு செயலாளர் முத்து முஹம்மத் தலைமையில் இடம்பெற்ற இந்த சந்திப்பில் அவர் மேலும் கருத்துரைக்கையில்,

இந்த நாட்டில் ஆட்சி மாற்றத்தை மக்கள் கொண்டுவருவதற்கு பிர தான காரணியாக இனவாதிகளின் ஆட்சி இருந்தது. அப்போதைய அர சுக்குள் இருந்து கொண்டு எமது மக் களின் பாதுகாப்பு தொடர்பில் நாம் ஜனாதிபதியாக இருந்த மஹிந்த விடம் வேண்டினோம். ஆனால் அது எவ்வித பலனுமளிக்கவில்லை. ஆகவே தான் அவரை ஆட்சியில் இருந்து அகற்ற வேண்டிய தேவை ஏற்பட்டது.

இந்த நாடாளுமன்றத் தேர்தலை நாம் இலகுவாக நோக்கிவிட முடியாது. மஹிந்தவின் பண பலத்துடன் இணைந் திருக்கின்றவர்களும், இனவாத அர சியல் பேசும் கட்சிகளும், குழுக் களும் ஒன்று சேர்ந்து முன்னெடுக் கும் பரப்புரையாகும். வன்னி மாவட் டத்தில் போட்டியிடும் கட்சிகளை சிலர் இரண்டாக மட்டும் பிரித்துள் ளனர். ஒன்று ரிஷாத் அணி மற்றது ரிஷாத்துக்கு எதிரான அணி ஒன்று. எனக்கு எதிரான அணியில் இருப் பவர்கள் அன்று பொதுபலசேனாவை உருவாக்கி முஸ்லிம் மற்றும் தமிழ் மக்களுக்கு அநியாயங்களைச் செய் தவர்கள். இவர்களது நோக்கம் எனது



மக்களின் அரசியல் பணிக்குத் தடையேற்படுத்தி இந்த மக்களை அடிமைகளாகக் கைக்கட்டி அவர் களிடம் சென்று கையேந்தும் நிலை யினை உருவாக்க முயற்சிப்பவர் கள் என்பதை மறந்தவிட வேண் டாம்.

என்னை பொறுத்த வரை இந்தச் சக்தி களுக்கு நாம் அஞ்சுபவர்கள் அல்ல. மக்களின் தூய்மையான வாக்குப் பலமும் துணிவும் இருக்கின்றது. மக்கள் எமக்கு வழங்கிய ஆணை யினால் தான் கடந்த பல வருடங் களாக இந்த மக்களுக்கு பணியாற்ற முடிந்தது. மக்கள் பெற்றுக்கொள் ளும் அபிவிருத்திகள் மற்றும் வளர்ச் சிகளைத் தாங்கிக்கொள்ள முடி யாத இந்த நபர்கள் முஸ்லிம்களை யார் அழிக்க துடித்தார்களோ அவர் களின் வாகனத்தில் ஏறிக்கொண்டு பயணம் செய்கின்றனர். சந்தர்ப்ப வாத அரசியல்களால் ஒரு போதும் மக்களுக்கு நன்மையாற்ற முடி யாது.

இந்த நாட்டில் உள்ள 20 இலட்சம் முஸ்லிம்களும் இன்று அச்சமற்ற சூழலில் வாழும் நிலையைக் காண கின்றோம். அதனை தொடர்ந்து தக்கவைத்துக்கொள்ள தேவையான அடித்தளத்தை இடுகின்ற ஒரு தேர் தலாக இந்தப் பொதுத் தேர்தல் அமைய வுள்ளது. இதனை நாங்கள் சரிவர பயன்படுத்தாமல் போவோமெனில் எதிர்வருகின்ற 5 வருடங்கள் எம் மால் எதிர்பார்க்கும் அபிவிருத்தி யின் இலக்கினை அடைந்துகொள்ள முடியாது–என்றார். (த–10)

## இன்றைய மோதல்கள்

மன்னார் தாழ்வுபாடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் ரி-20 தொடரின் ஆட்டங்கள் மன்னார் பொதுவிளையாட்டு மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.
இந்தத்தொடரில் இன்று சனிக்கிழமை காலை 9மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அல்பதா அணியை எதிர்த்து கிறின் பீல்ட் அணி மோதவுள்ளது. பி.ப. 2 மணிக்கு இடம்பெறும் மற்றொரு ஆட்டத்தில் ஸ்ரார் ஈகிள்ஸ் அணியை எதிர்த்து இந்து முன்னணி அணி மோதவுள்ளது. (ம-23)

# சித்தி விநாயகர் கல்லூரியை வீழ்த்தியது இந்து முன்னணி

யாழ்ப்பாணம், ஜூலை 18
மன்னார் தாழ்வுபாடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் ரி-20 தொடரில்நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் இந்து முன்னணி அணி 5 இலக்குகளால் வெற்றியை பதிவு செய்தது.
மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் பிற்பகல் 2 மணிக்கு இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் சித்தி விநாயகர் கல்லூரி அணியை எதிர்த்து இந்து முன்னணி அணி மோதிக் கொண்டது. முதலில் துடுப்பெடுத்தாடிய சித்தி விநாயகர் கல்லூரி அணியினர் 20பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 130 ஓட்டங்களைப் பெற்றனர். அதிகபட்சமாக கணேஸ்வரன் 26 ஓட்டங்களையும், புவநேசன் 29 ஓட்டங்களையும் கரிபவன் 15 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் இந்து முன்னணி அணி சார்பில் வசந்தன் 3 இலக்குகளையும் றஞ்சித் 2 இலக்குகளையும், போல் ஓர் இலக்கினையும் கைப்பற்றினர்.
131 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இந்து முன்னனி அணியினர் 18.5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 133 ஓட்டங்களைப் பெற்றனர். அதிகபட்சமாக அஜந்தன் 47ஓட்டங்களையும், றஞ்சித் 35 ஓட்டங்களையும், சுகந்தன் 19 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் சித்திவிநாயகர் கல்லூரி சார்பாக கரிபவன் மற்றும் ஜோயல் இருவரும் தலா 2 இலக்குகளையும் சியாந்தன் ஓர் இலக்கினையும் வீழ்த்தினர். (ம-23)

## பாடும்மீன், றோயல் வெற்றி

யாழ்ப்பாணம், ஜூலை 18
வளர்மதி சனசமூக நிலையத்தின் 50ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வளர்மதி விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் அணிக்கு 7பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான் உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் சில நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கழக மைதானத்தில் இடம்பெற்றது.
இதில் முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் அணியை எதிர்த்து ஞானமுருகன் அணி மோதிக்கொண்டது. இதில் குருநகர் பாடும்மீன் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து குப்பிளான் விக்கினேஸ்வரா அணி மோதிக்கொண்டது. இதில் ஊரெழு றோயல் அணி 5:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

# சென்.யூட் எதிர் சுப்பர்றாங் இறுதியில் மோதல்





யாழ்ப்பாணம், ஜூலை 18
முல்லைத்தீவு உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் இரணைப்பாலை சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் அமரர் யோன் கில்லறி ஞாபகார்த்தமாக நடத்தும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் நாளை ஞாயிறுக்கிழமை கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.
மாலை 4.30 மணிக்கு இடம் பெறவுள்ள இந்த இறுதியாட்டத்தில் முல்லைத்தீவு சென்.யூட் அணியை எதிர்த்து சுப்பர்றாங் அணி மோதவுள்ளது. (ம-23)

## நடுவர்களுக்கான செயலமர்வு இன்று

கரணவாய், ஜூலை 18
யாழ். மாவட்டத்திலுள்ள உதைபந்தாட்ட நடுவர்களுக்கான இரண்டு நாள் பயிற்சி செயலமர்வு இன்றும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் காலை 8மணி முதல் வதிரி தேவரையாளி இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.
இந்தச் செயலமர்வில் இலங்கை உதைபந்தாட்ட நடுவர் சம்மேளனத்தின் பணிப்பாளர் யாப்பா தேசிய அணிப்பயிற்றுவிப்பாளர் எஸ்.வடிவேல் ஆகியோர் கலந்துகொண்டு பயிற்சிகளை வழங்கவுள்ளனர்.
குறித்த் செயலமர்வில் யாழ். மாவட்டத்திலுள்ள பருத்தித்துறை, வடமராட்சி, வலிகாம் மற்றும் யாழ் ஆகிய லீக்குகளில் இருந்து தலா 15 உதைபந்தாட்ட நடுவர்கள் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-108)

## ஸ்ரீ காளி அம்பாள் அபார வெற்றி

யாழ்ப்பாணம், ஜூலை 18
வடமாகாண சபையின் கல்வி, விளையாட்டு, பண்பாட்டலுவல்கள் மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் நிதிப்பங்களிப்புடன் யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கத்தினால் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்தப்படும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.
இந்தத்தொடரில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் தாவடி ஸ்ரீ காளி அம்பாள் 'ஏ' அணியை எதிர்த்து அளவெட்டி பாரதி அணி மோதிக் கொண்டது. இதில் தாவடி ஸ்ரீ காளி அம்பாள் 'ஏ' அணி 8:0 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது. (ம-23)

## பாடசாலைகளுக்கிடையிலான குத்துச் சண்டை தமிழ் மாணவனுக்கு வெண்கலம்

யாழ்ப்பாணம், ஜூலை 18
இலங்கை பாடசாலைகளின் குத் துச் சண்டை சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட குத்துச் சண்டைப் போட்டியில் முத்ஐயன்கட்டு வலது கரை வித்தியாலயத்தை பிரதிநிதித்துவம் செய்து களமிறங்கிய மாணவன் ஜெகதீஸ்வரன் வெண் கலப்பதக்கத்தைக் கைப்பற்றியுள்ளார்.



கடந்த முதலாம் திகதி தொடக்கம் 5ஆம் திகதி வரை கொழும்பு யாசோதா வித்தியாலயத்தில் இடம்பெற்ற குறித்த தொடர்களில் 14வயதுப் பிரிவு ஆண் கள் பிரிவில் (34-35 எடை) கலந்துகொண்டே அவர் இந்த வெண்கலப் பதக்கத்தைக் கைப்பற்றியுள்ளார். பதக்கத்தைக் கைப்பற்றி வெற்றியுடன் திரும்பிய ஜெகதீஸ்வரனை முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் பாராட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-23)

## டிறிபேக் கல்லூரி மாணவர்களுக்கு உற்சாக வரவேற்பு

தென்மராட்சி, ஜூலை 18
வவுனியாவில் நடைபெற்ற வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான மாகாணமட்ட தடகளத் தொடரில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்து கலந்துகொண்டு பதக்கங்களைக் கைப்பற்றிய மாணவர்களுக்கு நேற்றுமுன்தினம் பாடசாலை சமூகத்தினால் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டுள்ளது.
17 வயதுப்பிரிவு உயரம் பாய்தல் போட்டியில் வெள்ளிப்பதக்கத்தைக் கைப்பற்றிய கே.ரதீஸ், 21 வயது பிரிவு குண்டெறிதல் போட்டியில் வெண்கலப் பதக்கத்தைக் கைப்பற்றிய ச.உசாந்தன் ஆகிய மாணவர்களே இவ்வாறு கௌரவிக்கப்பட்டவர்களாவர். (ம-9)



## முல்லைத்தீவு பிரதேச செயலகங்களின் இறுதிநாள் நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 18
முல்லைத்தீவு மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான விளையாட்டு விழாவின் இறுதி நாள் நிகழ்வு இன்று சனிக்கிழமை பி.ப. 3மணிக்கு முல்லைத்தீவு-புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.
இன்றைய நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் கலந்து கொள்ளவுள்ள அதேநேரம் சிறப்புவிருந்தினராக வடமாகாண விளையாட்டுத் திணைக்களப் பணிப்பாளர் ராஜாரணசிங்க கலந்து கொள்ளவுள்ளார். (ம-23)

## போராடி வென்றது பாரதி

யாழ்ப்பாணம், ஜூலை 18
வலிகாம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இந்தத்தொடரில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை முதலாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் ஞானகலா அணியை எதிர்த்து சிவகுமாரன் அணி மோதிக்கொண்டது. இதில் ஞானகலா அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.
தொடர்த்து இடம்பெற்ற ஆட்டத்தில் கொற்றாவத்தை பாரதி அணியை எதிர்த்து வல்வை அணி மோதிக் கொண்டது. முடிவில் இரண்டு அணியினரும் தலா ஒரு கோலைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. வெற்றி-தோல்வி காண்பதற்காக வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதைகளை சரியாகப் பயன்படுத்திக்கொண்ட கொற்றாவத்தை பாரதி அணி 9:8 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

# ஆஸி.அபார ஆரம்பம்



இங்கிலாந்து ஆஸ்திரேலியா அணிகளுக்கிடையிலான 5 டெஸ்ட் ஆட்டங்களைக் கொண்ட ஆஷஸ் தொடரின் இரண்டாவது ஆட்டம் தற்பொழுது இங்கிலாந்தின் லோட்ஸ் மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. இந்த ஆட்டத்தின் முதலாம் நாளான நேற்றைய தின முடிவில் ஆஸ்திரேலியா 337–1 என்ற வலுவான நிலையில் உள்ளது.

லோட்ஸ் மைதானத்தில் முதலில் துடுப்பெடுத்தாடும் அணி தோல்வியடைந்த வரலாறு கடந்த பத்து வருடத்தில் இல்லை. இதனால் நாணயச்சுழற்சியில் வெற்றிபெறும் அணி முதலில் துடுப்பெடுத்தாடும் வாய்ப்புக்களே அதிகம். நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரே லியா எதிர்பார்த்ததைப்போல் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானிக்க களத்தில் றோயேர்ஸ் மற்றும் வோர்ணர். வார்த்தைகளால் அடுக்கிக் கொண்டு சொல்லுமளவுக்கு இணைப்பாட்டம் சிறப்பாக அமையாவிட்டாலும் ஏனைய வீரர்களுக்கு பதட்டமில்லாத இன்னிங்ஸை அமைக்கக் கூடிய வகையில் இருவரினதும் ஆட்டம் அமைந்தது. வழக்கம் போல் ஒருநாள் பாணியில் வோர்ணர். ஆமை வேகத்தில் றொயேர்ஸ். இணைப்பாட்டமாக 78 ஓட்டங்கள் பகிரப்பட்டிருந்த வேளையில் 38 [illegible]டங்களுடன் ஆட்டமிழந்தார் வோர்ணர். றோயேர்ஸிடன் இணைந்தார் சிமித். புரோட்டினதும் அண்டர்சனினதும் பந்துவீச்சில் ஆரம்பத்தில் சிறிது தடுமாறினாலும் பந்துகள் பழக்கப்பட பழக்கப்பட இணைப்பாட்டம் வலுப்பெற்றுக்கொண்டு சென்றது. ஆளுக்கொரு அரைச்சதமும் கடந்துவிட்டார்கள் இலக்குகள் மட்டும் விழுந்தபாடில்லை. வேகம், சுழல், இடைப்பட்ட வேகம், உட்திரும்பல், வெளித்திரும்பல் என்று இருக்கும் அத்தனை பந்துவீச்சு முறைமைகளையும் பரிசீலித்து பார்த்துவிட்டார் குக் எந்த முயற்சியும் எடுபட்டபாடில்லை. ஆளுக்கொரு சதமும் கடந்தாயிற்று இரண்டாவது இலக்கு என்ற பேச்சுக்கே இடமில்லை என்பது போல் தெரிந்தது றோயேர்ஸ் மற்றும் சிமித்தின் இணைப்பாட்டம். மொத்தத்தில் முதலாம் நாள் முடிவில் ஆஸ்திரேலியா 337–1. சிமித் 129 ஓட்டங்களுடனும் றோயேர்ஸ் 158 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது களத்தில் உள்ளனர்.

பந்துவீச்சில் இங்கிலாந்து சார்பாக மொயீன் அலி ஒரு இலக்கைக் கைப்பற்றினார். (ம)

# ஹபீஸுக்குத் தடை



முறையற்ற பந்துவீச்சு தொடர்பாக இரண்டாவது முறையாக குற்றம் சாட்டப்பட்டதனால் பாகிஸ்தானின் சகலதுறை வீரர் ஹபீஸ் பந்துவீசுவதுக்கு ஒரு ஆண்டுகாலத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஒரு பந்துவீச்சாளர் மீது இரண்டு வருடத்துக்குள் இரண்டு தடவைகள் பந்தை எறிவதாக சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையினது நடுவர்களால் குற்றஞ்சாட்டப்பட்டால் அவர் பந்துவீசுவதுக்கு ஒருவருடத்தடை தானாகவே அமுலுக்கு வரும். இந்த பின்னணியிலேயே பாகிஸ்தான் ஹபீஸிற்கு ஒரு வருடத்தடை விதிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆறு மாத காலப் பகுதியில் இரண்டு தடவைகள் ஹபீஸ் மீது முறைப்பாடு தெரிவிக்கப்பட்டு விட்டது. இலங்கைக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் ஆட்டத்தில் ஹபீஸ் மீது மீண்டும் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டதனால் ஹபீஸ் பந்து வீசுவதுக்கு ஒருவருடத் தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆனால் துடுப்பாட்ட வீரராக ஹபீஸ் களமி றங்க எந்தத் தடையும் இல்லை. (ம)

# செரீனாவுக்கு ஆதரவாக நவரத்திலோவா

செரீனாவுக்கு எதிராக முன்வைக்கப்படும் பாலின குற்றச்சாட்டை எதிர்த்து செரீனாவுக்கு ஆதரவாக குரல்கொடுத்துள்ளார் முன்னாள் அமெரிக்க ரென்னிஸ் வீராங்கனை மார்ட்டினா நவரத்திலோவா.

சர்வதேச ரென்னிஸ் உலகில் அசைக்க முடியாத சக்தியாக அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் விளங்கி வருகிறார். 33 வயதை எட்டிய போதிலும் அவரது செயற்பாடுகளும் முதலிடமும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. இந்த ஆண்டில் ஆஸ்திரேலிய தொடர், பிரான்ஸ் தொடர், விம்பிள்டன் தொடர் ஆகிய மூன்று பிரதானமான தொடர் களையும் கைப்பற்றியுள்ளார். இவ்வாறு தவிர்க்க முடியாத சக்தியாக விளங்கிவரும் செரீனாமீது அவ்வப்போது பாலின ரீதியான விமர்சனங்கள் கிளம்புவதுண்டு. அதாவது உடலமைப்பை வைத்து, அவர் ஆண்தன்மை கொண்டவர் போன்று காணப்படுகிறார் என்பதுதான் அந்த விமர்சனம். இந்த நிலையில் செரீனாவுக்கு ஆதரவாக முன்னாள் ஜாம்பவான் அமெரிக்காவின் மார்ட்டினா நவரத்திலோவா குரல் கொடுத்துள்ளார்.

செரீனாவுக்கு ஆதரவாக நவரத்திலோவா தெரிவித்ததாவது செரீனா ஆண்மகன் போலவா தெரிகிறார்? நான் அப்படி நினைக்கவில்லை. அவர் கொஞ்சம் எடுப்பான உடற்கட்டு கொண்ட ஒரு வீராங்கனை. டென்னிஸ் களத்தில் மிகவும் வலிமையானவராக இருப்பதால், அவரது புஜபலம் பிரச்சினையாக்கப்படுவதாக தோன்றுகிறது. மற்றவர்களை காட்டிலும் செரீனா பந்தை மிக வலுவாக அடித்து திருப்புகிறார். அதற்கு நிறைய திறமை தேவை. அது செரீனாவிடம் இருக்கிறது. செரினாவை நேருக்குநேர் எதிர்கொள்ள இயலாதவர்கள் இவ்வாறு முதுகுக்குப் பின்னால் நின்று கருத்துத் தெரிவிக்கிறார்கள். (ம)




# கலைமகள் வி.கழகத் தொடரின் முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜுலை 18

வேரவில் கலைமகள் விளையாட்டுக்கழகம் மறைந்த வீரர்களின் நினைவாக வடமாகாண ரீதியாக நடத்தும் உதைபந்தாட்டத் தொட[illegible] ஆட்டங்கள் நேற்று வெள்ளிக்கிழமை முதல் ஆரம்பமாகி குறித்த கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

குறித்த தொடரில் நேற்றையதினம் நடைபெற்ற ஆட்டங்களில் செந்தாரகை 'பி' அணிக்கும் வலைப்பாடு ஜெகமீட்பர் 'பி' அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் வலைப்பாடு ஜெகமீட்பர் 'பி' அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. தொடர்ந்து நடைபெற்ற சங்கானை யுத் அணிக்கும் வேரவில் கலைமகள் அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் சங்கானை யுத் அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. வலைப்பாடு சென்.ஆன்ஸ் அணியும் மூன்றாம்பிட்டி சென்.அன்ரனிஸ் அணியும் மோதிய ஆட்டத்தின் முடிவு சமநிலையாக அமைந்தது. இதனால் வெற்றி தோல்விக்காக வழங்கப்பட்ட சமநிலைத்தகர்பு உதைகளை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திய சென்.ஆன்ஸ் அணி 5:3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. முழங்காவில் விநாயகர் அணிக்கும் தேவன்பிட்டிசென்.சேவியர் 'பி' அணிக்கும் இடையிலான ஆட்டமும் சமநிலையில் முடிவடைந்தது. சமநிலைத்தகர்ப்பு உதைகளைக் கச்சிதமாகப் பயன்படுத்திய தேவன்பிட்டி சென்.சேவியர் 'பி' அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. பள்ளிமுனை சென்.லூட்ஸ் 'பி' அணியை எதிர்த்து பூநகரி இளந்தளிர் அணி மோதிய ஆட்டத்தில் பள்ளிமுனை சென்.லூட்ஸ் 'பி' அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம–23)

# வரலாற்றை மாற்றியதன் பின்னரே ஓய்வு



ஆஸ்திரேலியா மற்றும் இங்கிலாந்து மண்ணில் டெஸ்ட் தொடரை கைப்பற்றும் வரையில் ஓய்வுபெறமாட்டேன் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் மூத்த வீரரான யூனிஸ் கான் தெரிவித்துள்ளார்.

அண்மையில் தனது 100ஆவது டெஸ்ட்டில் விளையாடிய காரணத்தினால் பாகிஸ்தானில் யுனிஸ் கானுக்கு பாராட்டுவிழா நடத்தப்பட்டது. இந்த நிகழ்வில் உரையாற்றுகையிலேயே யுனிஸ்கான் இவ்வாறு தெரிவித்துள்ளார். தனது ஓய்வு தொடர்பாக யுனிஸ்கான் தெரி வித்ததாவது:–

ஆஸ்திரேலியாவிலும் இங்கிலாந்திலும் வைத்து பாகிஸ்தான் டெஸ்ட் தொடர்களைக் கைப்பற்றியதே இல்லை. எனவே இந்த நிலை மையை மாற்றி ஆஸ்திரேலியாவிலும் இங்கிலாந்திலும் தொடர்களைக் கைப்பற்றியதன் பின்னரும் ஆஸியில் நான் சதமடித்ததில்லை என்ற அவப்பெயரை நீக்கிய பின்னருமே ஓய்வினைப் பற்றி சிந்திப்பேன். என்றார். (ம)

# வளர்மதி வி.க.கரப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டங்கள் இன்று

யாழ்ப்பாணம், ஜுலை 18

வளர்மதி சனசமூக நிலையத்தின் 50ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வளர்மதி விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடந்தும் கரப்பந்தாட்டத் தொடர்களின் இறுதியாட்டங்கள் இன்று சனிக்கிழமை கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளன.

இதில் 'எ' பிரிவு அணிகளுக்கான இறுதியாட்டத்தில் ஆவரங் கால் இந்து இளைஞர் அணியை எதிர்த்து ஆவரங்கால் மத்திய அணியும், 'பி' பிரிவு அணிகளுக்கான இறுதியாட்டத்தில் அச்சுவேலி தோப்பு வாலிபர் அணியை எதிர்த்து நாயன் மார்கட்டு பாரதி அணியும் மோதவுள்ளன.

குறித்த இறுதியாட்டங்களுக்கு பிரதம விருந்தினாரக உயதன் பத்திரிகையின் அதிபரும் யாழ். மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஈ.சரவணபவன் கலந்து கொள்ளவுள்ளர். சிறப்பு விருந்தினர்களாக கைதடி நுணாவில் அ.த.க.பாடசாலை அதிபர் ஆர்.தங்கவேலுவும், கிளிநொச்சி விளையாட்டுத்துறை இணைப் பாளர் எல்.அனுரகாந்தனும், கௌரவ விருந்தினர்களாக மட்டுவில் தெற்கு கிராம அலுவலர் க.வாமதேவனும், தென்மராட்சி பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகஸ்தர் ரி.ஆர்.நித்திலநாயகமும், கைதடி ஸ்ரீ முத்து மாரி அம்மன் மரத் தொழிற்சாலை உரிமையாளர் செ.பஞ்சலிங்கமும் கலந்து கொள்ளவுள்ளனர்.(ம–23)

# ராஜஸ்தானின் நிர்வாகத்தின் மீது ஸ்ரீவ் சிமித் அதிருப்தி

ஐ.பி.எல். சூதாட்டம் தொடர்பாக ராஜஸ்தான் அணிக்கு இரண்டு ஆண்டுகால தடை விதிக்கப்பட்ட தில் ராஜஸ்தானின் அணித்தலை வரான சிமித் தனது ஆதங்கத்தைத் தெரிவித்துள்ளார்.

ராஜஸ்தானின் தடை தொடர்பாக சிமித் தெரிவித்ததாவது ஐ.பி.எல். தொடரின் முதலாவது கிண்ணத்தைக் கைப்பற்றிய அணி. மிகவும் திறமையான அணி. அந்த அணியுடன் அனுபவித்து விளையாடினேன். ஆனால் இவ்வாறான ஒரு சிக்கலில்சிக்கிக்கொள்ளும் என்று எதிர்பார்க்கவில்லை. ராஜஸ்தானின் நிர்வாகிகள் நடத்தை மிகுந்த ஏமாற்றத்தைத் தருகிறது. (ம)

A/L Personal class (2016,2017 Batch)
Biology(உயிரியல்)
Chemistry (இரசாயனவியல்)
Science for technology (தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம்)
(63249) T.P :- 076 654 1292

Sky Computers System
அனைத்து விதமான கணினிகளும்
(Desktop Pc, Laptop)
உடனுக்குடன் திருத்திக் கொடுக்கப்படும்.
Computer, Pendrive, Memory card களில் அழிந்த Fileகள் மீட்டெடுத்தும் தரப்படும்.
TP: 021-222-1417

# முதலாவது ரி-20 ஆட்டத்தில் இந்தியா அபார வெற்றி

இந்தியா சிம்பாப்வே அணிகளுக்கிடையிலான 2 ஆட்டங்களைக் கொண்ட ரி-20 தொடரின் முதலாவது ஆட்டத்தில் இந்திய அணி 54 ஓட்டங்களால் வெற்றியைப் பதிவுசெய்து தொடரில் 1-0 என்ற அடிப்படையில் முன்னிலை வகிக்கிறது.



நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணித்தலைவர் ரஹானே முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானிக்க ஆரம்ப வீரர்களாக களத்தில் ரஹானே மற்றும் முரளி விஜய். முதல் பந்துப்பரிமாற்றத்திலேயெ அதிரடியைத் தொடங்கினார் முரளி விஜய். இலக்குச் சரிவை இல்லாமற் செய்வதற்காக ஒருநாள் பாணியில் ஆடிக்கொண்டிருந் தார் ரஹானே. ரி-20 ஆட்டங் களுக்கு ஏற்ற இணைப்பாட்டம் ஏழு பந்துப் பரிமாற்றங்களில் அணியின் ஓட்டம் 64 ஆக இருந்த பொழுது முரளி விஜய்யின் ஆட்டம் 34 ஓட்டங்களுடன் (19 பந்துகள்) முடிவுக்கு வந்தது. விஜய் யின் இடத்தைத்தான் உத்தப்பாவால் நிரப்ப முடிந்ததே தவிர அவரின் பெறுபேற்றை நிரப்ப முடியவில்லை. ரஹனேயின் பாணியில் உத்தப்பாவும் தொடர் இலக்குகள் விழாமல் தடுக்கப்பட்ட அதேநேரம் ஓட்டங்கள் பெறப்படு வதிலும் ஸ்தம்பிதம் ஏற்பட்டது. நிலைமையை உணர்ந்து அடித் தாட முற்பட்ட ரஹானே ஆட்டமி ழந்து பவிலியனை நோக் கினார். பின்னியும் ஹர் பஜென்னும் பின் வரிசையில் அதிரடி காட்ட முடி வில் இந்தியா 178-5.

120 பந்துகளில் 179 ஓட் டங்க ளைப் பெற்றால் வெற்றி என்ற கடின இலக்கைநோக்கி களமிறங் கிய சிம்பாப்வேக்கு அதன் ஆரம்ப வீரர்களான மச கட்ஷவும் சிப் ஹபாவும் நம்பிக்கையான தொடக் கம் கொடுக்கவே செய்தனர். இலக் குச் சரிவில்லா மல் இணைப் பாட்டம் ஐம்பதை எட்டியது. ஆரம் பம் அசத்தியதே தவிர மத்தி வரிசை அக்ஷர் பட்டேலின் சுழ லில் திணறியது. சுக்கும்புரா 1, எர்வின் 2, கிறி மர் 9, கொன் வேர்ட்டி 10, ரசா 10 என்று சீரான இடை வெளி யில் ஒருவர் பின் ஒரு வராக பவிலியன் நோக்கிப் படையெடுத் தனர். 20 பந்துப் பரிமாற்றங்களின் நிறைவில் சிம்பாப்வே 124 ஓட்டங்களைப் பெற்று 54 ஓட்டங் களால் தோல்வியடைந்தது. ஆட்ட நாயகனாக அக்ஷர் பட்டேல் தெரி வானார்.

நிறம் கொண்ட உதிரத்தின் வலிகண்டு
தமிழ் இளைஞர்களின் பலம் கொண்டு உருவாகியுள்ள சக்தி
ஐக்கிய தேசியக்கட்சியின் மக்கள் நம்பிக்கை வேட்பாளர்
வைத்தியர்
இ. சிவசங்கர் இன்
தேர்தல் அறிமுக உரையும்
கொள்கைப் பிரகடனக் கூட்டமும்



இடம் : யாழ். வீரசிங்கம் மண்டபம்
காலம் : 18.07.2015 (சனி)
நேரம் : பிற்பகல் 3.00 மணி
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன
External Degree
ஆரம்பம் :- 11/07/2015 Saturday 8.00am
பேராதனை பல்கலைக்கழகம் [BA] 1st வருடம்
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்
[Bcom]Part II, Final வகுப்புக்கள் ஆரம்பமாகியுள்ளன
Note :- நீண்ட நாட்களின் பின்னர் யாழ்பல்கலைக்கழகத்தினால் Bcom[1st in Co m] இற்கான பதிவுகள் கோரப்பட்டுள்ளன.
aat [ Sri Lanka]
Foundation, Intermediate, Final
AA1, AA2, AA3
Qualification:- GCE O/L 6 PASSES
MEDIUM – TAMIL & ENGLISH
ஆரம்பம் :- 25 - 07 - 2015 சனிக்கிழமை.
உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.
Further Details:
JAFFNA COLLEGE
UNDERGRADUATE Dept
Contact Tel number :- 0212223382 , 0212229149

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

# மரண அறிவித்தல்



## "சிவநெறிப்புரவலர்"

## இளையதம்பி பரராஜசிங்கம்

(முன்னாள் தலைவர்,போஷகர் - ஈச்சமோட்டை கலட்டிப்புலம் ஸ்ரீ ஞானவைரவர் தேவஸ்தானம், ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் - யாழ். மாநகரசபை, சுகாதாரப் பகுதி) அவர்கள் 16.07.2015 காலமாகிவிட்டார்

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - கண்ணம்மா தம்பதியரின் புதல்வரும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - செல்லம்மா தம்பதியரின் மருமகனும்,காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக் கணவரும், திருமதி மல்லிகா இரட்ணசிங்கத்தின் பாசமிகு சகோதரனும், பத்மநாதன் (நேசர்),சென்னராணி, பங்கஜவல்லி,காலஞ் சென்ற சிவக்குமார் ஆகியோரின் உடன்பிறவா சகோதரரும், ஜெயகுமார் (ஆசிரியர் - யா/புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்),சாந்தகுமார் (கணக்காளர் - SARAH Industries), வசந்தகுமார் (DOHA - QUATAR), உதயகுமார் (SAUDI ARABIA), கௌரிதேவி (பவானி),சுரேஸ்குமார் (CANADA), பிரேம்குமார் (DOHA-QUATAR),சதீஸ்குமார் (CANADA) ஆகியோரின் அன்புத் தந்தையும்,ஜெயசோதி, ரோகிணி, சுலோச்சனா, வசந்தகுமாரி,லோகசிவம் (CDO/PRO - மாநகரசபை - யாழ்ப்பாணம்),சுகுணாவதி, பிரியதர்ஷினி,சுமந்தினி ஆகியோரின் பாசமிகு மாமனும்,மயூரி - இரதீபன்,கஸ்தூரி, அனோஜன், ஆரணி,ஆரபி, அஜந்தன், மீரா, குமணன்,வைஷ்ணவி,காலஞ்சென்ற ஷைணவி மற்றும் கஜனி - சிவாகுகன்,சுஜனி - ஸ்ரீஹரன், ரம்மியா, சுரண்யா, பிரவீன், கீர்த்திகா, கிருஷாந் ஆகியோரின் செல்லப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.07.2015) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 10.00 மணியளவில் தகனக் கிரியைகளுக்காக கொழும்புத்துறை துண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

82/1, செட்டித்தெரு, நல்லூர்.
யாழ்ப்பாணம். தொ.பே. 071 856 2025

(63219) (45.3.7)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.07.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.